

04

பொதுபல சேனா உருவாக்கப்பட்டது எதற்கு?



காந்தியை துகிலுறியும் மோடியின் இஸ்ரேல் விஜயம் 03



முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் இறக்குமதியா உள்நாட்டு உற்பத்தியா? 03


# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 373 • 21 ஜூலை 2017 வெள்ளிக்கிழமை • ஷவ்வால் 1438 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# போதையில் தள்ளாடும் இலங்கை:

## நல்லாட்சியில் இலங்கைக்கு 1579 கிலோ கொக்கேன்

(பி.எம். முஜீபுர் ரஹ்மான், ஹெட்டி ரம்ஸி)



போதைப் பொருட்களற்ற நாட்டை உருவாக்குவதை நோக்காகக் கொண்ட நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு இரண்டரை வருடங்களுக்குள் 1579 கிலோ கொக்கேன் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ரத்மலானையில் அமைந்துள்ள பொருளாதார நிலையத்தில் 6 ஆவது தடவையாக 300 கோடி பெறுமதியான 160 கிலோ கொக்கேன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 14ஆம் திகதி 85 கிலோ கொக்கேன் சீனி கொள்கலனிலிருந்து விஷேட அதிரடிப்படையினராலும் ஜூலை 22ஆம் திகதி 301 கிலோ கொக்கேன் சீனி கொள்கலனிலிருந்தும், நவம்பர் 10ஆம் திகதி 32 கிலோ கொக்கேன் பெதியாகொட சீனி கொள் கலனிலிருந்தும், நவம்பர் 24 ஆம் திகதி 201 கிலோ கொக்கேன் ஒருகொடவத்த சீனி கொள்கலனிலிருந்தும், டிசம்பர் 09ஆம் திகதி 800 கிலோ கொக்கேன் தேக்கு மர கொள்கலனிலிருந்தும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த புதன்கிழமையன்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள (பக்.14)

## கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரானதல்ல



பெரும்பான்மைச் சிங்கள இனத்துடன் இணைந்து எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பது தற்பொழுது தெளிவாகத் தெரிகின்றது. எங்களது பிரச்சினைகளை நாங்களே வெளிக் கொணர வேண்டும். இதற்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒரே குரலில் நாங்கள் பேச வேண்டும். அப்பொழுது தான் எங்களது பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்படும். அதற்கான முயற்சியே இந்தக் கூட்டமைப்பு என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் ஹஸன் அலி தெரிவித்தார். (பக்.14)

## இணைந்த வட-கிழக்கில் வாழ்வதற்கான நல்லெண்ணத்தை வடக்கு மக்கள் வெளிப்படுத்த வேண்டும்

முல்லைத்தீவு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் காட்டப்படுகின்ற எதிர்ப்புணர்வுகள், வடக்கும் கிழக்கும் இணைந்தால் முஸ்லிம்கள் வாழ முடியாத சூழல் இருப்பதாக எடுத்துக் காட்டுவனவாகவே உள்ளன.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இணைந்து வாழ்வதற்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களாக வடக்கு தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் தெரிவித்தார்.



தமிழர்களின் போராட்டத்தின் போது முல்லைத்தீவில் இருந்து வெளியேற்றப்பட்ட 1500 குடும்பங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் கால் நூற்றாண்டுக்கும் மேலாக அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இடைப்பட்ட காலத்தில் அதிகரித்த குடும்பங்களின் எண்ணிக்கையை குடியமர்த்துவதற்கான காணி கிடைக்காமையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் காடு வளர்ந்துள்ள ஒட்டுசுட்டான் (பக்.14)

## ஞானசார தேரரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை



தமது சொற்பொழிவில் பௌத்த மதத்தை நிந்தித்துப் பேசியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்தின் முன்னாள் செயலாளர், இதற்கெதிராக நீதிமன்றத்தில் பொதுபலசேனாவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்தே, இது தவறு தலாகச் சொல்லப்பட்ட விடயம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. (பக்.11)

## மதுபானம் அருந்துவதில் உலகில் இலங்கைக்கு 4 ஆவது இடம்



மதுப் பாவனையில் உலகில் நான்காவது இடம் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி விஷேட செயற்றிட்டங்கள் பணிப்பாளர் சட்டத்தரணி எச்.எம். அபயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு உதவியாக அரசாங்கம் அனுமதி வழங்கிய 4664 மதுபான சாலைகள் இருப்பதாகவும், இவை அனைத்துமே அரசியல்வாதிகளுக்கும் அரசியல்வாதிகளின் (பக்.02)

## இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்ட பயன்பாடு தொடர்பில் ஐ.நா. ஆய்வு



பயங்கரவாதத் தடைச்சட்ட நடைமுறையில் மனித உரிமை நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நேரடியாகக் கண்டறிவதற்காக ஐநாவின் மனித உரிமைகளுக்கும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்குமான சிறப்பு பிரதிநிதி பென் எமர்ஸன் இலங்கைக்கு ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பென் எமர்ஸன் தலைமையிலான ஐ.நா. குழுவினர், அனுராதபுரம் சிறைச்சாலையில் எட்டு வருடங்களுக்கு மேலாக (பக்.02)

## சோல்பரி யாப்பின் சரத்துகளும் அரசியலமைப்பில் இணைக்கப்பட வேண்டும்



சட்டம் இயற்றும் சபையான பாராளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக எந்தவொரு சட்டத்தையும் இயற்ற முடியாது என்ற ஷரத்தை உள்வாங்குவதன் ஊடாக மாத்திரமே சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமென ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் உடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் குறிப்பிட்டார். (பக்.11)


FB Industries
Dealers Islandwide
Tel: 0773435700
0112431356, Fax: 0112321361
MB & BRAND IMPORTERS AND MANUFACTURE
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வேண்டி நிற்கும் சென்னை இப்ராஹீம்கள்

சென்னை, கோவளம் பகுதிக்கு சமூக சிந்தை கொண்ட இந்திய நண்பர்கள் சிலர் என்னை சடுதியாக அழைத்துச் சென்றனர். ஒரு கடையில் பிஸ்கட் பக்கட்களை ஓடர் செய்த பின், இன்னொரு கடையில் 100 பேருக்குத் தேவையான மாப்பண்ட உணவுகளையும் வாங்கினர். சற்று முன்னதாக இருந்த மாடிவீடு போன்ற தோற்றமுடைய பழைய கட்டடம் ஒன்றுக்குள் திரும்பியது எமது நடை. கடதாசி, இதர கழிவு பொருட்களை சேகரிக்கும் ரிக்ஷாக்கள், கட்டட முன் பாதையை வரிசைகட்டி உறங்கிக் கிடந்தன.



உள்ளிருந்து படையெடுத்த சில முகங்கள் ரோஹிங்கிய அகதிகள் என்பதறிந்து வியந்தேன். இந்தியாவிற்குள்ளேயே கேரளா, டெல்லி என முகாம் பிரச்சினைகளை எதிர்கொண்டு, இறுதியில் தமிழ்நாட்டின், கோவளம் பகுதியில் அனர்த்த வதிவிட முகாம் ஒன்றை நெடிய போராட்டத்தின்பின் வாழ்விடமாகப் பெற்று, 3 வருட சென்னை வாழ்க்கையின் பயனாக அன்றாட மீள் சுழற்சிக் குப்பைகளை சேகரித்து, அதன் வருவாயில் பாடசாலைக் கல்வி வரை குழந்தைப் பேறுகளுடன் வாழ்கின்றனர் அந்த மக்கள்.

பாதுகாப்பான தற்காலிக இருப்பிடத்தையும், அத்தியாவசிய உதவிகள் அவர்களைச் சென்றடைய தனிப்பட்ட முறையிலும், சேவை அமைப்புகளின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொடுத்த 35 வயதைத் தாண்டிய தமிழகத்தைச் சேர்ந்த சகோதரர் இப்ராஹீம் அவர்களின் அர்ப்பணிப்பு இந்த இரண்டு தினங்களில் என்னை புரட்டிப்போட்டது. அவர்களுக்கான நிலம் ஒன்றை வாங்கி தனித் தனி வீடுகளை அமைத்துக் கொடுக்கும் முயற்சிகளில் கடந்த 3 வருடங்களாக இவர் ஈடுபட்டு வருகின்றார்.

ஒரு சாமான்ய முயற்சியாண்மையாளரான இவரின் கரிசணை சமூக தலைமைகளுக்குச் சிறந்த முன்னுதாரணமாகவே கருதுகின்றேன்.




இலங்கையில் அண்மையில் கரையொதுங்கிய படகில் வந்த ஒரு ரோஹிங்கிய பெண்ணை கைதியாக இருந்த நிலையில் பலாத்காரம் செய்த காவல்துறை அதிகாரி தொடர்பில் செய்தி பார்த்து, அறிந்தும், துயருடன் துணிந்து செயல்படும் பொறுப்பு வாய்ந்த தலைமைகளை நாம் காணவில்லை. சில வழக்கறிஞர்கள் விரைந்து செயல்பட்டமை மகிழ்ச்சி தந்தாலும், இப்ராஹீம் போன்ற செயற்பாட்டாளர்கள் தலைமை பீடங்களுக்கு தேவை என்பதை இங்கு நடந்த காட்சிகள் உணர்த்தின.



கோவளம் ரோஹிங்கிய குடித்தொகுதியில் ஒரு குழந்தையின் தலையில் வீக்கம் கலந்த காயம் ஒன்றை கண்ட அன்பர் இப்ராஹீம், அதுவரை எமக்கு மொழிபெயர்த்து உதவிய தமிழ் பேசும் ரோஹிங்ய சிறுமியிடம் காரணத்தை வினவ, நுளம்புக் கடி என்பதை அறிந்து 50 குடும்பங்களுக்குமான நுளம்பு வலைகளை உடனே கடைத் தெருவுக்குச் சென்று வாங்கிக் கொடுத்தார்.

எல்லாம் சில, பல நிமிடங்களில் நடந்தேறின. தடுப்புக் காவலில் இலங்கையில் தற்போதிருக்கும் ரோஹிங்கிய அகதிகளுக்கு சில அத்தியாவசிய தேவைகள் இருப்பதாகவும், உதவ முன்வருவோர்க்கு நேரடியாகச் செல்ல ஏற்பாடு இருப்பதை தான் அறிந்ததாகவும், ஒரு எழுத்தாளர் அண்மையில் என்னிடம் சொன்னார்.

உலக இலாபங்களை எதிர்பார்க்காத எத்தனையோ இப்ராஹீம்கள் இலங்கையிலும் இல்லாமலில்லை. அவர்களை பயன்படுத்த நாம் தான் தவறிவிட்டோமா? தமிழ்நாட்டின் கோவளம் முகாம் சிறுவர்களுக்கு ஸ்வீட்ஸ் கொடுத்துவிட்டு வெளியேறினோம்.

## FLY with 'சைவம்' only

- முத்து கிருஷ்ணன்



இனி இந்தியாவிற்குள் பறக்கும் தங்களது விமானங்களில் அசைவ உணவு பரிமாறுதல் நிறுத்தப்படுகிறது என்று ஏர் இந்தியா அறிவித்துள்ளது. இப்படி அசைவ உணவை நிறுத்துவதால் உணவின் தரம் மேம்படும் என்றும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அந்த அறிவிப்பை இன்னும் சற்று உற்று நோக்கினால் இந்த அசைவ உணவுத் தடை என்பது அனைவருக்குமானது அல்ல, இந்தத் தடையானது ECONOMY CLASS இல் பயணிகளுக்கு மட்டுமே. அது பணம் கூடுதலாகக் கொடுத்து BUSINESS CLASS இல் பயணிக்கும் வசதிபடைத்தவர்களுக்கானது அல்ல.

சாமானியர்களின் உணவு பழக்கங்களின் மீது தொடர்ந்து தாக்குதலை தொடுப்பதன் வழியே இந்தியாவில் வாழும் 88% சதவிகித மக்களை மீண்டும் ஒரு முறை அசிங்கப்படுத்தும் செயலில் இறங்கியுள்ளது பாஜக அரசு.

குறிப்பு: இந்தியாவின் சனத்தொகையில் 88% பேர் அசைவம் உண்ணுபவர்கள் என்பதை இந்திய அரசின் Anthropological Survey of India தனது புள்ளிவிபரப் பட்டியலில் ஆண்டு தோறும் அறிவித்து வருகிறது.

## டெங்கு உடைகள் விற்பனைக்கு

- தமிழில்: ஹிஷாம் ஹுஸைன்



பதுளை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் பதிவானதைத் தொடர்ந்து, ஆடை விற்பனை நிலையங்களில் பாடசாலை மாணவர்களுக்கான 'டெங்கு உடைகள்' விற்பனைக்கு வந்துள்ளது.

இந்த டெங்கு உடைகள் நல்ல விற்பனையையும் வருமானத்தையும் பெற்றுத் தருவதாக வியாபாரிகள் குறிப்பிட்டனர்.

-அஷ்ரப் சிஹாப்தீன்




ஜும்ஆ தொழுகை நடத்த விடாமல் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலின் கதவுகளை இஸ்ரேல் இழுத்துச் சாத்தியிருக்கிறது என அறிகிறோம்.

ஹரமைனின் காவலர்கள் இது குறித்துப் பேச மாட்டார்களா?

ஹரமைனின் காவலர்களின் கையாட்கள் குமுறி எழமாட்டார்களா?

## கம்பஹா மாவட்டத்தில் 12 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்:

- டொக்டர் ரொஹான் ரணசிங்க தகவல்



கம்பஹா மாவட்ட சுகாதார அதிகாரப் பிரிவில், இது வரை 12 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இருப்பது பதிவாகியுள்ளதாக, கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணியகம் தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இடையிடையே மழை விட்டு விட்டுப் பெய்வதால் இந்நிலை தொடர்ந்தாலும், பொது மக்களின் போதிய ஒத்துழைப்பு இன்னும் சரியான முறையில் கிடைக்காததும், டெங்கு நோய் தொற்று குறிப்பாக இவ்வாறு பெருகக் காரணமாக அமைந்துள்ளதாக, கம்பஹா சுகாதார சேவைகள் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர், தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ரொஹான் ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியசாலை சுற்றுச் சூழலை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பதுடன், நமது வீடு மற்றும் தோட்ட சுற்றுச் சூழல்களையும் எந்நேரமும் துப்பரவாக வைத்துக் கொள்வதற்கு, 'நாம்' என்ற நோக்கில் அனைவரும் இத்தருணத்தில் ஒன்றுபடுமாறும், இதற்காக வாரத்தில் 10 அல்லது 15 நிமிடங்களை ஒதுக்கி டெங்கு நோய் தொற்றை முற்றிலும் இல்லாதொழிக்க முன்வருமாறும், டொக்டர் அனைத்து பொதுமக்களையும் கேட்டுள்ளார்.

(ஐ.ஏ. காதிர் கான்)

## இலங்கையில்... (01 ஆம் பக்கத் தொடர்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்தக் கைதிகளின் மனித உரிமைகளைப் பாதித்திருக்கின்றதா, நிலைமை என்ன என்பதை அவர்கள் கேட்டறிந்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலரையும் ஐநா விசேட பிரதிநிதி வவுனியாவில் சந்தித்து அவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளனர். விசேடமாக சிறை வாழ்க்கையின் பின்னர், அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் மனித உரிமை நிலைமைகள் என்பன குறித்து அவர்கள் கேட்டறிந்துள்ளனர்.

வவுனியா மேல் நீதிமன்ற மண்டபத்தில் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ரீ.என்.ஏ. மனாப் மற்றம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட நீதிபதிகள் அடங்கிய நீதிபதிகளையும் பென் எமர்ஸன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

## மதுபானம்... (01 ஆம் பக்கத் தொடர்)

உறவினர்களுக்கும் சொந்தமானவை என்றும் அவர் தெரிவித்தார். சராசரி இலங்கையர் வருடமொன்றுக்கு 8.5 லீட்டர் மதுபானத்தை உட்கொள்கின்றனர். அவற்றில் 65 வீதம் சட்டவிரோதமான மதுபானமாகும். மதுப் பாவனையால் இலங்கையில் வருடாந்தம் 40,000 பேர் மரணிக்கின்றனர்.

இதேவேளை போயா மற்றும் சில விடுமுறை தினங்களில் மதுபான சாலைகள் மூடப்படுவதனால் கள்ளத் தனமாக மதுபானம் விற்பது அதிகரிக்கிறது என்பதால் போயா தினத்தில் மதுபானசாலைகளை மூடுவதனை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர கடந்த மாதம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதேநேரம், தமது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வதையிட்டு மதுபான விருந்து ஏற்பாடு செய்த இவ்வருடம் உயர் தரப் பரீட்சை எழுதும் ஆறு மாணவர்கள் சிலாபம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



கலாசாரம் மற்றும் அபிவிருத்திக்கான முஸ்லிம் நிறுவனத்தின் (MFCD) ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 51 ஊடகவியலாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு 12,000 ரூபா பொறுமதியான வீட்டு மின் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு கடந்த 19/07/2017 ஆம் திகதி அன்று MFCD நிறுவனத் தலைவர் ஹனான் ஹுசைன் தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதிகளாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் திருமதி. மாலனி லொக்குபொத்தாகம, இரத்தினபுரி பிரதேச செயலாளர் சித்ரா எம். கொடவத்த, இரத்தினபுரி மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான ஒன்றிய தலைவர் திரு.கே.பி. சமிந்த பிரியசேகர மற்றும் MFCD நிர்வாக சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.ஹஸ்ரிம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த திட்டத்துக்கு அமெரிக்காவில் பணிபுரியும் இலங்கை சகோதரர்கள் நிதி ஒத்துழைப்பு வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ரீஸா யஹ்யா

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் இறக்குமதியா உள்நாட்டு உற்பத்தியா?

இலங்கை முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ குடிபெயர்ந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் 12 நூற்றாண்டுகளுக்கு மேலாக இங்கு வசித்து வரும் சுதேசிகள். தனித்துவமான மத நம்பிக்கைகளுக்கும் விழுமியங்களுக்கும் அப்பால் அவர்களது இரத்தம், கலாச்சாரம், பண்பாடு, அபிலாஷைகள் அனைத்தும் சிங்களத்தைச் சார்ந்தவை.

சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மதமும், குறிப்பிடத்தக்க அளவில் மொழியும் தான் வித்தியாசமானவை. இஸ்லாத்தை அவர்கள் மதமாக பின்பற்றினாலும் இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களத்திலும் ஏனைய மொழிகளிலும் பரிச்சயம் மிக்கவர்கள். காலனித்துவ காலத்தில் இருந்து இந்தியாவில் இருந்து இவர்களுக்குக் கிடைத்த மத வழிகாட்டல்கள் தமிழில் இருந்தமையும், பிராந்தியக் கடல்களில் ஆதிக்கம் செலுத்திய முஸ்லிம் கப்பற் படைவீரர்களின் பாரம்பரியமும் முஸ்லிம்களை தமிழ் பேசுபவர்களாக மாற்றின.

சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் மொழியும் மதமும் பிரித்ததே தவிர அவர்களது சமூக-பொருளாதார, அரசியல், வரலாற்று அபிலாஷைகளும் சிங்களவர்களுடனான தொடர்புகளும் அவர்களை தேசிய அளவில் பிணைத்திருந்தன. தமிழர்களுடனான அவர்களது உறவு பிராந்திய மட்டங்களில், குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

பெரும்பான்மைச் சிங்களவர்களுடனான இந்தப் பிணைப்பு தான் தமிழ்ப் பிரிவினைவாத இயக்கத்திடமிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கென தமது உயிரையும் உடைமைகளையும் இழந்து வடக்கு கிழக்கில் இருந்து முஸ்லிம்கள் புலம்பெயரவும் காரணமாகியது. தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதில் இந்த முஸ்லிம் சிங்கள உறவு பரஸ்பர சக்தியைக் கொடுத்தது. இந்த இரு சாராருக்கும் இடையிலான துருவமயப்படுத்தல்கள் இரு தரப்பினதும் பாதுகாப்பை பலவீனப்படுத்துவதோடு, தேசியப்பாதுகாப்பையும் பிராந்திய ஒருங்கிணைப்பையும் மலினப்படுத்திவிடும்.



முஸ்லிம்கள் மீதான அண்மைய தாக்குதல்கள், இலங்கையை பூகோள அரசியலின் நன்மைக்காகப் பயன்படுத்தும் வகையில் சிங்கள முஸ்லிம் உறவை துருவமயப்படுத்துவதற்கான சூழ்ச்சியாகவே தெரிகிறது.

தற்போது வளர்ந்து வரும் சூழல், சிங்கள இனத்தினதும் முஸ்லிம் இனத்தினதும் அடிமட்ட மக்களிடையேயான மோதலாகத் தெரியவில்லை. மாறாக எதிர்வரும் காலங்களில் இலங்கையின் தலைமைகள் தமக்குச் சாதகமான வகையில் செயற்படும் வகையில் பிராந்திய புவி அரசியலில் அக்கறையுடையவர்களால் திட்டமிட்டு விதைத்து உரமூட்டி வளர்க்கப்படுகின்ற பாரிய தொரு மோதலொன்றாகவே இது தோன்றுகிறது.

இன்றைய சிக்கலான உலகில் எந்தப் படமும் அதன் உண்மையான காட்சியை பிரதிபலிப்பதில்லை. பாரிய மோதலொன்றுக்காக முஸ்லிம்களைக் கிளர்ந்தெழச் செய்வதற்காக கனதியற்ற ஒரு மோதலை கட்டவிழ்த்துவிடும் முயற்சியே தற்பொழுது நாட்டில் நடப்பதாக புறத்தோற்றத்தில் தெரிகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான பாரிய வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டு நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பது.இதன் விளைவாக அமைய முடியும். இந்த வகையில் நாட்டின் ஸ்திரத்தன்மையை குலைப்பது முஸ்லிம்களிலிருந்து ஆரம்பிக்கப்பட முடியும். இதனைச் சாக்காக வைத்து அந்நிய சக்திகள் இலங்கை விவகாரங்களில் தலையிட முடியுமான சூழல் இதனூடாக தோற்றம் பெறும்.

உலகளாவிய பின்நவீனத்துவ சமூகங்களின் அரசியலில் முஸ்லிம் விரோதப் போக்கு சகஜமாகிப் போன ஒரு விடயம். இஸ்ரேலின் திறனினால் மேற்கத்தேய சக்திகளின் கட்டளைப்படி இயக்கப்படுகின்ற ஊடகங்கள் இதனையே உலகம் முழுவதும் விதைக்கின்றன. இந்த ஊடகச் செயற்பாடுகளின் ஊடாக மேற்கத்தேய சக்திகள் முஸ்லிம் நாடுகளின் வளங்களைக் குறிவைக்கின்ற அதே வேளை இஸ்ரேல் இஸ்லாத்தைக் கருவறுக்க முனைகிறது. ஊடகங்களுக்கு ஊடாக முஸ்லிம்களை வன்முறையாளர்களாகச் சித்திரிப்பதும் மனித குலத்துக்கு எதிராக பரவலான கொடூரங்களை நிகழ்த்துபவர்களாகக் காட்ட முனைவதும் இதற்குப் போதுமான சான்றாகும்.

பிராந்திய ரீதியில், இலங்கையில் இந்திய புவி அரசியல் ஈடுபாடு இஸ்லாமோபோபியாவைப் பயன்படுத்துகிறது. சிங்கள முஸ்லிம் உறவு வளர்வதைத் தவிர்ப்பதற்கும் இந்த இரு இனங்களுக்குமிடையே வரலாறு நெடுகிலும் பேணப்பட்டு வருகின்ற நல்லுறவைச் சிதைத்து பிளவை ஏற்படுத்துவதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. தனக்குக் கீழ்ப்படிவுள்ள, பலவீனமான, தன்னில் தங்கியிருக்கக் கூடிய ஒரு நாடு தனக்குப் பக்கத்தில் இருப்பதையே இந்தியா விரும்பும்.

ஆகவே யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையில் தேசத்தைக் கட்டியெழுப்புதல், மக்களிடையே இணக்கத்தை வளர்த்தல், இலங்கையில் ஒற்றுமை நிலவுதல் என்பதெல்லாம் இந்திய அக்கறைக்குத் தொந்தரவானதாகவே இருக்கும். இதனால் இலங்கை மக்களுக்கிடையே மோதல்கள் நிகழ்வது, 2009 யுத்த வெற்றியினால் இழந்த வாய்ப்பை மீளப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியாவுக்கு உதவும்.

ஞானசார தேரரையும் உள்ளடக்கிய பொதுபலசேனா, ராவணா பலய போன்ற அமைப்புக்கள் எல்லாம் முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என கட்டவிழ்த்து விட்ட பொய்ப் பிரச்சாரங்களும் அதற்குப் பின்னர் முஸ்லிம்களின் பொருளாதார மையங்கள், பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா, பீஜேபி போன்ற சூழ்ச்சியாளர்களின் செயற்பாடுகளை ஒத்ததாகவே இருந்தன. இவற்றுக்குப் பின்னால் பல உளவு நிறுவனங்களின் மறைகரங்களும் பதிந்திருந்தன.

இந்துத்துவ பின்னணி கொண்ட இந்த தீவிரவாதக் குழுக்கள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவன்றி நாட்டில் கலவரத்தையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்து மக்களை துருவமயப்படுத்தவே இந்த தரகு வேலையில் ஈடுபட்டிருக்கின்றன.

தற்போது நாட்டில் வளர்ந்துவரும் சூழமைவைப் பார்க்கின்ற பொழுது, பொதுபலசேனா வெளிநாடுகளில் இருந்து புதிய முரண்பாடுகளை இறக்குமதி செய்யும் முகவராகவோ அல்லது வெளிநாட்டுச் சக்திகளின் கையாளாகவோ தொழிற்படுவதாகவே தெரிகிறது.

இது நிச்சயமாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையப் போகிறது. இதனைக் கையாளமுடியாத கையாலாகாத் தனத்தினால் அரசாங்கம் மெத்தனமாக தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தலுக்கு உடந்தையாக செயற்படுகிறது. அரசைச் சூழவுள்ள அறிவிலிகள் ஆட்சிக் கதிரைகளை சூடேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நல்லாட்சியிலும் நல்லாட்சி அரசின் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான அக்கறையிலும் மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள்.

தேசிய பாதுகாப்பில் அரசாங்கம் பொடுபோக்காக இருந்த போதிலும், கண்ணும் கருத்துமாக நாட்டைப் பாதுகாக்கின்ற பொலிஸ், இராணுவம் மீது மக்கள் ஆட்டங் காணாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நல்லாட்சி, நல்லிணக்கம், தேசத்தைக் கட்டியெழுப்பல் போன்ற செயற்பாடுகளில் அரசு கொண்டிருக்கும் இறுமாப்பு, சட்டமும் ஒழுங்கும் சீர்குலையும் போது, அரச நிறுவனங்கள் ஒத்துழைக்காத போது, இயற்கை மற்றும் மனிதனாலான அழிவுகள் முறையாக முகாமை செய்யப்படாத போது வெறும் புஸ்வாணமாகி விடும்.

சட்டத்தைத் தன்கையிலெடுத்து ஆடுகின்ற பௌத்த தீவிரவாதிகளின் கொட்டத்தை அடக்குவதற்கு அரசு தவறுவதானது, அரசின் அதிகாரம், தேசிய பாதுகாப்பு விடயங்களில் அரசாங்கத்தை குறைத்து மதிப்பிடச் செய்யும். இதனால் யுத்தத்துக்குப் பின்னர் கட்டியெழுப்பப்பட்ட ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும்.

மூன்று தசாப்த கால யுத்தத்தின் விளைவுகள் சமூக, பொருளாதார, சூழலில் ஏற்படுத்திய பாதிப்புக்கள், என்ன விலை கொடுத்தேனும் சமாதானத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு நாட்டு மக்களை தள்ளியிருக்கிறது. ஒன்றாய்ப் பிணைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பில், ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் ஏற்படுத்தும் தீங்கு பூமாரங்கை போலத் (பக்.14)

• லதீப் பாரூக்

# காந்தியை துகிலுரியும் மோடியின் இஸ்ரேல் விஜயம்

பலஸ்தீனர்களை கொன்றும் இன்னும் பலரை அயல்நாடுகளின் அகதி முகாம்களுக்கு அடித்து விரட்டியும் முஸ்லிம் மத்திய கிழக்கின் மையத்தில் மேற்கினால் நாட்டப்பட்ட இனவாத இஸ்ரேலுக்கு இந்தியாவின் இந்துத்துவ பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

1930, 40 களில் பிரித்தானிய காலனித்துவவாதிகளும் ஸியோனிஸ யூதர்களும் நாடற்ற யூதர்களுக்கென நாடொன்றை உருவாக்க முயற்சித்த வேளையில், அதனை எதிர்த்த இந்தியாவின் சிற்பி மகாத்மா காந்தி, எப்படி இங்கிலாந்து ஆங்கிலேயர்களுக்கும் பிரான்ஸ் பிரெஞ்சு மக்களுக்கும் சொந்தமோ அதேபோல பலஸ்தீனும் பலஸ்தீனர்களுக்குத் தான் சொந்தம் என்று கூறினார். அரபுகளின் எண்ணிக்கையைக் குறைத்து பலஸ்தீனை யூதர்களின் தேசமாக்குவது நிச்சயமாக மனிதாபிமானத்துக்கு எதிரானது. இதைவிட யூதர்கள் பிறந்து வளர்ந்த இடத்திலேயே அவர்களுக்கு நீதி தேடுவதுதான் நியாயமானது என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இன்றைய இந்தியாவின் தலைவர்கள் அதனை உருவாக்கிய காந்தியின் அடிச்சுவற்றில் பயணிப்பவர்கள் அல்ல. மகாத்மா காந்தியையும் அவரின் சமாதானத்துக்கான தூதையும் கொன்ற கோட்ஸேயை அங்கத்துவராகக் கொண்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பினையே அவர்கள் பின்பற்றுகிறார்கள். இதனால் பிரதமர் மோடியின் இஸ்ரேல் விஜயம் ஆச்சரியமானதொன்றல்ல.

1950 களிலேயே இந்தியா இஸ்ரேலுடன் உறவை ஆரம்பித்து விட்டது. ஆனால் அது முறைசாரா நிலையிலேயே இருந்தது. 1990 களில் ஆர்.எஸ்.எஸ். -பிஜேபி அரசாங்கம் உருவானதிலிருந்து அது ஊட்டம் பெறத் தொடங்கியது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில், அல்லது ஸியோனிஸ்டுகளுக்கும் ஆர்.எஸ்.எஸ். க்கும் இடையில் உள்ள பொதுவான ஒற்றுமை இருவருமே இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வெறுப்பவர்கள் என்பது. இருவருமே முஸ்லிம்களின் இரத்தத்தில் தோய்ந்தவர்கள் என்பது.

1940 களில் இருந்து ஸியோனிஸ்டுகள் பலஸ்தீனர்களுக்கு எதிராக 63 இனப்படுகொலைச் சம்பவங்களை நிகழ்த்தியிருக்கின்றனர். காஸாவில் இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்ட நெதன்யாஹுவுக்கு பலஸ்தீனர்களைக் கொல்வது இயல்பாகிவிட்ட ஒன்று. இதுபோலவே 2002 பெப்ரவரியில் நரேந்திர மோடி குஜராத் முஸ்லிம்களை இனப்படுகொலை செய்தார். இன்று எத்தகைய வேறுபாடுமின்றி மோடியின் அரசு, பொலிஸ், சட்டம் அனைத்துமே தமது மாட்டுக் குண்டர்களால் முஸ்லிம்களைத் தாக்கிக் கொலை செய்வது மோடி அரசின் வாடிக்கையாகிவிட்டிருக்கிறது. இதனால் எட்டு தசாப்தங்களாக பலஸ்தீனர்கள் துன்புறுவது போலவே வட இந்திய முஸ்லிம்களும் அச்சமான சூழலில் வாழ்க்கையை கடத்துகிறார்கள்.

உலகளாவிய ரீதியில் சமூகங்களுக்கிடையே வேகமாக அழிந்து வரும் மனித விழுமியங்களைப் பாதுகாப்பதென்ற திடசங்கற்பத்துடன் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடுவதற்கு இந்த இரு நாடுகளும் வெட்கமின்றிக் கைகோர்ப்பது தான் சோகமானது.

ஒரு பத்தியாளர் குறிப்பிடுகையில், இஸ்லாமிய பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையில் உறவுகள் பலப்படுவதை எதிர்கொள்வதற்காக, இஸ்ரேல் மற்றும் இஸ்ரேல் சார்பு குழுக்களின் வழிப்படுத்தலில் இயங்கும் [illegible] அமெரிக்க இஸ்ரேல் இந்திய உறவு



களைப் பலப்படுத்துவதில் முக்கிய பின்னணிச் சக்தியாகத் தொழிற்படுகிறது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பதற்ற நிலைமை இருப்பது இஸ்ரேலுக்குச் சாதகமானது. அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல் என்பன ஒரே அச்சில் இருப்பது இஸ்ரேலுக்கு நல்லது என்று குறிப்பிடுகிறார்.

இஸ்ரேலும் மேற்கிலுள்ள அதனுடைய பலமான லொபிகளும் 2014 தேர்தலில் மோடியினதும் பிஜேபியினதும் வெற்றியை உறுதி செய்வதற்காக உதவியது தொடர்பில் பல அறிக்கைகள் வெளியாகி உள்ளன. இஸ்ரேல் 280 கோடி ரூபா அளவில் பிஜேபியின் தேர்தல் பிரச்சாரத்துக்காக செலவழித்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் சிரியா, லெபனான், எகிப்து, ஜோர்தான் மற்றும் ஈராக் நாடுகளை இணைத்து அகன்ற இஸ்ரேல் ராஜ்ஜியத்தை உருவாக்கும் [illegible] இஸ்ரேலின் [illegible] பட்டிருக்கும் மத்திய கிழக்கில் மேலும் ஒரு அழிவை மோடியின் இஸ்ரேல் விஜயம் நிச்சயம் கொண்டு வரும்.

இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் நாடுகளின் தலைவர்கள் ஒரு கண்துடைப்புக்காக கால்பதிக்கின்ற இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு ரமல்லாவுக்கு மோடி விஜயம் செய்யவில்லை. பலஸ்தீனர்களின் உரிமைக்காக சர்வதேச மாநாடுகளில் முன்னணியில் இருந்து குரல் கொடுத்த இந்தியா, பலஸ்தீனை கைகழுவி விட்ட செய்தியை இதன் மூலம் அது உலகுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இந்திய அரசு பலஸ்தீனைப் புறக்கணித்தது இது முதல் தடவை அல்ல. இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இஸ்ரேலிய விஜயத்தின் போதும் அவர் ரமல்லா விஜயத்தை தவிர்த்தார். ஒடுக்கப்பட்ட பலஸ்தீனர்களை அவமதிப்பதாக இது இருந்தது. அமெரிக்கா தலைமையிலான போர் வெறியர்களால் பிராந்தியத்தில் உருவாக்கப்பட்ட அரசியல் கொந்தளிப்பை வழிநடத்தவே இந்தியா இவ்வாறு நடந்து கொண்டது.

இன்று இந்தியாவும் இஸ்ரேலும் பொருளாதார, இராணுவ, மூலோபாய உறவுகளை வளர்த்துக்கொண்டுள்ளன. இஸ்ரேலின் இராணுவ தளபாடங்களை வாங்கும் பெரும் புள்ளியாக இன்று இந்தியா மாறியிருக்கிறது. ரஷ்யாவுக்கு அடுத்த நிலையில் இந்தியாவுக்கு பாதுகாப்பு வழங்கும் நாடாக இஸ்ரேல் இருக்கிறது.

1999 க்கும் 2009 க்கும் இடையில் இரு நாடுகளுக்கும் இடையில் 9 பில்லியன் டொலர் அளவில் இராணுவத் தளபாட வியாபாரம் நடந்திருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ, மூலோபாய உறவுகள் தற்போது புலனாய்வுப் பகிர்வுகள், கூட்டு இராணுவப் பயிற்சிகள் என வளர்ந்திருக்கின்றன. இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நாவின் பல்வேறு பிரகடனங்களின் போது நழுவல் போக்கை கடைப்பிடித்ததன் மூலம் நரேந்திர மோடி நிர்வாகம் தனது உறவை மேலும் இறுக்கமாக்கியுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள புதுடில்லியின் ஸஞ்ஜீவ் மிக்லானி, இஸ்ரேலின் டோவா கொஹென் ஆகிய பத்தியாளர்கள், தனது எரிபொருள் தேவைக்காக மிகவும் நம்பியிருக்கின்ற அரபு நாடுகள் மற்றும் ஈரானையும் தனது பெரிய முஸ்லிம் சிறுபான்மையையும் வருந்த வைக்கும் வகையில், மிகவும் எச்சரிக்கையாக பிராந்தியத்தில் இந்த ராஜதந்திர உறவை இந்தியா பேணி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

நரேந்திர மோடியின் இஸ்ரேல் விஜயம் பலஸ்தீன் மீதான ஆக்கிரமிப்பை பலப்படுத்த மட்டுமே உதவும் என முஸ்லிம் உரிமைகளுக்காக பிரதேச ரீதியில் போராடுகின்ற, இந்திய பெடரல் பாராளுமன்ற உறுப்பினர் அஸதுத்தீன் உவைஸி தெரிவித்துள்ளார்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## மக்களின் பெயரால் மீண்டும் ஒரு அரசியல் யாப்பு

உத்தேச அரசியல் யாப்பின் நகல் அடுத்த மாதமளவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. முப்பது வருட கால யுத்தத்தினால் ஏற்பட்ட அனுபவங்களை வைத்து, நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்றே புதிய அரசியல் யாப்பு வரையப்படுவதாக சொல்லப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரும் 1948 ஆம் ஆண்டின் சோல்பரி யாப்பே அமுலில் இருந்தது. 1972 இல் இலங்கை குடியரசானதன் பின்னர் சுதந்திர இலங்கைக்கான அரசியல் யாப்பு வரையப்பட்டது. பின்னர் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜயவர்தன அரசாங்கம் அரசியலமைப்பை மாற்றி எழுதியது. இதனூடாக ஜே.ஆர். ஜயவர்தன நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்து, தன்னை கடவுளுக்கு அடுத்த படியாக அதிகாரம் பெற்றவராக மாற்றிக் கொண்டார். இதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பலரும் தமது அதிகாரத்துக்காகவே யாப்பைப் பயன்படுத்தினார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 18 ஆம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் நிறைவேற்று அதிகாரத்துக்கும் அப்பால் சென்று தன்னை ஆயுட்கால ஜனாதிபதியாக அவர் பிரகடனம் செய்தார். இப்படி வரலாறு நெடுகிலும் அரசியல் யாப்பு மாற்றம் என்பது தத்தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவே கையாளப்பட்டிருக்கிறது.

மீண்டும் புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பிலான கதையாடல்கள் பிரதமரால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது. பாராளுமன்றத்தினைக் கலைக்கும் அதிகாரம் இந்தத் திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் கையிலிருந்து பாராளுமன்றத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் கோடிக் கணக்கில் செலவழித்து போராடி பாராளுமன்றத்தில் பதவியைப் பெற்றவர்களில் யாருமே பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்வரப் போவதில்லை. இந்த நிலையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் பணி 19 ஆவது திருத்தத்தின் மூலம் கேள்விக்குறியாகி உள்ளது.

இதுபோன்ற பல குறைபாடுகளை நடப்பிலுள்ள அரசியல் யாப்பு கொண்டுள்ளது. அதே போல சுதந்திரம் கிடைத்து ஆறு தசாப்தங்கள் கழிந்த பின்னும் நாட்டின் சிறுபான்மையினர் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒழுங்குகள் இன்னும் வகுக்கப்படவில்லை. இதற்கும் புதிய அரசியல் யாப்பொன்று உருவாக்கப்படுவதுதான் தீர்வாக அமைய முடியும் என முன்மொழியப்பட்டு அதற்கான வேலைகளே தற்போது நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் அரசியலமைப்பில் சிறுபான்மைக்கான காப்பீடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் அவை போதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதே கடந்த காலங்களின் கசப்பான அனுபவமாக இருக்கிறது. மக்களது கருத்துச் சுதந்திரம், விரும்பிய மதமொன்றைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் என நாட்டின் பிரஜை என்ற வகையில் அனுபவிக்கக் கூடிய உரிமைகள் அரசியல் சாசனத்தில் வரையப்பட்டுள்ள போதிலும் அதனை நடைமுறையில் அனுபவிக்கின்ற சந்தர்ப்பம் இந்த நாட்டின் சிறுபான்மைக்குக் கிடைப்பதில்லை. முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க குறிப்பிட்டது போல, பெரும்பான்மையைச் சுற்றிப் படரும் கொடிகளாகவே இலங்கையில் சிறுபான்மையினம் பார்க்கப்படுகிறது.

தமிழர் பிரச்சினை உக்கிரமடைந்த போது அதிகாரப் பரவலாக்கத்துக்கென முன்மொழியப்பட்ட 13 ஆவது திருத்தமும் பெரும்பான்மையின் இந்த மனப்பாங்கால் இதுவரை முழுமையாக அமுல்படுத்தப்படாத நிலையிலேயே இருக்கிறது. இந்த நிலையில் எத்தனை புதிய அரசியல் அமைப்புக்கள் வந்தாலும் பெரும்பான்மை மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வராதவரை நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. பெரும்பான்மை மக்களின் மனதில் மாற்றத்தைக் கொண்டு வருவதை புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வருவதால் சாத்தியமாக்கவும் முடியாது.

இந்த நிலையில் மீண்டும் புதியதொரு அரசியல் யாப்பு முன்மொழியப்படுவது நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவன்றி ஆட்சியாளர்களின் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே என்பது கடந்த கால அனுபவங்கள் நமக்குச் சொல்லித் தருகின்ற பாடமாக உள்ளது. ஆட்சியும் அதிகாரமும் கையில் இருந்தும் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்த முடியாமல் போனது அரசியல் யாப்பின் குறைபாட்டினால் அல்ல.

எனவே புதிய அரசியல் அமைப்பு என்பது மக்களின் தேவைக்காக அல்ல என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

# பொதுபல சேனா உருவாக்கப்பட்டது எதற்கு?

## (ஹலால் பிரச்சினை முதல் ஆட்சி மாற்றம் வரையில்)

• சி.ஏ. சந்திரபிரேம

ஞானசார உள்ளிட்ட தேரர்கள் சிலர் நோர்வே நாட்டிற்கு சுற்றுப் பயணம் செய்து எரிக் சொல்ஹைம்மினை சந்தித்துவிட்டு இலங்கை திரும்பியதைத் தொடர்ந்தே 2012 ஆம் ஆண்டு பொ.ப.சேனா அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஞானசார தேரரின் நோர்வே சுற்றுப் பயணம் இடம்பெற்று 6 மாதங்களின் பின்னர் திடீரென ஹலால் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டம் குறுகியதொரு காலப்பகுதிக்குள் மாடறுப்புக்கு எதிரான போராட்டமாக மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து முஸ்லிம்களது வியாபார நிலையங்களைப் பகிஷ்கரித்தார்கள். பல வியாபார நிலையங்கள் தாக்கப்பட்டன. இன்னும் சில தீக்கிரையாகின. நாடு முழுவதிலும் உள்ள கிறிஸ்தவ வழிபாட்டுத் தளங்களுக்கும் தாக்குதல் நடாத்தினார்கள். ஈற்றில், தேரர் ஒருவரை முஸ்லிம்கள் தாக்கிய சம்பவமொன்றை அடிப்படையாக வைத்து அளுத்கமையில் சிங்கள- முஸ்லிம் கலவரமொன்று வெடித்தது.

முஸ்லிம்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் வெகுவாக பாதிப்பை ஏற்படுத்தியது.

ராஜபக்ஷ அரசாங்கத்தை புரட்டிப் போட்ட பின்னர் நடுவீதியில் பேரணிகளை நடாத்தி வன்முறை மிக்க அமைப்பில் நடந்து கொண்ட தேரர்கள் திடீரென காணாமல் போனார்கள். கடந்த இரண்டரை வருட காலத்திற்குள் பொ.ப.சேனாவின் செயற்பாடுகள் குறைந்து காணப்பட்டன. இடைக்கிடை ஓரிரு ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடாத்தினார்களே தவிர, பேரணிகளை நடாத்தவில்லை.

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி காலி முகத்திடலில் நடாத்திய மே தினக் கூட்டத்தைத் தொடர்ந்து மீண்டும் சில நாட்களுக்குள் பொதுபலசேனாவின் செயற்பாடுகள் திடீரென 2013/2014 கட்டத்தை எட்டியிருந்தது. மீளவும் முஸ்லிம்களது பள்ளிவாயல்களுக்கும் வியாபார நிலையங்களுக்கும் தாக்குதல் நடாத்தப்பட்டன. ஞானசார தேரரரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சில நாட்கள் அவர் காணாமல் போயிருந்து விட்டு வெளியே வந்து ஒரு நளைக்குள் மூன்று தடவைகள் பிணை பெற்று விடுதலையானார்.




சம்பிக்க ரணவக்கவிற்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் நிலவிய மனக்கசப்பு 2012 ஆம் ஆண்டு தணிய ஆரம்பித்தது. 2013 இன் துவக்கத்தில் சம்பிக்க ரணவக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிலிருந்து நீக்கப்பட்டு அந்தஸ்தில் குறைந்த விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அக்காலப்பகுதியிலேயே பொதுபல சேனா அமைப்பு பகிரங்கமாக செயற்பட ஆரம்பித்தது.

ஹலால் எதிர்ப்புப் போராட்டம் முதல் அளுத்கம கலவரம் வரையில் ஞானசார உள்ளிட்ட தேரர்கள் நடுவீதியில் வன்முறைகளில் ஈடுபடுகின்றபோது சம்பிக்க ரணவக்க மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்கள் வெள்ளாடை தரித்து, ஞானசார தேரர் அரங்கேற்றும் சகல படுபாதகச் செயல்களையும் நியாயப்படுத்தும் ஊடவியலாளர் மாநாடுகளை நடாத்தினார்கள்.

ஞானசார தேரர் உள்ளிட்ட இச்சிறு தரப்பினர் காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ ஏற்படுத்தும் இக்குழப்பங்களை மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தத் தயாரானபோது, பௌத்த தேரர்களை எக்காரணத்திற்கும் கைதுசெய்யக்கூடாது என்றும் அவ்வாறு தேரர்கள் கைதுசெய்யப்பட்டால் அவர்களை நடுவீதிக்கு இறக்குவதாக சம்பிக்க ரணவக்க அமைச்சரவையில் கூறிய கருத்தினை மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் அம்பலப்படுத்தியிருந்தார்.

ஜாதிக ஹெல உறுமய ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியாக இருந்தமையினால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் பொதுபலசேனாவுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்காததன் காரணத்தினால் பொ.ப.சேனா அமைப்பு, கோத்தாபய ராஜபக்ஷவின் அனுசரணையிலும் பாதுகாப்பிலும் செயற்படுவதாக நாட்டில் கருத்துப் பரவியது.

காலியில் கிரம விமலஜோதி தேரர் ஏற்பாடு செய்த வைபவமொன்றில் கலந்து கொண்ட கோத்தாபய, தேரர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது பிடிக்கப்பட்ட புகைப்படமொன்றை பயன்படுத்தி பொ.ப. சேனா கோத்தாபயவின் [illegible] அப்போதைய எதிர்க்கட்சி பிரசாரமொன்றை முன்னெடுத்தது. இக்கருத்து முஸ்லிம்களிட

அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் வேண்டுகோளுக்கமைய இச்செயல் இடம்பெற்றது என நினைப்பது தவறானது. மகாநாயக்க தேரரின் வேண்டுகோளுக்கு முன்னரே இந் நடவடிக்கை திட்டமிடப்பட்டிருந்தது. அரச அனுசரணையில் ஞானசார தேரர் அன்றைய தினம் சட்டத்தின் முன் சரணானார். இந் நிலையில் ஞானசார தேரரை விஜயதாச ராஜபக்ஷவே மறைத்து வைத்திருந்தார் என்கின்ற கருத்தும் நாடு முழுவதிலும் பரவியது.

ஆனாலும் பொதுபல சேனாவுடனும் ஞானசார தேரருடனும் அரசியல் தொடர்பொன்றை வைத்து, அதனை இன்றளவும் பேணி வருகின்றவர் தற்போதைய அரசாங்கத்தின் ஒரேயொரு அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆவார்.

ஞானசார தேரர் சில காலம் ஜாதிக ஹெல உறுமய கட்சியில் பிரதித் தேசிய அமைப்பாளர் பதவியை வகித்து வந்தார். இவர் 2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். 2005இல் ஞானசார தேரர் ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பை வைத்துக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. சில காலம் இவர் ஐ.தே.க. பிக்குகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க அவர்களின் தாயாரான நாலனீ விக்ரமசிங்க நோயுற்றிருந்த போது அவருக்கு சுகம் வேண்டி பிரார்த்தனை செய்து, பிரித் ஓதிய தேரர்களுள் ஞானசார தேரரும் கலந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2012இல் ஹலால் எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் வரையில் ஞானசார தேரர் ரணில் தரப்புடன் நல்லுறவுகளை பேணி வந்துள்ளார்.

பொதுபல சேனாவின் நிறைவேற்று பணிப்பாளர் என கூறப்படுகின்ற டிலந்த விதானகேயும் நீண்ட காலம் தொட்டு ரணில் விக்ரமசிங்கவுடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளார். இதன் காரணமாகவே ஆரம்ப கட்டத்தில் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதமாக ரணில் விக்ரமசிங்கவும் ஹலால் எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவான கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

ஹலால் சான்றிதழை வெளியிடுகின்ற இஸ்லாமிய மத அமைப்புக்கு அவ்வகையில் சான்றிதழை வெளியிடுவதற்குரிய உத்தியோகபூர்வ அனுமதி இல்லை என்றும் அங்கீகாரம் தொடர்பிலான சான்றிதழை வெளியிடும் அதிகாரம் இலங்கை தர நிர்ணய சபைக்கு மாத்திரமே உள்ளதெனவும் தெரிவித்திருந்தார்.

ஜாதிக ஹெல உறுமயவில் உள்ள உறுப்பினர்களை வைத்து அடிக்கடி வேறு அமைப்புக்களை உருவாக்கும் பழக்கம் சம்பிக்கவிடம் காணப்பட்டது. 2014ஆம் ஆண்டு இவ்வகையில் அதுரலிய ரத்ன தேரர் பிவிதுரு ஹெடக் அமைப்பினை உருவாக்கினார். ஞானசார தேரர் ஜாதிக ஹெல உறுமயவை விட்டு விலகி ஐ.தே.க.யில் இணைந்து கொண்டதையும் நாம் சம்பிக்கவின் திட்டமொன்றாக நோக்கலாம்.

ஜாதிக ஹெல உறுமயவின் வாக்கு வங்கி சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உடைந்து வந்த பகுதியொன்றல்ல என்றும் அது ஐ.தே.க.யிலிருந்து உடைந்து வந்த பகுதியொன்றாகவே சம்பிக்க உள்ளிட்ட அக்கட்சியின் தலைமைகள் எப்பொழுதும் நம்பிய விடயமாகக் காணப்பட்டது. அதனால் ஜாதிக ஹெல உறுமயவின் மறைகரமொன்று ஐ.தே.க.வுக்குள் செயற்படுவது அவர்களுக்கு சகல வழிகளிலும் அதிஷ்டமாகக் காணப்பட்டது. எனவே ஞானசார தேரரும் ஜாதிக ஹெல உறுமயவின் ஒப்பந்தமொன்றிற்கு அமையவே ஐ.தே.கட்சிக்குள் நுழைந்திருப்பார் என்பது எனது கருத்து.

எது எவ்வாறிருப்பினும், ஞானசார தேரர் முதற் தடவையாக 2012இல் ஹலால் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தே பிரபல்யம் அடைய ஆரம்பித்தார். ஞானசார தேரர் காட்டுமிராண்டித் தனமான பேச்சு முறையில் வன்முறை மிக்க ஒருவராக செயல்படுவதாலேயே எல்லோரினதும் அவதானத்தைப் பெற்றார். சகல தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் ஒளிபரப்பட்ட இக் காட்டுமிராண்டித் தேரரின் பெயரைக் கூட அப்போதைய ஊடகவியலாளர்கள் சரியாகத் தெரிந்திருக்கவில்லை.

யுத்த சமயத்தில் பிரிவினைவாதத்திற்கெதிராக மக்களை விழிப்பூட்டி அவர்களை ஒன்றுபடுத்தியதன் மூலம் பெரும்பாலான தேரர்கள் பிரபல்யம் அடைந்த போதிலும் கலகொடஅத்தே ஞானசார என்னும் தேரர் தொடர்பில் எவரும் அறிந்திருக்கவில்லை. ஞானசார தேரர் மக்களுக்கு உபதேசம் செய்தமையினாலோ, பிரித் ஓதியமையினாலோ, எழுத்தாளராக உள்ளமையினாலோ, பௌத்த அறிஞர் ஒருவராக இருக்கின்றமையினாலோ புகழ் பெறவில்லை. வன்முறையினாலும் காட்டுமிராண்டித்தனத்தினாலுமே அவர் இன்று புகழை பெற்றுள்ளார்.

இலங்கையில் மாத்திரமல்ல, முழு உலகிலும் குடிபோதையில் வாகனம் செலுத்தி, விபத்தொன்றை ஏற்படுத்தி, நீதிமன்றில் தவறை ஒப்புக்கொண்ட, உபசம்பதா பெற்ற, ஒரேயொரு தேரராக இவர் இருப்பதின் மூலமாவது பிரபல்யம் அடைந்திருக்கவில்லை.

2012 வரையில் எவரும் அறிந்திருக்காத இத்தேரருக்கு 2011 முதல் அமெரிக்காவிற்குள் விரும்பியவாறு நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் முடியுமான வகையில் 'மல்டிபல் ரீ என்ட்ரீ வீசா' வழங்கப்பட்டிருந்தது. 1980களில் என். சத்தியேந்திரன் போன்ற தமிழ் பிரிவினைவாதிகளுக்கும் அமெரிக்காவினால் இவ்வாறான வீசா வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாட்டின் தேரர் சமூகத்திற்குள்ளால் தாக்கத்தை ஏற்படுத்தாமல் தமது குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என மேற்கத்தேய சக்திகள் 2002 ஆம் ஆண்டாகும்போது புரிந்து வைத்திருந்தது. முன்னர் நோர்வே அரசாங்கத்தின் அரச சார்பற்ற அமைப்பொன்றின் பிரதானியாகச் செயற்பட்ட குமார் ரூபசிங்க அவர்கள், நோர்வே 2004 சுனாமி அனர்த்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, பௌத்த விகாரைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதியுதவியை அளித்து, ஆரம்பத்தில் பிக்குமார்கள் மத்தியில். தாக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள முனைந்ததாக என்னிடம் தெரிவித்தார்.

இச்செயற்திட்டத்தின் ஓர் அங்கமாகவே ஞானசார தேரரும் நோர்வே சுற்றுப் பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

(பக்.06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்



# அதிகார மோகமும் அரசியலமைப்பு மாற்றமும்

2015 இல் நடைபெற்ற தேர்தல்களின் போது சூடு பறக்க விவாதிக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்றம் நல்லாட்சியின் இரண்டாண்டு நிறைவில் மீளவும் பேசுபொருளாகியுள்ளது. ஆட்சியைக் கையேற்று ஒரு வருடத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வினை முன்வைக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்று மைத்திரியும் அவரது கூட்டணியினரும் வாக்குறுதியளித்திருந்தனர். அதன் பிரகாரமே சிறுபான்மை மக்களின் வாக்குகள் மைத்திரிக்குக் கிடைத்தன.

இரண்டாண்டுகள் நிறைவடைந்தும் புதிய அரசியலமைப்போ மாற்றங்களுடன் கூடிய அரசியலமைப்போ இதுவரை முன்வைக்கப்படவில்லை. ஆனால், அரசியலமைப்பு சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் பாராளுமன்ற விவாதத்திற்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறை, பௌத்த மதத்திற்கான இடம் போன்ற விவகாரங்கள் சிங்கள பௌத்த சமூகத்திற்கு முக்கியமானவை. குறிப்பாக, இரு பெரும் கட்சிகளின் இருப்புக்கு இவற்றைக் கவனமாகக் கையாள்வது அவசியமானது.

இதன் அர்த்தம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இம்மூன்றும் கவனம் குவிக்கத் தேவையில்லாதவை என்பதல்ல. இவற்றை விட பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்தல், இன விகிதாசாரத்திற்கு ஏற்ற தொழில், கல்வி, உரிமைகளைப் பெறல், காணி-பொலிஸ் அதிகாரம், மத-கலாசார உரிமைகள் என்பன சிறுபான்மை சமூகங்களைப் பொறுத்தமட்டில் அதீத முக்கியத்துவம் வாய்ந்தவை.

எவ்வாறாயினும், தற்போது வரையப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அரசியலமைப்பு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது எந்தளவு சாத்தியமாகும் என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு அல்லது திருத்தப்பட்ட அரசியலமைப்பு இரு பிரதான சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையின் பிரதான பௌத்த மத பீடங்கள் புதிய அரசிலமைப்பையோ இருக்கும் அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதையோ தீவிரமாக எதிர்த்து வருகின்றன. உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கு மக்களை வீதிக்கு இறக்குவோம் என மத பீடங்கள் எச்சரித்துள்ளன.

மதவாதிகள் அரசியலைக் கையில் எடுப்பது ஆபத்தானது என்று பிரதமர் எச்சரித்துள்ளார். ஆயினும் மத்வத்த, அஸ்கிரிய, அமரபுர, ராமன்ய ஆகிய பௌத்த மதபீடங்கள் அரசியலமைப்பு மாற்றத்தை எதிர்க்கின்றன.



பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் இருந்து வரும் இடம் இல்லாதொழிக்கப்படப் போகின்றது என இப்பீடங்கள் புரளியைக் கிளப்புகின்றன. அதனைக் காரணமாக வைத்து இலங்கை அரசின் ஒற்றைத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது எனவும் கூறுகின்றன.

ஏற்கனவே தமிழ்த் தரப்பு இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் சமஷ்டி முறையைக் கோரி வந்தது. தற்போது இணைப்பு சாத்தியமில்லை என்பதை உணர்ந்துள்ள தமிழ்த் தரப்பு, ஆகக் குறைந்த பட்சம் பொலிஸ், காணி அதிகாரங்களேனும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வருகின்றது.

இத்தகைய குழப்பமான தருணத்திலேயே மத பீடங்கள் களத்தில் இறங்குகின்றன. 'அத' எனும் சிங்களப் பத்திரிகைக்கு தென்மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரர் வழங்கியுள்ள நேர்காணலொன்றில், இலங்கையில் தற்போது சிங்கள பௌத்த தீவிரவாதம் பரவி வருவதற்கான காரணம் அரசு செயலிழந்து போனமையே என்கிறார்.

''இந்த அரசு மறைமுகமாக அடிப்படைவாதிகளுக்கு வாய்ப்பளித்திருப்பதாகவே எங்களுக்குத் தோன்றுகிறது. அரசு செயலிழந்து விட்டதை சிங்கள பௌத்தர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் உணர்ந்துள்ளனர். இது எல்லா அடிப்படைவாதிகளுக்கும் வாய்ப்பாக அமைந்து விட்டது. சிங்கள பௌத்த சக்தி மஹிந்த ராஜபக்ஷவின் பிடியில் உள்ளது. அதனைச் செயற்படுத்தும் ஒரு ஊடகமாக பொதுபலசேனா அமைப்பு இயக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது'' என்கிறார் அவர்.

இத்தகைய மத பீடங்களைத் தாஜா பண்ணுவதில் ஜனாதிபதியும் பிரதமரும் பெரும் தர்ம சங்கடங்களை எதிர்கொண்டுள்ளனர். பௌத்த விகாரைகளுக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதியும் பிரதமரும் பௌத்த மதத்திற்கு புதிய அரசியலமைப்பிலும் முதன்மை வழங்கப்படும் என கூறி வருகின்றனர். ஆனால், இவ்வாக்குறுதி பௌத்த மதகுருக்களை ஆசுவாசப்படுத்தவில்லை. அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் எனவும் அதிகாரம் பகிரப்படக் கூடாது எனவும் கிளர்ந்தெழுகின்றனர். இதற்கு மேல் அவர்களைப் பகைப்பது எதிர்கால வாக்கு வங்கியை கணிசமாகப் பாதிக்கும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் உணர்கின்றனர்.

கடந்த கால இலங்கையின் அரசியல் வரலாற்றில் சமாதானத் தீர்வுத் திட்டங்களை தீயிட்டுக் கொளுத்தியவர்களும் குழப்பியடித்தவர்களும் தேரர்கள்தான் என்பதை நாம் இங்கு நினைவுகூர வேண்டும்.

எதிர்வரும் செப்டம்பருடன் சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான தேசிய அரசாங்கத்திற்கான ஒப்பந்தம் நிறைவு பெறுகின்றது. அதனை முன்னிறுத்தி நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து எதிர்வரும் செப்டம்பருடன் தாம் வெளியேறப் போவதாக 15 அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்கனவே ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர். இவர்கள் அனைவரும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதனால் செப்டம்பருக்குப் பின்னர் தேசிய நல்லிணக்க அரசுக்கு என்ன நடக்கும் என்பது நிச்சயமற்ற கேள்வியாகும்.

அமைச்சரவையில் இடம்பெறும் சில ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் நடந்துகொள்ளும் முறையே தாம் வெளியேறிச் செல்வதற்கான காரணம் எனவும் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். நல்லாட்சி அரசாங்கத்திற்குள் எதிரும் புதிருமான விவாதங்கள் தீவிரமடைந்துள்ளன. அமைச்சர்கள் அமைதி காக்குமாறு பிரதமர் வேண்டியுள்ளார்.

இதற்கிடையில் ஐ.தே.க. அமைச்சர்களான சாகல ரத்னாயக்க, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோரை ஜனாதிபதி எச்சரித்துள்ளார். பங்களாதேஷ் பயணமாவதற்கு முன்பாகவே இவ்விருவரும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கின்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றனர். இதனால் சந்திரிக்காவின் காலத்தில் இடம்பெற்றது போன்று பாராளுமன்றம் திடீர் தேர்லொன்றுக்காகக் கலைக்கப்படுமா என்ற சந்தேகம் கூட எழுகின்றது. ஆனால், அதற்கான வாய்ப்பில்லை.

19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி தற்போதைய பாராளுமன்றத்தை 2020 வரை ஜனாதிபதியால் கலைக்க முடியாது. செப்டம்பருடன் புரிந்துணர்வு உடன்படிக்கை முடிவுக்கு வந்து, ஒட்டுமொத்த சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களும் அரசாங்கத்தை விட்டு வெளியேறினாலும் தேர்தல் நடைபெறாது. ஐ.தே.கட்சியைப் பலப்படுத்துவதற்கே சுதந்திரக் கட்சியின் வெளியேற்றம் வழிகோலும்.

ஏனெனில், சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களே வெளியேறுவதாக அச்சுறுத்துகின்றனர். அவர்கள் அனைவரும் போல் வெளியேறினாலும் ஐ.தே.க.வுக்கு 107 ஆசனங்கள் உள்ளன. பாராளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அவர்களுக்கு இன்னும் 06 ஆசனங்களே தேவை. அதற்கென அவர்கள் தமிழ்த் தேசிய கூட்டணியின் ஆதரவினைப் பெறலாம். ஆகவே இறுதியில் நஷ்டமடையப் போவது சிறி லங்கா சுதந்திரக் கட்சியே.

எவ்வாறாயினும், ஆக இறுதியில் தோல்வியடையப் போவது இலங்கை தேசமே. ஏனெனில், உத்தேச அரசியல் அமைப்புக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. தற்போதைய அரசியல் இழுபறியினால் இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவினைப் பெறுவது கடினமாகி விடும். இதனால் இலங்கை அரசியல் மீளவும் 40 ஆண்டுகள் பின்நோக்கிச் செல்லும் ஆபத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

எல்லாவற்றுக்குப் பின்னால் இருப்பது தனிப்பட்ட சுயநலம் கொண்ட அதிகார மோகமே.

# கல்வித் துறையில் நிலவும் மூன்று அடிப்படைப் பிரச்சினைகள்

இலங்கையில் வருடாந்தம் சுமார் இரண்டரை இலட்சம் மாணவர்கள் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அவர்களுள் 16 வீதத்திற்கும் குறைவானவர்களே அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவு அனுமதி பெறுகின்றனர். Z புள்ளி முறையின் மூலம் மாணவர்கள் தரப்படுத்தப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் Z புள்ளியின் அடிப்படையிலேயே மாணவர் அனுமதி தீர்மானிக்கப்படுகின்றது. இதன் மூலம் நகர்ப் புறங்களிலோ கிராமப் புறங்களிலோ அதிக Z புள்ளியைப் பெறுகின்றவர் மூன்றாம் நிலைக் கல்விக்கான வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆனால், உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த இலட்சக்கணக்கான மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களில் நுழைவு வாய்ப்பை இழக்கின்றார். இதனால் அவர்கள் தனியார் மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அரச பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறுகின்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு பட்டதாரிகள் கலை மற்றும் சமூகவியல் துறைகளிலிருந்தே வெளியாகின்றனர். இதனால் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை உயர்ந்து செல்கின்றது. குறிப்பாக கலைப்பட்டதாரிகள்.



இதனால் கலைத் துறை தொடர்பான ஒரு தவறான புரிந்தல் மாணவர்களிடையே வளர்ந்துள்ளது. கலைத் துறையைப் படிக்கின்ற மாணவர்கள் கெட்டித்தனம் அற்றவர்கள், பொறியியல் மற்றும் மருத்துவத்துறை மாணவர்களோடு ஒப்பிடும்போது அவர்கள் நுண்ணறிவு குறைந்தவர்கள் எனும் மனப்பான்மையை வளர்க்கின்றது.

ஏனைய துறைசார் மாணவர்களை விட கலைத் துறை மாணவர்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினை என்னவெனில், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் விஞ்ஞான, தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான ஆசிரியர்கள் போதுமானதாய் இல்லை. அதன் விளைவாகவே இம்மாணவர்கள் கலைத்துறையைத் தேர்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

நாட்டிலுள்ள 10200 அரச பாடசாலைகளில் 10 வீதத்திற்கும் குறைவான பாடசாலைகளே கலை, வணிகம், விஞ்ஞானம் பொறியியல் ஆகிய நான்கு பிரிவு [illegible] கொண்டுள்ளன. 2015 இல் வெளிவந்த தேசிய மனித அபிவிருத்தி அறிக்கையின்படி, அநேகமான மாணவர்கள் கலைத் துறையில் கற்பதற்கு ஆர்வமற்றவர்கள். ஆனால், தமது பாடசாலைகளில் அதைத் தவிர வேறு தெரிவில்லை என்பதனால் கலைப் பிரிவை தெரிவுசெய்கின்றனர்.

ஜனாதிபதி மைத்ரியின் ஆணைக்குழு அறிக்கையின்படி நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் விஞ்ஞான, பொறியியல் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது. ஆயினும், அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

இலங்கையில் கல்வி முறை எதிர்கொள்ளும் இரண்டாவது பிரச்சினை இலவசக் கல்விக்கு ஏற்பட்டு வரும் பாதிப்பாகும். இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையில் இருப்பினும், சாதாரண தர, உயர் தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடிச் செல்கின்றனர். இந்த வகுப்புகள் மிகவும் செலவு மிக்கவை. இலவசக் கல்வியை கேள்விக்குள்ளாக்குகின்றவை.

ஏற்கனவே இலவசக் கல்வியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தினால் தனியார் வகுப்புக்கான தேவை ஏற்படாது என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆயினும், அவை நடைமுறைக்கு வரவில்லை. கல்வி வணிகச் சரக்காக மாற்றப்பட்டுள்ளது. தனியார் வகுப்பறைகளை மேற்பார்வை செய்வதற்கான பொறிமுறை கூட உருவாக்கப்படவில்லை.

நடைமுறைக் கல்வியும் பால் நிலை சார் விழிப்புணர்வும் இலங்கைக் கல்வி முறையில் உள்ளடக்கப்படவில்லை என்பதும் மற்றொரு குறைபாடாகும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் பலாத்காரங்கள் அதிகரித்துச் செல்லும் நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். கல்வியின் மூலம் பால் நிலை நீதி மற்றும் சமத்துவம் உருவாக்கப்படவில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், வல்லுறவுச் சம்பவங்கள் இலங்கையில் 14.5 வீதம் உள்ளது என்று ஐ.நா. அறிக்கை கூறுகின்றது.

பாடசாலைக் கலைத் திட்டமானது ஆண்-பெண் சமத்துவத்தை உறுதிசெய்யவில்லை என்று குற்றம் சாட்டப்படுகின்றது. கொள்கை வகுப்பின் மூலமே இம்மூன்று பிரதான பிரச்சினைகளையும் தீர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியன் பக்கீர் மக்கர்

# யதார்த்தத்தை புரிந்து செயற்பட வேண்டும்

இன்று அல் அக்ஸாவில் ஏற்பட்டுள்ள நிகழ்வு மிகவும் கவலைக்குரியது. கடந்த வெள்ளியன்று ஜும்ஆ தொழுகையை கூட நடாத்த முடியாத சூழல் அங்கு உருப்பெற்றுள்ளது. யூதர்கள் பலஸ்தீனுக்குள் தங்களது ஆக்கிரமிப்பை அதிகரித்திருப்பதே அதற்குரிய காரணமாகும்.

ஒருபக்கத்தில் கடும்போக்குவாத வலதுசாரிகள் பலஸ்தீனுக்குள் அடக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். சர்வதேச ரீதியில் பலஸ்தீனுக்குள்ள ஆதரவை இல்லாமல் செய்வதற்காக வேண்டி சியோனிஸவாதிகள் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டு வருகிறார்கள்.

உலகம் முழுவதிலும் இஸ்லாமோஃபோபியாவை ஏற்படுத்துவதன் ஓர் அங்கமாகவே ஆர்வலர்கள் இதனை நோக்குகிறார்கள். அதன் மூலம் பல்வேறு நாடுகளில் முஸ்லிம் எதிர்ப்பை அதிகரிப்பதன் மூலம் தமக்கு விரும்பிய வகையில் அந்நாடுகளில் வெளிநாட்டுக் கொள்கையை வடிவமைத்துக்கொள்கிறார்கள். குறிப்பாக இன்று ஆசியா, ஆபிரிக்க கண்டங்களில் இந்நடவடிக்கை பாரியளவில் முன்னெடுக்கப்படுகிறது

தற்பொழுது மத்திய கிழக்கு வலயத்திலும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் செயல்கள் மிக சூசகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கட்டார் நெருக்கடியை இதற்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம். ஹமாஸுக்கும் அல்ஜஸீராவுக்கும் எதிரான பிரசாரங்கள் அரபுலகில் வலுத்துவருகிறது.

ஹமாஸின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான மூஸா அபூ மர்சூக் தெரிவித்த கருத்து இங்கு நினைவுகூறத்தக்கது. "அரபுலகின் ராஜதந்திர நெருக்கடி பிராந்தியத்தின் உள்ளக விடயம். ஹமாஸின் அவதானம் பலஸ்தீன் மீதும் ஜெரூஸலத்தின் மீதும் உள்ளது. அவ்வடிப்படை இலக்கிலிருந்து நாம் தூர விலகுவதில்லை. பலஸ்தீன் தேசிய ஒற்றுமை மற்றும் பலஸ்தீன் மக்களின் நல்லிணக்கம் போன்றவையே எமது குறிக்கோள். நாம் சியோனிஸவாதிகள் மீதே ஆயுதத்தை பிரயோகிக்கின்றோம். நாம் எதிர்வரும் காலத்திலும் பலஸ்தீன் விடுதலைக்காக வேண்டி போராடுகிறோம். கிளர்ந்தெழுகிறோம்" ஹமாஸின் பயணம் தெளிவானது.

ஹமாஸை இலக்கு வைத்து முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத கருத்துக்கள் தொடர்பில் கட்டார் வெளிவிவகார அமைச்சர் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் அல்தானி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஹமாஸின் அரசியல் தலைவர்கள் கட்டாரில் தங்கியிருப்பது பலஸ்தீன் ஒற்றுமைக்காக வேண்டி நாம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதினாலாகும். எமது பிராந்திய நாடுகள் அமெரிக்காவுடன் தொடர்புற்று அந்நடவடிக்கையை அவர்களுடன் இணைக்கும் செயற்பாடே இது. பலஸ்தீனில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை இது. நாம் ஹமாஸ் அமைப்பினை அமெரிக்கா பார்ப்பது போல் பயங்கரவாத அமைப்பாக பார்ப்பதில்லை. நாம் அவர்களை தாய் நாட்டிற்காக போராடும் போராளிகளாகவே நோக்குகிறோம். நாம் ஹமாஸிற்கு ஒத்துழைப்பதில்லை. நாம் பலஸ்தீன் மக்களுக்கே ஆதரவு வழங்குகின்றோம்".

அன்று தென்னாபிரிக்க சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்திய நெல்சன் மண்டேலா உள்ளிட்ட சுதந்திரப் போராளிகளுக்கு எவ்வாறு பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டதோ அதே போன்று பலஸ்தீன விடுதலைக்காகப் போராடுபவர்களுக்கும் இன்று பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் போலி முத்திரைகளை குத்துவதில் அர்த்தமில்லை. நாம் அத்தகைய மூடுதிரையை கிழித்தெறிய வேண்டும். அதற்கப்பாலான ஆழத்தை புரிந்து செயற்பட வேண்டும். போலித்தகவல்களை பிரசாரப்படுத்துகின்ற ஏகாதிபத்தியவாதிகள் தரும் கண்ணாடிகளை நாம் அணிந்து கொண்டு யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

"ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப் பிடியுங்கள்."

## பொது பல சேனா... (04ம் பக்கத் தொடர்)

எவராலும் அசைக்க முடியாத பெருந் தூணாகக் காணப்பட்ட ராஜபக்ஷ அரசாங்கத்தை முதலில் நிலைகுலையச் செய்தது பொதுபலசேனாவாகும். பொதுவாக வாக்குச் சாவடிக்குச் செல்லாத கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களை கூட வாக்களிக்கச் செல்ல வைத்து, ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வாக்களிக்க வைத்தவர் ஞானசார தேரராவார். 2015 ஜனவரி 08 ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்தே மேற்படி திட்டம் அம்பலமானது.

2015 மார்ச் மாதமளவில் ஜாதிக ஹெல உறுமயவின் மிக முக்கிய செயற்பாட்டாளர்களுள் ஒருவரான அசோக அபேகுணவர்தன அவ்வாட்சி மாற்றம் இடம்பெற்ற முறை தொடர்பில் 'யுக மாற்றம்' என்னும் பெயரில் நூலொன்றை வெளியிட்டுள்ளார். ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய, பொதுபலசேனாவைப் பயன்படுத்திய விதம் தொடர்பாக அந்நூலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஹெடிகல்லே விமலசார தேரர் தந்திரோபாயமான முறையில் ஜாதிக உறுமயவிலிருந்து நீக்கப்பட்டு பொதுபலசேனாவில் இணைக்கப்பட்டார். ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகியிருப்பதாக விமலசார தேரர் காட்டிக் கொண்டாலும் ஹெல உறுமயவின் உள்ளக உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில் இவர் தொடர்ந்தும் பங்குபற்றி வந்துள்ளார். ஞானசார தேரருக்கு அருகிலிருந்து அவரை வழிநடத்துவதே விமலசார தேரரின் பணியாகக் காணப்பட்டது.

2014 இல் பல அரசியல் மாற்றங்கள் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய அவதானம் செலுத்தியது. இதில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சம்பிக்க ரணவக்க சிங்கள பௌத்த வேட்பாளராகக் களமிறங்கி, மஹிந்த ராஜபக்ஷவினது வாக்கு வங்கியை சிதைத்து, எதிராளிக்கு வெற்றியை தேடிக் கொடுப்பதற்குரிய பேச்சுவார்த்தையும் இடம்பெற்றுள்ளது. அவ்வேளையில் பொதுபலசேனாவின் பங்களிப்பு சம்பிக்கவுக்கு மிக முக்கிய அதிஷ்டமாக அமையும் என்றும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பொதுபலசேனா ராஜபக்ஷாக்களின் உருவாக்கம் என்பதாக ஒரு சிலர் நினைத்துக் கொண்டிருந்தாலும் உண்மையில் அது, ராஜபக்ஷாக்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் கைப்பாவையொன்றாகும். எதிராளியை அழிப்பதற்குரிய இலகுவான வழிமுறை வெளியால் தாக்குவதல்ல, உள்ளால் அழிப்பதாகும் என்கின்ற கூற்றுக்கு இதன் மூலம் புதியதொரு அர்த்தம் கிடைக்கிறது.

கிறிஸ்தவ, முஸ்லிம் வழிபாட்டுத் தளங்களை தாக்கி, அம்மக்களின் வாக்குகளை முழுமையாக மறுபக்கத்திற்கு அனுப்பியதன் பின்னர், தேசிய ஹெல உறுமயவும் ராஜபக்ஷாக்களை விட்டு விட்டு மறுபக்கத்திற்குச் சென்றது. எனினும் பொதுபல சேனா தொடர்ந்தும் ராஜபக்ஷாக்களுடன் இருப்பதாகக் காட்டிக்கொண்டது. சம்பிக்க சென்றதன் பின்னர், 'சம்பிக்க அண்ணா! எங்களை ஏன் விட்டுச் சென்றீர்கள்? என ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஞானசார தேரர் நகைச்சுவையாக கேள்வியெழுப்பியது இங்கு நினைவுகூரத்தக்கது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொதுபலசேனாவை வழிநடாத்தி வந்த ஹெடிகல்லே விமலசார தேரர் பொ.ப.சேனாவிலிருந்து விலகி மீண்டும் ஜாதிக ஹெல உறுமயவில் இணைந்துகொண்டார். தற்பொழுது இவர் ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆட்சி மாற்றத்திற்கு அயராது உழைத்தமைக்காக வேண்டி ஞானசார தேரருக்கும் பரிசொன்றை வழங்க வேண்டும் என ராஜித சேனாரத்ன ஒரு தடவை என்னிடம் தெரிவித்திருந்தார்.

2017 ஜூன் 16 ஆம் திகதி பொதுபலசேனா நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், ஞானசார தேரர் முன்பு ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாட்டாளராக இருந்ததாகவும் அவரை சம்பிக்க ரணவக்கவும் அதுரலியே ரத்ன தேரருமே வன்முறைகளில் ஈடுபடுத்தியதாகவும் சம்பிக்கவின் ஒப்பந்தமொன்றை நிறைவேற்றியமையினாலேயே அவர் இன்றுள்ள நிலைமைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் அவ்வமைப்பின் நிறைவேற்றதிகாரி டிலன்த விதானகே ஒப்புக்கொண்டார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறைகளுக்கு மத்தியில் ஜாதிக ஹெல உறுமயவினால் ஞானசார தேரரை நெறியாள்கை செய்வதற்கு அனுப்பப்பட்டிருந்த ஹெடிகல்லே விமலசார தேரரின் செயற்பாடுகளை விவரித்த டிலன்த விதானகே, ஞானசார தேரர் ஊடகவியலாளர் சந்திப்பில் கூற வேண்டிய விடயங்களை அவர்கள் கஷ்டப்பட்டு எழுதிக் கொடுத்தாலும் மேசையில் அமர்ந்த பின்னர் விமலசார தேரர், ஞானசாரவின் அருகில் உட்கார்ந்து பேச வேண்டிய விடயங்களை இரசகியமாக சொல்லிக் கொடுத்ததாகவும் இறுதியில் அவர்கள் எழுதிக் கொடுத்த விடயங்கள் ஒருபுறத்தில் இருக்க, விமலசார தேரருக்கு அவசியமான விடயங்களை ஞானசார தேரர் கூறியதாகவும் தெரிவித்தார்.

தற்போது மீண்டும் ஒருமுறை பொதுபலசேனா செயற்பாட்டுக் களத்தில் குதித்திருப்பது இவ்வா[illegible] பௌத்த வாக்கு அடிப்படையில் ஒரு பகுதியையேனும் ஜாதிக ஹெல உறுமயவிற்கு உடைத்துக் கொடுக்கும் நோக்கிலாகும் என்பது தெளிவானது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சம்பிக்க ரணவக்க மீண்டும் பாராளுமன்றத்திற்குத் தெரிவாக வேண்டுமெனில், ஐ.தே.க. ஆதரவு வாக்குப் பலத்திற்கு மேலதிகமான பிறிதொரு வாக்கு அடிப்படையும் அவருக்குக் காணப்பட வேண்டும். பொதுபலசேனாவை மீண்டும் நடுவீதிக்கு இறக்கி முஸ்லிம்களின் பள்ளிவாயல்களுக்கும் வியாபார நிலையங்களுக்கும் தாக்குதல் நடாத்தி, முஸ்லிம் தீவிரவாதிகள் வடகிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் முக்கியத்தும் மிக்க காணிகளை அபகரிக்கிறார்கள் என்கின்ற கருத்துக்களை பரப்பும்போது நாட்டிலுள்ள ஒரு சிலரை தம்பக்கம் திசைதிருப்பிக் கொள்ளலாம் என்பது அவர்களது நம்பிக்கையாக உள்ளது.

தற்போதைய அரசின் கீழ் தமிழ், முஸ்லிம் தலைமைகள் முன்பிருந்ததை விட பலம் பெற்றுள்ளார்கள். அதற்கான காரணம், ராஜபக்ஷ அரசை தோற்கடித்து, சிங்களப் பெரும்பான்மையின் விருப்பமின்றி, தமிழ், முஸ்லிம் பெரும்பான்மையினால் மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளமையாகும். பொதுபலசேனாவை ஈடுபடுத்தி சகல கிறிஸ்தவ, முஸ்லிம் வாக்குகளையும் சிறிசேனாவுக்கு ஒன்றுதிரட்டிக் கொடுத்த பெருமை ஜாதிக ஹெல உறுமயவைச் சாரும். தற்பொழுது இவர்களாலேயே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அந்நிலைமையிலிருந்து பிரயோசனம் பெற்று சிங்கள வாக்குகளை உடைப்பதற்கு முயற்சிப்பதன் மூலம், நாம் இலங்கை அரசியலில் இதற்கு முன்னர் கண்டிராத வகையில், மிகவும் சூரர்களாக, கலகத்தை ஏற்படுத்தும் சூழ்ச்சிக்காரர்களே இவர்கள் என்பது எல்லோருக்கும் தெளிவாகிறது.

சிங்களவர்கள் தொடர்பில் நல்லாட்சி அரசிலோ, ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியிலோ ஒருவரும் குரல் எழுப்புவதில்லை என்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் அனுசரணையில் வடமாகாணத்தில் வனவிலங்கு சரணாலயங்கள் அழிக்கப்பட்டு அங்கு முஸ்லிம்கள் குடியமர்த்தப்படுவதாகவும் கிழக்கு மாகாணத்தில் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பில் தொல்பொருள் முக்கியத்துவமிக்க நிலங்கள் சட்டவிரோதமாகக் கைப்பற்றப்பட்டு வருவதாகவும் அப்பகுதிகளிலுள்ள அரசாங்க அதிகாரிகள் அச்சத்தின் காரணமாக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருப்பதாகவும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் அச்சப்படுவதாகவும் தெரிவிக்கின்ற போது அதைச் செவிமடுக்கின்றவர்கள் அவை உண்மையென்றே நினைப்பர்.

விக்னேஷ்வரனும் சிவாஜிலிங்கமும் வடக்கில் தீவிரவாத கருத்துக்களை தெரிவிக்கும் போது மௌனமாக இருக்கின்ற அரசாங்கம், ஞானசார தேரர் முஸ்லிம் தீவிரவாதம் குறித்து கதைக்கின்ற போது கைதுசெய்ய முயற்சிப்பது சிங்களவர்களுக்கு வேறுபாடு காட்டும் செயலல்லவா என நினைப்பார்கள். எனினும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் பலம்பெரும் அளவிற்கு களம் அமைத்தது பொதுபலசேனாவும் ஜாதிக ஹெல உறுமயவும் இணைந்து செய்த செயற்பாடுகள் என்பதை பகுத்தறிவுள்ள எல்லோரும் புரிந்திருப்பர்.

முஸ்லிம் எதிர்ப்பை மேலெழுப்பி சிங்கள வாக்குப் பலத்தை உடைக்கும் திட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்களித்துள்ளார் என்பது விளங்குகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கும் மைத்திரிபால எதிர்பார்த்துள்ளார் என்பது தெளிவான விடயம்.

இவரது ஆளுகையின் கீழ் தமிழ், முஸ்லிம் தலைமைகள் பலமடைந்துள்ள காரணத்தினால் மீண்டும் அவருக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறுவது அவ்வளவு கடினமான விடயமாக அமையாது. எனினும், சிங்கள வாக்குகள் அதிகளவில் எதிரணி வேட்பாளருக்குக் கிடைத்தால் அவருக்கு வெற்றிபெறுவது கடினமாக அமையும். இதனால் சிங்கள வாக்குகளில் ஒரு பகுதி ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியல்லாத ஏனைய அணியொன்றிற்குச் செல்லுமாக இருந்தால் அது அவருக்குச் சாதகமாக அமையும்.

ஜனாதிபதிக்கு தெரியாமல் அமைச்சர் ஒருவர் ஞானசார தேரரரை மறைத்துக் கொண்டிருக்க முடியாது. அத்தோடு ஜனாதிபதியின் நேரடி தலையீடின்றி, ஞானசார தேரருக்கு ஒரு நாளைக்குள் 3 வழக்குகளில் பிணை பெற முடியாது. எனவே இங்கு முழுமையான அரசியல் தேவையொன்றிற்கமைய இடம்பெற்ற விளையாட்டொன்றாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.

2017 ஜூன் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகல்கந்தே சூதத்த தேரர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஞானசார தேரர் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தார். எனவே இவர்கள் எதற்குத் தயாராகின்றார்கள் என்பது விளங்க வேண்டும். 2015 இற்கு முன்னர் கிறிஸ்தவ, முஸ்லிம் வாக்குகளை மறுபுறம் [illegible] தோற்கடிக்க நடவடிக்கை எடுத்ததன் பின்பு, தற்பொழுது சிங்கள வாக்குகளைச் சிதைத்து தேசியவாத தலைமையொன்று மீண்டும் அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்கும் ஒப்பந்தத்தை கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறார்கள். 2015 ஆகஸ்ட் பொதுத் தேர்தலில் இவர்கள் தனியாகப் போட்டியிட்டது எதிரணி வேட்பாளர்களின் வாக்குகளை உடைப்பதற்கேயன்றி வேறு எதற்கு?

வேறு எவரும் சிங்களவர்கள் பற்றிப் பேசுவதில்லை என்றும் தாம் மாத்திரமே சிங்களர்கள் தொடர்பில் கதைத்து வருவதாகவும் பொதுபலசேனா தெரிவிக்கின்றது. பொதுபலசேனாவின் செயற்பாடுகளினால் சிங்களவர்கள் பலம்பெற்றுள்ளார்களா இல்லாவிட்டால் பலவீனமுற்றுள்ளார்களா என்பதை சிங்களவர்கள் தமக்குள் கேள்வியெழுப்பிக் கொள்ள வேண்டும். பொதுபலசேனா உருவாக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் அவர்கள் பேசி வந்த ஒரு பிரச்சினைக்காவது தீர்வு கிடைத்துள்ளதா? இல்லாவிட்டால் அப்பிரச்சினை இருந்த நிலையையும் விட அதிகரித்துள்ளதா?

பொ.ப.சேனா எதைச் செய்தாலும் அது சிங்களவர்களை கீழே தள்ளிவிடுவதற்கும் சிங்களவர்களின் எதிரிகளை பலப்படுத்துவதற்குமே தூண்டுகோளாய் அமைகின்றது என்பதை சிங்களவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அறபு நாட்டிலுள்ளவர்களை விடவும் தந்திரமானவர்கள். அவர்கள் பதற்றத்துடன் முடிவுகளை எடுப்பதில்லை. அவர்களது கோஷ்டிவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் பொறுமையுடனும் மதிநுட்பத்துடனுமே பதிலளிக்க வேண்டும். சிங்கள தலைவர்கள் கதைக்காத விடயங்கள் தொடர்பில் பொ.ப.சேனா கதைப்பதாகக் கூறி அவர்கள் முஸ்லிம் தீவிரவாதிகளை இருந்த நிலையையும் விட பலப்படுத்தியுள்ளார்கள்.

இலங்கையை பிளவுபடுத்தக் காத்திருக்கின்ற தமிழ் டயஸ்போராக்கள் மாத்திரமல்ல அத்திட்டத்திற்குத் தூண்டுதல் அளிக்கும் மேற்குலக நாடுகளும், இலங்கையை தனது காலனித்துவத்திற்கு கீழ் கொண்டு வரும் எதிர்பார்ப்பிலுள்ள இந்தியாவும், ராஜபக்ஷ அரசை தோற்கடித்து தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் முனைப்பில் உள்ள சந்தர்ப்பத்தில் அவ்வரசாங்கத்தை நிலைகுலையச் செய்து, எதிரிகளுக்கு நாட்டை காட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சம்பிக்க ரணவக்க, அதுரலிய ரத்ன தேரர், ஞானசார தேரர் போன்றோர் தாங்கள் எவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என்பதை முழு உலகிற்கும் காண்பித்துள்ளார்கள்.

அதுரலிய மற்றும் ஞானசார தேரர்கள் கடந்த காலப்பகுதியில் சம்பிக்க ரணவக்க கூறிய விடயங்களை செய்வார்கள் என்றால் பொ.ப.சேனா அரசியலிலிருந்து ஒதுங்குவதற்கு தயார் என்பதாக மாகல்கந்தே சூதத்த தேரர் 2017 ஜூன் 20 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். இவ்வனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது அவர்கள் ஒரே மாதிரியான அரசியலை செய்வதின் மூலம் தெளிவாகிறது.

இச்சகல விடயங்களிலும் ஞானசார தேரர் வேறு நபர்களால் வழிநடாத்தப்படுகின்ற ஒருவர் மாத்திரமேயாவார். ஞானசார தேரர் ஹிருணிகாவின் சாதனையை தகர்த்து பிணை பெறும்போது அதற்காக வேண்டி முன்னின்ற உலப்பனே சுமங்கல தேரர், நல்லாட்சி முகாமில் மிகப் பிரபலமான ஒருவர். ஞானசார தேரர் முன்னர் ஹெடிகல்லே விமலசார தேரரினால் நெறியாள்கை செய்யப்பட்டார் என நாம் முன்பு கூறினோம். 2012 இல் ஞானசார தேரர் நோர்வேயிலிருந்து வந்ததன் பின்னர் ஹலால் எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு அமைச்சர் ராஜித சேனாரத்னவுடனும் கலாநிதி குமார் ரூபசிங்கவுடனும் இணைந்து அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பானதொரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்ததாகவும் அதற்காக வேண்டி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் பிக்குமார் சம்மேளனமொன்றை ஏற்பாடு செய்வதற்கும் ஞானசார தேரர் உடன்பட்டிருந்ததாகவும் ராஜித சேனாரத்ன என்னிடம் தெரிவித்திருந்தார். அத்தகவல் அனைத்தும் 'த ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரமாகியது.

ஞானசார தேரருக்கு அவசியமானவற்றை கொடுத்தால் எவருக்கும் அவரால் பிரயோசனம் பெற முடியும். கிழக்கு மாகாணத்திற்கு சென்று தொல்பொருள் அழிவைப் பற்றி மாத்திரம் கதைக்காமல் 'அல்லாஹ்கே லப்ப' தொடர்பாகவும் கதைக்கின்ற போது முழு உலகிற்கும் 'லப்பே' என்னும் கதையே பரவுமே ஒழிய குறிப்பிட்ட விடயமல்ல. பொதுபலசேனா கையடித்த சகல விடயங்களுக்கும் அதுவே நடந்தது. பொதுபலசேனாவின் சகல செயற்பாடுகளின் மூலமும் சிங்களவர்களின் எதிரிகளே பலம்பெறுகிறார்கள் என்பதை சகல சிங்களவர்களும் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

ஞானசார தேரர் காவியுடையை உயர்த்திக் கொண்டு தகாத வார்த்தைகளைக் கூறுகின்ற போது அதனால் தூண்டப்படும் ஆவேசமுடையோருக்கும் புரிந்துணர்வின்மையினால் இவ்வாறான அமைப்புக்கள் மீது கவரப்படுகின்ற இளைஞர்களுக்கும் இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும். சிங்களவர்கள் புத்தியை பயன்படுத்தாவிட்டால் முழு நாடும் இனமும் அழிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.தே.க.வுக்கும் சு.க.வுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவுவதனாலேயே அரசியலமைப்பு தாமதமாகிறது

**ரில்வின் சில்வா**
பொதுச் செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

நேர்கண்டவர்: ஹெட்டி றம்ஸி

- **அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு என்ன?**

1978 இல் ஜே.ஆர் உருவாக்கிய அரசியலமைப்பே அமுலில் உள்ளது. இது ஜனநாயக விழுமியங்களை மீறுகின்ற ஒரு யாப்பு. இவ்வரசியலமைப்பு தற்பொழுது 19 தடவைகள் சீர்திருத்தப்பட்டுள்ளது. இவ்வரசியலமைப்பையும் விட மிகவும் ஜனநாயகத் தன்மை பொருந்திய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசியலமைப்பிற்குப் பதிலாக சிறந்ததொரு அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். முதலாளித்துவ சாயல் படிந்த அரசியலமைப்பே உருவாக்கப்பட்டு வருகிறது.

என்றாலும் தற்போதைய யாப்பிலுள்ள விடயங்களையும் விட சிறந்த அமைப்பில் புதிய யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

- **அரசியலமைப்பு உருவாக்கத்தினை அரசாங்கம் ஏன் காலம் கடத்தி வருகின்றது?**

அரசாங்கத்தின் சகல விடயங்களும் இலக்கில்லாமல் நகர்ந்துகொண்டுள்ளன. அரசாங்கத்தை வழிநடத்தும் இரு கட்சிகளுக்கிடையில் ஒருமைப்பாடில்லை. அரசாங்கத்தின் சகல பணிகளிலும் தாமதத்தைக் காண முடிகிறது. இவ்வரசின் பொதுவானதொரு இயல்பாக இது உள்ளது.

அரசியலமைப்பு உருவாக்கத்தில் காணப்படுகின்ற தடங்கல்களைப் போக்கி முன்னகர்த்த வேண்டிய தேவைப்பாடு இரு கட்சிகளிடமும் இல்லை. விட்டுக்கொடுப்பில்லை. ஐ.தே.கட்சிக்கும் சுதந்திர கட்சிக்கும் மத்தியில் உள்ளக கருத்து முரண்பாடுகள் நிலவுவதும் தாமதங்களுக்குரிய காரணங்களாகக் குறிப்பிடலாம்.

- **நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசியலமைப்பிற்கூடாக தீர்வுகளை காண முடியாதா? பிரச்சினைகளை தீர்ப்பதற்கு புதிதாகவே அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமா?**

உண்மையில் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியலமைப்பொன்று தேவைப்படுவதில்லை. பொருளாதார நெருக்கடி, சமூகப் பிரச்சினைகள், கழிவு மற்றும் டெங்கு தொற்று போன்றவற்றுக்கான தீர்வுகள் யாப்பில் சொல்லப்படவில்லை. அரசியலமைப்பில் உள்ளடங்குகின்ற விடயங்களில் பிரச்சினைகள் உள்ளன. ஜனநாயகம் அரசியலமைப்பினூடாக பாதுகாக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் யாப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவற்றைப் பாதுகாப்பதற்கு எமக்கு அரசியலமைப்பு தேவைப்படுகின்றது.

எவ்வளவோ அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு அல்லது டெங்கு தொற்றுக்கு அதனால் தீர்வு காண முடியாது. அதற்கு அரசாங்கத்திடம் மாற்றுத் திட்டங்கள் காணப்பட வேண்டும். அரசியலமைப்பு உருவாக்கப்படுவதினால் நாட்டின் பிரச்சினைகள் திடீரென ஒய்ந்துவிடுவதில்லை. ஆனால் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதின் மூலம் ஜனநாயகத்தையும் ஐக்கியத்தையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க முடிகின்றது. இவற்றுக்காக வேண்டியே அரசியலமைப்பு தேவைப்படுகிறது.

- **சர்வதேசத்தின் தேவைப் பிரகாரமே அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் இடம்பெற்று வருகின்றது. இக்கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

அரசியலமைப்பு உருவாக்கத்தில் சர்வதேச சக்திகளின் தலையீடு இருப்பதாக ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள். அது எந்தளவு யதார்த்தம் மிக்கதென எமக்குத் தெரியாது. சிலபோது அரசியலமைப்பொன்றை உருவாக்குமாறு சர்வதேசமும் அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கலாம். சர்வதேசத்திற்கு அவசியமான யாப்பை உருவாக்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துவதில்லை. 1978 இல் ஜே.ஆர் உருவாக்கிய ஜனநாயக விரோத, மனிதாபிமானமற்ற, சர்வாதிகாரியை உருவாக்குகின்ற யாப்புக்குப் பதிலாக மக்கள் ஆணையை மதிக்கின்ற, அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற, மக்கள் இறைமைக்கு கூடுதல் அவகாசம் அளிக்கும் அரசியலமைப்பை கொண்டுவர முடியுமாக இருந்தால் சிறந்தது.

- **அரசியலமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்ளடங்கப்பட வேண்டும்?**

அரசியலமைப்பில் மிக முக்கியமான 4 விடயங்கள் உள்ளடங்கப்பட வேண்டும். முதலில் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும். இரண்டாவது, புதிய தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மூன்றாவது, மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நான்காவது, எமது நாட்டில் வெவ்வேறு இன மக்கள் உள்ளார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அவர்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- **1978 மற்றும் அதற்கு முன்னைய யாப்புகள் உருவாக்கப்பட்ட போது மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பிக்குகள் அவற்றுக்குத் தடங்கல் விளைவித்தார்கள். இன்றும் அந்நிலையை காண முடிகின்றதல்லவா? இது தொடர்பில் உங்களது அவதானம் என்ன?**

மகாநாயக்க தேரர்கள் அடிக்கடி சில கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். நாடெனும் வகையில் அவற்றையும் செவிமடுக்க வேண்டும். மறுபக்கத்தில் நல்லதொரு அரசியலமைப்பை வரைந்து மக்களுக்கும் சர்வ மதத் தலைவர்களுக்கும் முன்வைத்ததன் பின்பு அவ்வரசியலமைப்பு சிறந்ததென்றால் யாருக்கும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது.

ஆனால் பிரச்சினை என்னவெனில், அரசியலமைப்பொன்றும் இல்லை, நகல் வரைவொன்றும் இல்லை. அதுதொடர்பில் பலர் வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். அக்கருத்துக்களை அடிப்படையாக வைத்தே ஒவ்வொருவரும் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜனநாயக பூர்வமானதொரு அரசியல் வரைவை தயாரித்து, முன்வைத்ததன் பின்பு அது தொடர்பில் தமது எதிர்ப்பையோ சார்பு நிலையையோ தெரிவிக்க முடியும்.

- **அரசியலமைப்பு உருவாக்கம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?**

அரசியலமைப்பு நகல் வரைவு இன்னும் பூர்த்தியாகவில்லை. ஒவ்வொரு துறைக்குமான முன்மொழிவுகள் மாத்திரமே பெறப்பட்டுள்ளன.

- **நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவாத வன்முறைகள் சர்வதேசத்தின் சூழ்ச்சி என்பதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகிறார். இவ்வரசாங்கத்தின் கீழும் அது இடம்பெற்று வருகின்றது. உண்மையில் அது சூழ்ச்சிதானா அல்லது ராஜபக்ஷாக்களின் கூட்டுச் சதியா?**

இலங்கையின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு சர்வதேச சூழ்ச்சி என்கிற முத்திரை குத்தப்படுகிறது. பெரும்பாலும் அவை நிஜமாகவும் இருக்கலாம். எமது நாட்டில் பிரதானமாக மூன்று இனக் குழுக்கள் வாழ்கின்றன. அவ்வினங்களுள் இனவாத ரீதியில் சிந்திப்பவர்கள் உள்ளார்கள். இனவாதத்தை பயன்படுத்தி அதிகாரத்திற்கு வர முயற்சிப்பவர்கள் உள்ளார்கள். இதனால் இன ரீதியான பிரச்சினைகளும் வெடிக்கின்றன. அதில் மதத் தீவிரவாதமும் தொடர்படுகிறது.

தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களுக்கு மத்தியில் தீவிரவாதக் குழுக்கள் காணப்படுகின்றன. ஒரு தீவிரவாதத்தினை [illegible] போஷிக்கப்படுகின்றது. உதாரணமாக வடக்கில் தமிழ் இனவாதிகள் ஏதாவதொரு கருத்தைக் கூறினால் அது தெற்கிலுள்ள சிங்கள இனவாதிகளுக்குக் கொளுத்த தீனியாய் அமைகிறது. எல்லா இனவாதமும் நாட்டின் ஐக்கியத்தைப் பாதிக்கும் விடயங்களாகவே காணப்படுகின்றன. நாம் சகல இனவாதங்களையும் மதத் தீவிரவாதங்களையும் எதிர்க்கிறோம். மதங்களை எதிர்க்க மாட்டோம். சகல மதங்களையும் மதித்து வருகிறோம்.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கம் குறுகிய சில நோக்கங்களுக்கு இனவாதத்தையும் மதவாதத்தையும் போஷித்தது. தற்பொழுதும் அதனையே செய்து வருகிறார்கள். தற்போதைய அரசில் ஒரு சிலர் இனவாதத்தை பயன்படுத்துகிறார்கள். பொதுவாக அரசாங்கங்கள் இனவாதத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. வில்பத்து காடழிப்பு தொடர்பில் பாரியதொரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அது இனவாத ரீதியாகவே முன்னகர்த்தப்பட்டது. இனவாதப் பார்வையிலேயே அதற்கு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு ஏதாவது சட்டவிரோதமான விடயம் இடம்பெற்றிருப்பதாக இருந்தால் அரசாங்கம் தலையிட்டு சிங்களவரோ தமிழரோ முஸ்லிமோ என்பதைக் கண்டறிந்து அந்தந் தவறை நிறுத்தியிருந்தால் அங்கு இனவாதப் பிரச்சினையொன்று மேலெழுவதில்லை. அரசாங்கம் தலையிடாததால் இனவாதிகள் அதைக் கையில் எடுத்து சுவைத்து வருகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக ஒரு கருத்து உள்ளது. அரசாங்கம் இதில் தலையிட்டு தொல்பொருளியலாளர்களை அங்கு அனுப்பி பரிசோதனைகளை மேற்கொண்டு உண்மையில் அங்கு தொல்பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைக் கண்டறிந்து சரியான அறிக்கையை முன்வைத்தால் அங்கு கிழக்கை மையப்படுத்திய இனவாத்திற்கு இடமில்லாமல் போயிருக்கும்.

முஸ்லிம் பள்ளிவாயல்களும் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டன. அரசாங்கம் ஆமை வேகத்திலேயே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. நாட்டில் ஒரு பிரச்சினை ஏற்படுகின்றபோது அரசாங்கம் சட்டம், ஒழுங்கை அமுல்படுத்தாத போதே இனவாதிகள் அதை கையில் எடுக்கிறார்கள். அரசாங்கம் இனவாதப் பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடிய பிரச்சினைகளுக்கு உடனடியாக தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும்.

உதாரணமாக சிங்களவன் சிங்களவனுக்கு அடித்தால் அது இனவாதமல்ல. அது சிவில் கேஸ். ஆனால் ஒரு முஸ்லிம் சிங்களவனுக்கு அடித்தால் அது இனவாதமாகவே பார்க்கப்படுகிறது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசு உடனடியாக தலையிட்டு பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும். அரசின் தாமதமே இனவாதப் பிரச்சினைகள் கூர்மையடைவதற்குக் காரணமாய் அமைகின்றது.

- **அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உங்களது அபிப்ராயங்கள் என்ன?**

உண்மையில் கடந்த அரசாங்கங்களுடன் இவ்வரசாங்கத்தை ஒப்பிட முடியாது. இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வர முன்பு மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தது. அவை ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களுக்கு நிவாரணம் அளிப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் தற்பொழுது பொருளாதாரம் வீழ்சியடைந்து மக்கள் மீது அதிக வரி சுமத்தப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ காலப்பகுதியில் புரியப்பட்ட ஊழல்கள் நிறுத்தப்படுவதாகவும் ஊழல் மோசடிப் பேர்வழிகளுக்குத் தக்க தண்டனை வழங்குவதாகவும் கூறப்பட்டது. ஆனால் மத்திய வங்கி திறைசேறி முறிகளில் மோசடி இடம்பெற்றது. துறைமுகத்தில் பல ஊழல்கள் புரியப்பட்டுள்ளன. இவ்வரசாங்கத்திலும் அமைச்சர்கள் பலர் முதலீட்ட ஆரம்பித்துள்ளார்கள்.

கடந்த காலப்பகுதியில் புரியப்பட்ட மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் மெதுவாகவே இடம்பெற்று வருகிறது. அவர்களுக்குத் தேவையானவர்களைக் காப்பாற்றுகிறார்கள். தேவையற்றவர்களை சும்மா விடுகிறார்கள். ஜனநாயகம், நல்லாட்சி என்கின்ற விடயங்களும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் மீதான மக்களின் வேண்டுகோள்கள் பலமாகக் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு சைட்டம் எதிர்ப்புப் போராட்டத்தைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தலையிடவில்லை. கழிவுப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் [illegible] வழங்கவில்லை.

(பக்.14)



## எழுவாய், மயமிலை

அபூ ஷாமில்

## யா சகமே!

யா ரப்பு, யா அல்லாஹ், யா ரஹ்மான், யா அமான் என்ற கோஷங்களும் ரமழானும் நம்மை விட்டும் போய்விட்டன. ஆனாலும் யாசகம் கேட்கும் கோஷங்கள் மட்டும் ரமழானுக்குப் பின்னரும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பள்ளிவாசல் மிம்பர்கள் தொடர்ச்சியாக இந்த ரமழான் பிச்சை பற்றி குரலெழுப்பியதன் விளைவாக தற்பொழுது ரமழானில் யாசகம் கேட்கும் பட்டாளத்தின் நீளம் தேய்ந்து போயிருக்கிறது. ரமழான் காலத்துக்கென முஸ்லிமல்லாதவர்களையும் பயிற்றுவித்து ஒப்பந்த அடிப்படையில் யாசகம் கேட்க வைத்து பணம் திரட்டும் கும்பல்கள் பற்றியும் நாட்டிலே பரவலான கதைகள் கடந்த காலங்களில் பரவியிருந்தன. ஏன், எதற்கு, யார், எவர் என்ற எந்தத் தேடலுமின்றி "அஸ்ஸலாமு அலைக்கும், ஹதியா தாங்கம்மா" என்று சொன்னவுடனேயே எதையோ கொடுத்து விட்டு தப்பிவிடும் உப்புச் சப்பில்லாத பழக்கத்தினால் இவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு சமூகத்தினால் முடியவில்லை.

ஆற அமர அண்டை வீட்டாருடன் பேசக் கூட கொடுத்து வைக்காத சமூகத்திடம் வீட்டுக்கு முன் வந்து நிற்பவர்களைப் பற்றியெல்லாம் தேடிப் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது வடிகட்டிய சோனகத்தனம். ஆனால் இப்படிப் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் முஸ்லிமே அல்லாத பலரும் இந்த ஹதியாக் கும்பலுடன் வந்து விட்டுப் போயிருப்பது பல இடங்களில் பட்டவர்த்தனமாகியுள்ளது.

இந்த நிலையில் வீட்டுக்கு முன்னால் வந்து நின்று யாசகம் கேட்பவர்களை சற்று குசலம் விசாரிப்பது பல விடயங்களை நம் முன்னால் அவிழ்த்து விடும். இது சமூகத்தின் பாதுகாப்புக்கான ஒரு வழியாகவும் அமையும்.

இதில் மற்றுமொரு பயனும் இருக்கிறது. அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் புசிப்பவன் முஸ்லிமாக மாட்டான் என்று சொல்லுகின்ற மார்க்கத்தைத்தான் இலங்கையில் நாங்கள் பின்பற்றுகிறோம். நமது வீட்டின் முன்னால் குழந்தை குட்டிகளுடன் வந்து நிற்கின்ற தாய்மார் நிச்சயமாக யாரோ ஒரு முஸ்லிமுடைய அண்டை வீட்டினராகத்தான் இருப்பார்கள். விசாரித்துப் பார்த்தால் தனது கடமையை சரியாகச் செய்யாமல் உண்மையான முஸ்லிமாகவன்றி வாழ்கின்றவர் யார் என்பதை நம்மால் தேடிக் கண்டு பிடிக்க முடியும். அவர்களை அணுகி அவர்களது கடமையை அவர்களுக்கு நம்மால் ஞாபகப்படுத்த முடியும்.

அண்டை வீட்டானும் மிஸ்கீனாக இருந்தால் என்ன செய்வது? அப்படியானால் அந்த ஊரின் நிர்வாகத்திலே பிரச்சினை இருக்கிறது. அந்த ஊரிலிருந்து யாராவது யாசகம் கேட்டு வெளியே சென்றால் அது அந்த ஊரிலுள்ள அனைவரதும் செயற்பாட்டில் குறைவை எடுத்துக் காட்டுகிறது. அதனால் இப்படியான யாசகர்களைக் கண்டறிந்து அவர்களை அவர்களது ஊருக்கே பொறுப்புச் சாட்டி விடும் வேலையை இந்த உசாவுதல் மூலமாக நம்மால் செய்ய முடியும்.

வெலம்பொட ஸக்காத் கமிட்டியினர் ஒரு தீர்மானம் எடுத்திருக்கிறார்கள். தங்களது ஊரிலிருந்து யாரும் வெளியே யாசகம் கேட்டுச் செல்லக் கூடாது. அப்படி யாராவது எங்களது ஊரிலிருந்து உங்களது ஊர்களுக்கு வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று அவர்கள் பொதுத் தளத்திலே ஓர் அறிவித்தல் கொடுத்தார்கள். இப்படிச் சொல்லுகின்ற தைரியம் எல்லா ஊர்களுக்கும் வருமாக இருந்தால், ரமழானில் கடைவழியே அலையும் முந்தானைகளுக்கு முடிச்சுப் போட முடியும்.

நீங்கள் எந்த ஊர், எந்த மஹல்லா என்று நாங்கள் அவர்களை விசாரிக்க முடிந்தால் குறித்த மஹல்லாவின் வேலைகளில் ஒன்றாக இவர்களின் மீது அக்கறை செலுத்த வேண்டிய விடயத்தையும் நாங்கள் ஒப்படைக்க முடியும். மணிக்கணக்காக மக்களின் முன்னால் முழங்குவதனால் மட்டும் சமூக மாற்றங்கள் வந்து விடப் போவதில்லை. இதனால் ரஸூலுல்லாஹ்வின் வாழ்க்கை வழிமுறையில் பயான்கள் அதிகம் இருந்ததில்லை. எனவே சமூகச் செயற்பாட்டில் அனைவரையும் ஈடுபடுத்துவதற்கு ஒவ்வொருவரும் வழங்குகின்ற ஒத்துழைப்பாக இந்த விசாரணைகள் அமையும்.

சமூகத்தின் அசைவியக்கத்தை சமூகமே முன்னின்றுதான் செய்விக்க வேண்டும். வேறு யாரோ வந்து செயற்படட்டும் என்று மிம்பர்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தால் கண்மணி நாயகத்தின் புகழ் பாடுவதற்கும் இங்கு ஆட்கள் இருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐவரி கோஸ்ட் முன்னாள் அதிபர் லாரண்ட் பெக்போ விடுதலை



2010 இல் ஐவரிகோஸ்டில் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் தோல்வியடைந்ததாகக் கருதப்பட்ட லாரண்ட் கபாக்போ மீதான கொடூரமான தேர்தல் வன்முறைக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு சிறையில் இருந்து விடுதலை பெறக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

72 வயதை எட்டியிருக்கும் ஐவரி கோஸ்ட் முன்னாள் அதிபர் லாரண்ட் கபாக்போ 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் தாம் வெற்றிபெற்றதாக சுயபிரகடனம் செய்திருந்தார். எனினும் அந்தத் தேர்தல் முடிவுகளை பிரான்ஸ், அமெரிக்கா உட்பட ஐ.நா. சபையும் நிராகரித்திருந்ததோடு எதிர்க்கட்சி வேட்பாளரான ஒட்டாராவே வெற்றியீட்டியதாக அறிவித்திருந்தன.

தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் ஐவரிகோஸ்டில் இடம்பெற்ற தேர்தல் கால வன்முறைச் சம்பவங்கள் மற்றும் 3000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் முன்னாள் அதிபர் லாரண்ட் கபாக்போ உள்ளாகியிருந்தார்.

2011 ஏப்ரலில் கைது செய்யப்பட்டு அவர் மீது தொடரப்பட்ட விசாரணைகளின் பின்னர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். தன் மீதான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் மறுத்து வந்த கபாக்போ இன்று (19, ஜூலை) இடம்பெறவுள்ள இறுதிக் கட்ட விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தோனேசியாவில் ஓர் இஸ்லாமிய அமைப்புக்குத் தடை



இந்தோனேசியாவில் பரவலாகச் செயற்படும் ஹிஸ்புத் தஹ்ரீர் இயக்கம் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளது. அரசியல் இஸ்லாம் இயக்கமொன்றாகக் கருதப்படும் ஹிஸ்புத் தஹ்ரீர் அமைப்பு மீதான இத்தடையைத் தொடர்ந்து மேலும் பல இஸ்லாமியக் குழுக்கள் மீதும் தடைகள் தொடரலாம் என கருதப்படுகிறது.

கடந்த புதனன்று இஸ்லாமிய ஷரீஆவை அமுல்படுத்தவும் கிலாபத்தை உருவாக்க வேண்டுமெனவும் ஹிஸ்புத் தஹ்ரீர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தே ஜனாதிபதியின் விஷேட ஆணையின் கீழ் இந்தத் தடை நடவடிக்கை அமுலாக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் சுஹார்ட்டோவின் சர்வாதிகார ஆட்சிக்குப் பிந்திய அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் சட்டபூர்வமான முன்னெடுப்புகளின்றி நேரடியாக ஜனாதிபதியின் ஆணையின் கீழ் இடம்பெற்ற தடை நடவடிக்கையாக இது உள்ளதாக இந்தோனேசிய சட்டத்துறை நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான இவ்வடக்குமுறை நடவடிக்கையை சட்டரீதியாக தாம் எதிர்கொள்ளவுள்ளதாக அவ்வமைப்பின் இந்தோனேசியாவுக்கான பேச்சாளர் இஸ்மாயீல் யூஸான்ட்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசப் பார்வை

# கட்டார் விடயத்தில் தோற்றுப் போகும் சவூதிக் கூட்டணியின் இராஜதந்திரம்



கட்டார் மீதான பொருளாதாரத் தடை விவகாரங்கள் கடந்த பல வாரங்களாக சர்வதேச ஊடகங்களை ஆக்கிரமித்திருந்த நிலையில், சவூதி - எமிரேட்ஸ் உள்ளிட்ட கூட்டணியின் இராஜதந்திர அணுகுமுறைகள் தோல்வியடைந்து வருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப கட்டமாக பத்து நாட்கள் அவகாசத்துடன் 14 நிபந்தனைகள் அடங்கிய திட்டத்தினை சவூதிக் கூட்டணி விதித்திருந்தது. அல் ஜஸீரா ஊடகம் மற்றும் ஹமாஸ், இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பை முடக்கும் வகையிலான இந்த நிபந்தனைகள் தொடர்பில் முதிர்ச்சியுடன் நடந்து கொண்ட கட்டார் அரசாங்கம் நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தது.

எனினும் சவூதி கூட்டணி மேலும் இரு நாள் அவகாசம் வழங்கியிருந்த நிலையில் கட்டார் மீது திணிக்கப்பட்ட தடை நடவடிக்கைகள் எதிர்பார்த்த அரசியல், இராஜதந்திர விளைவுகள் எதனையும் சவூதிக்குத் தரவில்லை.

இந்நிலையில் 19 ஆம் திகதி புதிதாக முன்னர் இருந்ததை விடவும் வலுவற்ற அமைப்பில் ஆறு நிபந்தனைகளை விதித்து அவசரமாகத் தம்முடன் உடன்பாட்டுக்கு வருமாறு சவூதிக் கூட்டணி அறிவித்துள்ளது. இந்நிபந்தனைகள் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதில் கட்டார் தம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதைப் பிரதானமாகக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு கட்டாரை விட்டும் வெளியேற்றப்பட வேண்டப்பட்டிருந்த தனிநபர்கள் மற்றும் அமைப்புக்கள் எதுவும் குறிப்பிடப்படாது பொதுப் படையாகவே இந்நிபந்தனைகள் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# வெனிஸுவேலாவில் அடுத்து நடக்கப் போவது என்ன?

வெனிஸுவேலா அதிபர் நிக்கொலஸ் மதுரோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தீவிரமாகத் தொடரும் நிலையில் அடுத்த கட்டமாக அங்கு நிகழப்போவது என்ன என்ற அபாயமான கேள்வி எழுந்துள்ளது. சுமார் 109 நாட்கள் கடந்து இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் சுமார் 90 ஐத் தாண்டிய பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தை நோக்கி அறை கூவல் விடுத்துவரும் எதிர்க்கட்சியினர், நாடளாவிய ரீதியில் சகல துறையினரும் 24 மணிநேர வன்முறைகளற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். இறுதிக் கட்டமாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வரையிலும் பொதுமக்கள் தமக்கான அரசைத் தேர்வு செய்யும் வரையிலும் தமது போராட்டம் தொடருமென போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று இது குறித்து நடந்த உத்தியோகபூர்வமற்ற தேர்தலில் 7.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தம்மை ஆதரித்து வாக்களித்திருந்ததாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை அதிபர் நிக்கொலொஸ் மதுரோ எதிர்க்கட்சிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துள்ளதோடு வன்முறைகள் தொடர்ந்த போதிலும் தாம் திட்டமிட்டபடி புதிய அரசில் திருத் தங்களுக்கான சர்வஜன வாக்கெடுப்பு வருகின்ற ஜூலை 30ஆம் திகதி இடம்பெறுமெனவும் இதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாதெனவும் வெனிஸுவேலாலா வெளிவிவகார அமைச்சர் சாமுவேல் மொன்காடா அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பொது மக்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத விடுத்து பொருளாதாரத் தடைகள் குறித்துப் பரிசீலிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் [illegible] ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாலைத் தீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யாமினின் உறவினர் கைது



மாலைத் தீவுகளின் முன்னாள் ஜனாதிபதி மஃமூன் அப்துல் கையூமின் மகனும் பிரபல அரசியல்வாதியுமான பாரிஸ் மஃமூன் தேர்தல் தொடர்பான சதிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். மாலைத் தீவுகளின் ஜனாதிபதி அப்துல்லாஹ் யாமினின் பதவியைக் குறிவைத்துச் செயல்படுவதாக அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதியின் குடும்பத்தினருக்கும் பாரிஸ் மஃமூனுக்கும் இடையிலான பனிப்போர் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. இந்நிலையில் அவர் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்ற ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கூறி கடந்த செவ்வாய் (18) அன்று தலைநகர் மாலேயில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.

# மஸ்ஜிதுல் அக்ஸாவில் முதன் முதலாக ஜும்ஆத் தொழுகை தடுக்கப்பட்டது



1969 இல் மஸ்ஜிதுல் அக்ஸா சியோனிச யூதர்களால் கைப்பற்றப்பட்டது முதல் அங்கு ஜும்ஆ குத்பா பிரசங்கம் நடாத்தப்பட்டது ஆனால் 14/07/2017 முதல் முறையாக அது தடுக்கப்பட்டுள்ளது.

எனினும் மக்கள் குத்ஸ் நகர பாதைகளிலும் அக்ஸாவுக்கான வாயில்களில் ஜும்ஆவை தொழுதார்கள். அக்ஸாவில் தொழுவதற்கு அழைப்பு விடுத்த காரணத்தினால் குத்ஸின் இமாம் முப்தி ஷேக் முஹம்மத் ஹுஸைன் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்திலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா இன்னும் திறக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

# G-20 மாநாட்டில் ட்ரம்ப் - புட்டின் இரகசியப் சந்திப்பு




ஜேர்மனியில் இடம்பெற்ற G-20 மாநாட்டின் போது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் புட்டின் இடையே இரு சுற்றுக்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

மாநாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இடம்பெற்ற பேச்சுவார்த்தை [illegible] சந்திப்பு இரகசியமாக இடம் பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன. மேலும், இடம்பெற்ற இவ்விரண்டாவது சந்திப்பை மறைப்பதற்கு வெள்ளை மாளிகை முயற்சிப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எனினும் இச்செய்திகளை மறுத்து கடுமையான தொனியில் டொனால்ட் ட்ரம்ப் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் இஸ்ரேலிய விஜயம்

# சியோனிஸ-இந்துத்துவ பாசிசக் கூட்டு




• றவூப் ஸெய்ன்

ஜூலை 03 இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு மேற்கொண்ட 3 நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் பல அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான ரஜதந்திர உறவுகளின் 25 ஆண்டு நிறைவினை ஒட்டி மோடியின் இந்த விஜயம் அமைந்திருந்தது.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. 1950 இல் இஸ்ரேலை இந்தியா அங்கீகரித்தது. ஆயினும், 42 ஆண்டுகள் கடந்த நிலையில் 1992 ஆம் ஆண்டிலேயே இஸ்ரேலுடனான ராஜதந்திர உறவுகளை இந்தியா வளர்த்துக் கொள்ள ஆரம்பித்தது. அது பா.ஜ.க. அரசாங்கத்திலேயே நிகழ்ந்தது.

மோடி விஜயத்திற்கு முன்னர் இந்திய ஊடகங்கள் வழமை போன்று இஸ்ரேல்-இந்திய உறவுகளின் முக்கியத்துவத்தை புகழ்ந்து எழுதின. 2014 இல் மோடி பிரதமராகியதும் இந்திய-இஸ்ரேல் உறவுகள் மேலும் வலுவடைந்தன. இந்தியாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் டேனியல் கார்மென்ட், மோடியின் விஜயம் பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் புத்தாக்கம், விவசாயம், பாதுகாப்புத் துறை குறித்து கவனம் செலுத்தும் என்று தெரிவித்திருந்தார்.

நெடன்யாஹுவை சந்தித்த மோடி, மூடுண்ட அறைகளில் என்ன பேசினார் என்பது ஊடகங்களுக்கு வெளிவரவில்லை. இஸ்ரேலிய பாராளுமன்றமான நெசட்டிலும் அவர் உரையாற்றினார். இஸ்ரேலுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களில் ஈடுபடுவதே மோடியின் பிரதான குறிக்கோள். 2 பில்லியன் டொலர் பெறுமதியான பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் மோடி கைச்சாத்திட்டுள்ளார்.

ஏற்கனவே நாம் இஸ்ரேலுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றோம். இப்போது நாம் புதிய பரிமாணங்களை எட்டுவதற்கு முயற்சிக்கின்றோம் என பி.ஜே.பி. கட்சியின் வெளிவிவகார திணைக்கள அதிகாரி விஜய் சௌத்தைவால் அல் ஜஸீராவிடம் தெரிவித்தார். அது விவசாயம், குடிநீர் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

1992 இல் வெறும் 200 மில்லியன் டொலர்களாக இருந்த இந்திய இஸ்ரேல் இரு தரப்பு வணிகம் கடந்த ஆண்டில் 5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. இந்தியாவின் விவசாயத்தை விருத்தி செய்வதற்கும் இஸ்ரேலிய உதவி பெறப்படும் என மோடி கூறியுள்ளார்.

சர்வதேச அரசியலில் நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு ஒப்பந்தங்கள் சர்வ சாதாரணமானவை. ஆனால், மோடிக்கும் நெடன்யாஹுவுக்கும் இடையிலான சந்திப்பு மிகவும் ஆபத்தானது. சியோனிஸ இஸ்ரேலும் இந்துத்துவ இந்தியாவும் பல்வேறு புள்ளிகளில் ஒற்றுமைப்படுகின்றன. இஸ்ரேல் பலஸ்தீனர்களின் இரத்தத்தையும் நிலத்தையும் உறிஞ்சி உருவாக்கப்பட்ட ஒரு இனவாத நாடு. மறுபுறம், இந்தியா இன்று இந்து வெறியர்களின் கைகளில் திணறும் நாடு.

தனி இந்து தேசம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலேயே அன்று சாவர்கரும் மோதிலால் நேருவும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானை கூறுபோட்டனர். பழியை அலிஜின்னாவின் தலையில் போட்டனர். 400 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இன்றைய பி.ஜே.பி. இந்தியாவில் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் அழித்தொழிக்கும் நோக்கத்தோடு, படிமுறையாய் வளர்ந்து வந்து, இன்று அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்திய முஸ்லிம்களை பீதி நிறைந்ததும் இருள் மயமானதுமான நிலைக்குத் தள்ளும் போக்குடைய அரசியல் விஞ்ஞாபனத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் நடத்துவதை நாம் அறிவோம். ஏற்கனவே மோடி குஜராத்தின் முதல்வராய் பதிவி வகித்தபோது குஜராத் தீப்பற்றி எரிந்தது. 2002 இல் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட இனவெறி, 2000 முஸ்லிம்களை பலியெடுத்தது. அதற்கு அப்போதைய இஸ்ரேலிய அரசாங்கமே நிதி ஆதரவு அளித்தது என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை எழுதியிருந்தது.

காங்கிரஸ் ஆட்சியின்போது சியோனிஸ காட்டு தர்பாருடன் 15 ஆண்டுகளாக கள்ள உறவினை வைத்திருந்த மோடி, இப்போது நேரடியாகவே கைகோர்த்துள்ளார். இது இந்திய முஸ்லிம் சிறுபான்மைக்கு மட்டும் எதிரான பாசிசக் கூட்டு என்று நாம் விடயத்தின் பாரதூரத்தை குறுக்கி விடக் கூடாது.

ஒட்டுமொத்த பிராந்தியத்திலுமே பெரும் இராணுவப் பதட்டத்தையும் அரசியல் கொந்தளிப்பையும் இந்தக் கயவர்களின் கூட்டு உருவாக்கும் என்ற உண்மையை இலகுவில் நாம் தட்டிக் கழிக்க முடியாது.

இன்று 80,000 இந்தியர்கள் இஸ்ரேலில் வாழ்கின்றனர். இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்த துணைசெய்யும் என்கிறார் மோடி. ஆனால், அவர்கள் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பஜ்ரந்தள் போன்று இஸ்ரேலில் ஆயுத பயிற்சி பெறும் தீவிரவாதிகளாகக் கூட இருக்கலாம். ஏனெனில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் குறித்தும் மோடி பேசியுள்ளார். மோடியின் இஸ்ரேல் விஜயம் தெற்காசியாவுக்கே ஓர் அச்சுறுத்தலாம்.

முஸ்லிம்கள் உலகில் மிக அதிக எண்ணிக்கையில் வாழும் பிராந்தியம் இதுதான். இங்கு 600 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மத்திய கிழக்கில் கூட அவர்களின் தொகை 400 மில்லியன் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். தீண்டத்தகாத நாடு என்று காந்தியாலும் அம்பேத்கரினாலும் ஒதுக்கப்பட்ட இஸ்ரேலுடன் மோடி கொள்ளும் இந்த உறவுகள் முழுத் தென்னாசியாவுக்கும் ஆபத்தானதாகும்.

பா.ஜ.க. அரசாங்கத்திலேயே இஸ்ரேலுடனான உறவை இந்துத் தீவிரவாதிகள் வளர்த்துக் கொண்டனர். 1992 இல் இந்தத் தீய திருப்பம் நிகழ்ந்தது. 2002 இல் இஸ்ரேல் விண்வெளி நிலையமும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமும் ஒப்பந்தத்தில் ஈடுபட்டன. 2006 இல் விவசாய ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன. 2017 இல் 2.5 பில்லியன் டொலர் பெறுமதியான ஏவுகணை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன.

மோடி இந்துத் தேசியவாதத்தின் பிதாமகன். இந்திய முஸ்லிம்களை பீதி கொள்ளச் செய்யும் வகையில் ஏற்கனவே பல நாடகங்கள் அங்கு அரங்கேற்றப்படுகின்றன. ராமர் கோயில் அமைக்கும் திட்டத்தில் கரசேவகர்கள் [illegible] யாய் உள்ளனர். அவர்களுக்கு மோடி அரசு முழு ஊக்கம் தருகின்றது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற அரசியலமைப்பு ஷரத்தின் பிரிவு 307 ஐ நீக்கி விட்டு, முழு இந்தியாவுக்குமான பொது சிவில் சட்டக் கோவையை உருவாக்குவதற்கு இந்துத் தேசியவாதம் முயன்று வருகின்றது. இது மதச்சார்பற்ற இந்தியாவுக்கு மட்டுமன்றி, இந்திய முஸ்லிம் இருப்புக்கே அடிக்கப்படும் சாவுமணி.

குஜராத் முஸ்லிம்கள் மீது வன்கொடுமைகள் புரிந்து, முஸ்லிம்கள் கொல்லப்பட்ட கொதிப்பான, கொந்தளிப்பான தருணங்களில் பா.ஜ.க. ஆனந்தக் களிப்பில் திளைத்திருந்ததை நாம் அவ்வளவு இலகுவாக மறந்து விட முடியாது.

தேசிய மதவெறியைத் தூண்டுவதினால் இந்தியாவை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. தேசிய சொத்துக்களை கபளீகரம் செய்யும் பா.ஜ.க. எனப்படும் திருட்டுக் கும்பல் அரசியல் பிழைப்பு வாதத்திற்காக முஸ்லிம்களுக்கு எதிரான இனத் தேசியத்தைப் பரப்புகின்றது. இதே வேலையைத்தான் இன்று காஸாவிலும் மேற்குக் கரையிலும் நெடன்யாஹுவின் அரசியல் கட்சி மேற்கொள்கின்றது.

இஸ்லாமிய உலகை ஆக்கிரமிப்பதில் இந்தியாவும் இஸ்ரேலும் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. இந்தியா தனது அயல் நாடுகளை ஆக்கிரமித்து சிங்கப்பூரிலிருந்து சுயேஸ் கால்வாய் வரை தனது எல்லையை விஸ்தரித்து பெரும் வல்லரசாக மாற நினைக்கின்றது. அவ்வாறு இஸ்ரேல் நைல் நதில் முதல் யூப்ரடீஸ் தைகிரீஸ் நதிகள் வரையான ஓர் அகன்ற சாம்ராஜ்யக் கனவில் மிதக்கின்றது.

இதற்கும் அப்பால், இந்துத் தீவிரவாதத் தலைவர்கள் அறேபிய தீபகற்பம் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது எனவும், கஃபா ஆரம்பத்தில் இந்துக்களின் வணக்கஸ்தலமாக இருந்தது எனவும் வாதிக்கின்றனர். முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு வந்த பின்னர் இந்துக்களின் வணக்கஸ்தலம் கஃபாவாக மாற்றப்பட்டது எனவும், அதை மீட்க இந்துக்கள் போராட வேண்டும் எனவும் விஷமப் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஜம்மு காஷ்மீரில் மயிர்க் கூச்செறியும் படுகொலைகளை இந்திய இராணுவம் ஒவ்வொரு நாளும் கட்ட விழ்த்து விடுகின்றது. காஸாவில் அப்பாவி பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் குண்டுகளைப் போடுகின்றது. நிலங்களை ஆக்கிரமிக்கின்றது. பட்டினியில் போட்டுக் கொல்கின்றது.

ஒரு புறம் இந்துத்துவம், இன்னொரு புறம் சியோனிஸம். இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். இனவெறியிலும் ஒடுக்கு முறையிலும் உள்ளடக்கம் ஒன்றுதான். ஏன் அதன் குரூர வழிமுறைகளிலும் இரண்டும் ஒன்றுதான். யூத தேசத்தையும் இந்துத் தேசத்தையும் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் முஸ்லிம்களை பீதி கொள்ளச் செய்யும் நெடன்யாஹுவும் மோடியும் ஒரே வேலையைத்தான் செய்கின்றனர். இன்று இந்தியர்கள் இஸ்ரேலிய அரசுக்கு வழங்குகின்ற நிதி, காஸாவில் பலஸ்தீனர்களை சுட்டுத் தள்ளுவதற்கு உதவுகின்றது.

காங்கிரஸ் அரசு இதிலிருந்து மிகக் கவனமாக விலகிச் சென்றது. மோடியின் விஜயம் இந்தியாவை இந்துத் தேசியவாதிகளால் மட்டுமே ஆதரிக்கப்படுகின்றது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் குமார ஸ்வாமி, "இந்திய மக்கள் இந்த உறவை வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லை" என்கிறார். 2014 இல் பிஜே.பி. அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து மோடி நெடன்யாஹுவை நியூயோர்க்கிலும் பரிஸிலும் இரு முறை சந்தித்திருக்கிறார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவுகளே மிகவும் "வலுவானது என்கிறார் குமாரசுவாமி.

மற்றொரு அரசியல் ஆய்வாளர் விஜய் பிரசாத், "காங்கிரஸ் கட்சி அமெரிக்காவுடன் வைத்திருந்த உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இஸ்ரேலுடனான உறவை சுமுகமாக்குவதற்கு முயன்றது. டெல் அவிவினூடாக வொஷிங்டனைச் சென்றடையலாம் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இன்று இஸ்லாத்தை பயங்கரவாதத்தோடு அடையாளப்படுத்துவதில் பி.ஜே.பி.யும் இஸ்ரேலும் ஒரே அணியில் நிற்கின்றன."

இதற்கிடையில் இஸ்ரேலிய அரசை பி.ஜே.பி. ஆரத் தழுவியிருப்பதை இந்தியாவிலுள்ள பலஸ்தீன ஆதரவு சக்திகள் கடுமையாக விமர்சித்துள்ளன. இஸ்ரேலிய பொருட்களைப் பகிஷ்கரியுங்கள், முதலீடுகளை வாபஸ் பெறுங்கள் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதியுங்கள் என்ற கோஷத்தோடு செயல்படும் BDS இயக்கம் மோடியின் விஜயத்தைக் கண்டித்துள்ளது. காஸாவிலும் மேற்குக்கரையிலும் பலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளையே அப்பட்டமாக மீறும் இனவாத இஸ்ரேலோடு மோடி கொள்ளும் உறவு மிக ஆபத்தானது என்று அவர்கள் விமர்சித்துள்ளனர்.

சியோனிஸத்திற்கும் இந்துத்துவத்திற்கும் இடையில் நெருக்கமான சமாந்திரங்கள் உள்ளதாகக் கூறுகின்றார் இந்தியாவிலுள்ள BDS இயக்கத்தின் ஆதரவாளர் கீதா ஹரிகரன். இஸ்ரேலுடன் இந்தியா ஏற்படுத்தியுள்ள உறவுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான பலஸ்தீனர்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதிலிருந்து இந்தியாவை விலக்கி விட்டதாகக் கூறும் ஹரிகரன் இது மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம் என்கிறார்.

பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியை நியூயோர்க்கும் டெல்அவிவும் கையாளும் அதே பாணியில் நியூடில்லியும் கையாளத் தொடங்குகின்றது. மத்திய கிழக்கிலிருந்தே 60 வீதமான பெற்றோலியத்தை இந்தியாவுக்கு இறக்குமதி செய்யும் மோடி, நெடன் யாஹுவுடன் கைகோர்த்து பலஸ்தீனர்களைக் காட்டிக் கொடுப்பது மிகப் பெரிய அரசியல் துரோகம்" என்கிறார் ஹரிகரன்.

ஆனால், மோடிக்குத் துரோகம் என்ன புதிதா?



ஜம்மு காஷ்மீரில் மையிர்க் கூச்செறியும் படுகொலைகளை இந்திய இராணுவம் ஒவ்வொரு நாளும் கட்ட விழ்த்து விடுகின்றது. காஸாவில் அப்பாவி பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் குண்டுகளைப் போடுகின்றது. நிலங்களை ஆக்கிரமிக்கின்றது. பட்டினியில் போட்டுக் கொல்கின்றது. ஒரு புறம் இந்துத்துவம், இன்னொரு புறம் சியோனிஸம். இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

இனவெறியிலும் ஒடுக்கு முறையிலும் உள்ளடக்கம் ஒன்றுதான். ஏன் அதன் குரூர வழிமுறைகளிலும் இரண்டும் ஒன்றுதான். யூத தேசத்தையும் இந்துத் தேசத்தையும் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் முஸ்லிம்களை பீதி கொள்ளச் செய்யும் நெடன் யாஹுவும் மோடியும் ஒரே வேலையைத்தான் செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - முஸ்லிம் உறவின் எதிர்காலம்

• மொஹமட் பாதுஷா



போருக்குப் பின்னரான இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் பகைமறத்தல் பற்றியெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஓர் ஆணைக்குழுவை நியமித்தது. இனங்களுக்கு இடையில் உறவைப் பலப்படுத்தும் விதத்தில் அமைச்சுகளை உருவாக்கியது; அதிகாரிகளை நியமித்தது. இருப்பினும் நல்லிணக்கம் என்பது எதிர்பார்த்த அளவு ஏற்படவில்லை என்றே கூற வேண்டும்.

குறிப்பாக, நாட்டில் வாழ்கின்ற இரு சிறுபான்மை இனங்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சீர்குலைந்துள்ள உறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் இவ்விரு இனங்களும் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டுமென்றும் அரசியல், சமூக அரங்குகளில் இருந்து குரல்கள் உரக்கக் கேட்கின்றன.

ஆனால், இதற்காக விசேட வேலைத்திட்டங்களோ அல்லது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடுவில் உறவை எவ்வாறு சீர்செய்வது என்பது பற்றிய பரந்தளவிலான முயற்சிகளோ கட்டமைக்கப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்-முஸ்லிம் உறவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அதற்குக் காரணம், இவ்விரு இனங்களின் மக்களும் அன்றாடம் தமக்கிடையே மேற்கொள்கின்ற கொடுக்கல்-வாங்கல்களும் பேணுகின்ற தொடர்புகளும் ஆகும்.

எவ்வாறாயினும், இவ்விரு சமூகங்களுக்கும் இடையில் நீடித்து, நிலைத்திருந்து, பிற்காலத்தில் சிதைவடைந்து போயிருக்கின்ற உறவை, எல்லா மட்டங்களிலும் அறுதியும் உறுதியுமாக ஒட்ட வைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் பேச்சளவில் மட்டும் இருக்கின்ற காரணத்தாலும், உறவு எவ்வாறு சீர்குலைந்தது ஏன்பது தெரியாத காரணத்தாலும், தமிழ் - முஸ்லிம்களின் உறவு இன்னும் முழு அளவில் சீர்செய்யப்படவில்லை.

இவ்வாறு, கடந்தகால கசப்புணர்வுகள் களையப்பட்டு உறவு மீளக் கட்டியெழுப்பப்படாதிருக்கின்ற சூழ்நிலையில், எதிர்வரும் காலங்களில் இவ்விரு சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடையிலான உறவு எவ்வாறிருக்கும் என்பதை அனுமானிப்பது கடினமாக இருக்கின்றது.

இலங்கையில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவு மிகவும் தொன்மையானது. இதே உறவை சிங்கள மக்களுடனும் முஸ்லிம்கள் பேணி வந்தனர்.

முஸ்லிம்கள் காலனித்துவ சக்திகளுக்கு எதிராகச் சிங்கள மன்னர்களோடு தோளோடு தோள் நின்று போராடினார்கள். இந்தக் காரணத்துக்காக முஸ்லிம்களை வெள்ளையர்கள் பழிவாங்கும் நோக்கில் அணுகினர் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இதற்கு வேறுபல காரணிகளும் காரணங்களாக இருந்தன. அதாவது, முஸ்லிம்களின் கடல் மார்க்க வர்த்தகத்தைக் கைப்பற்றியே காலனித்துவ நாடுகள் வருமானம் உழைத்தமை; இலங்கைக்கு வந்த காலனித்துவ சக்திகளுக்குத் தென்கிழக்காசியாவில் பரவியிருந்த இஸ்லாமிய மதம், தம்முடைய மதத்தை விஸ்தரிப்பதற்கு இடையூறாக இருந்தமை; சிலுவை யுத்தத்துக்குப் பின்னர் மேற்குலகில் இஸ்லாத்துக்கு எதிராக ஏற்பட்டிருந்த எண்ணங்கள் போன்ற மேலும் பல விடயங்களும் இதற்குக் காரணங்களாக அமைந்தன எனக் குறிப்பிட முடியும்.

இதனால் முஸ்லிம்களை துரத்தியடிக்கும் பாங்கிலான அல்லது ,புறமொதுக்கும் வகையிலான செயற்பாட்டையே இலங்கையில் காலனித்துவ வெள்ளையர்கள் மேற்கொண்டார்கள். அந்த வேளைகளிலெல்லாம் சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். நாட்டின் பல பாகங்களுக்கும் பாதுகாப்பாக அனுப்பிவைத்து நிலங்களை வழங்கி குடியேற்றினார்கள்.

அதுகாலவரையும் சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற இனங்களாகவே இலங்கை மக்கள் வாழ்ந்தார்களே தவிர, இன ரீதியாக நோக்கும் போக்கோ அல்லது இன ரீதியாகச் சிந்திக்கும் மனோநிலையோ இருக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில்தான் ஓர் இனத்தின், மதத்தின் ஆசார நடைமுறைகளும் கலாசாரமும் மற்றைய இனங்களின் அன்றாட நடைமுறைகளாக, பழக்க வழக்கமாக மாற்றப்பட்டன என்றும் சொல்ல முடியும்.

1915 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரம் என்பது இலங்கையின் இனத்துவ கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உண்டு பண்ணியது.

இக்கலவரத்தின் பின்னர் முஸ்லிம்கள் தங்களை ஒரு தனித்துவ இனக் குழுமமாகக் கருதத் தொடங்கினர். தம்முடைய இனமும் வழிபடுகின்ற மதமும் அடிப்படையில் வேறுபட்டவை என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் வர வேண்டியிருந்தது. இதற்குப் பிறகு முஸ்லிம்களின் சமூக, அரசியல் என்பது கணிசமான அளவுக்குத் தமிழர்களை நோக்கித் திருப்பப்பட்டது என்று கூறலாம்.

தாம் இத்தனை தூரம் சிங்கள மன்னர்களுக்கு விசுவாசமாக இருந்தும், இப்படிச் செய்து விட்டார்களே என்ற விரக்தி மனநிலை, முஸ்லிம்களைத் தமிழரின் பக்கம் சாயவைத்தது. அதற்குப் பின்வந்த காலங்களில் குறிப்பாகச் சுதந்திரத்துக்குப் பிற்பாடு, தமிழ் அரசியல்வாதிகளே முஸ்லிம்களுக்காகக் குரல்கொடுத்தார்கள். அப்போதிருந்த முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களின் முன்னேற்றம், அபிவிருத்திக்காக ஆற்றிய பங்களிப்புக்குச் சற்றும் குறையாத விதத்தில் முஸ்லிம்களின் உரிமைசார்ந்த குரலாகத் தமிழ் தலைமைகள் ஒலித்திருக்கின்றன.

இருப்பினும், 1983 கலவரம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, இந்திய அமைதிகாக்கும் படையின் வருகை, தமிழ் ஆயுதக்குழுக்களின் பெருக்கமும் வளர்ச்சியும் எனப் பலதரப்பட்ட காரணங்களின் பின்னணியில் தமிழ் - முஸ்லிம் உறவுகளில் கீறல்கள் விழத் தொடங்கின.

இரு சிறுபான்மை இனங்களும் நெருக்கமாக இருப்பதை விரும்பாத சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, பெயர் குறிப்பிடக் கூடிய சில வெளிநாடுகளும் இதற்குப் பின்னால் காய்நகர்த்தி இருக்கின்றன. சிங்கள தேசியம், சிறுபான்மை மக்களை மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நோக்குகின்றது என்று முஸ்லிம்கள் உணரத் தலைப்பட்டதும் முஸ்லிம்கள் அதிலும் விசேடமாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களுடனான உறவை இறுக்கமாக்கிக் கொண்டனர்.

இது எந்தளவுக்கு என்றால், தமிழர் அரசியலோடு முஸ்லிம்கள் இரண்டறக் கலந்து செயற்பட்டனர். மசூர் மௌலானா, எம்.எச்.எம். அஷ்ரப் உள்ளடங்கலாகக் கணிசமான முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சி போன்றவற்றுடன் இணைந்து அரசியல் செய்தனர்.

அந்தக் கட்சிகளின் பிரசாரப் பீரங்கியாகவும் தமிழர் விடுதலை உணர்வை முஸ்லிம்களிடையே விதைக்கும் செயற்பாட்டாளர்களாகவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இருந்தனர். ஒரு கட்டத்தில் உணர்ச்சிப் பேச்சின் உச்சக் கட்டத்தில், ''அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழத்தைப் பெற்றுத் தராவிட்டால் தம்பி அஷ்ரப் பெற்றுத் தருவான்'' என்று மர்ஹூம் அஷ்ரப் சொன்னார்.

இதற்குச் சமாந்தரமாகத் தமிழர் விடுதலைப் போராட்டத்திலும் முஸ்லிம்கள் இணைந்து செயற்பட்டனர். முஸ்லிம்களுக்கு தனிநாடோ, தனியே ஒரு நிலப்பரப்போ அப்போது அவசியப்பட்டிருக்கவில்லை.

ஆனால், தமிழ்ச் சகோதரர்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ள நியாயங்களை ஏற்றுக் கொண்டு, முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப்புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி., ஈரோஸ்., ஈ.என்.டி.எல்.எப் எனக் கிட்டத்தட்ட எல்லா ஆயுத இயக்கங்களிலும் இணைந்து களத்தில் நின்று போரிட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இன்னும் வீடு திரும்பவில்லை.

சுதந்திரமடைந்த காலம் தொட்டு முஸ்லிம்களுக்கும் ஒரு தனியான தீர்வு வழங்கப்பட வேண்டுமெனப் பல தடவை தீர்மானங்களை நிறைவேற்றியிருந்த தமிழர் அரசியலானது, 80 களின் முற்பகுதியில் யதார்த்த அரசியல் களத்தில் எடுத்த சில நிலைப்பாடுகள், இவ்வளவு காலமும் ஒன்றிணைந்து செயற்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் மனம் கோணுவதற்கு வழிவகுத்தது எனலாம்.

எனவே, முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராக இயங்க வேண்டியதில்லை; என்றாலும் தனியான அரசியல் அடையாளத்துடன் இயங்க வேண்டிய அவசியத்தை அஷ்ரப் போன்றோர் அந்தக் கணத்திலேயே உணர்ந்து கொண்டனர் என்றும் கூறலாம்.

இந்தப் பின்னணியுடனேயே முஸ்லிம்களுக்குத் தனியான ஓர் அரசியல் கட்சியைப் பதிவு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அப்போதும் தமிழ் - முஸ்லிம் உறவு பலமாகவே இருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதும் அதற்கு அடுத்தடுத்த வருடங்களில் புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் மேற்கொண்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுமே இவ்விரு சமூகங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க விரிசலை உண்டுபண்ணின என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழர் அரசியலில் இருந்து சற்று விலகிப் பயணிக்கத் தொடங்கியிருந்தாலும், தமிழ் ஆயுத இயக்கங்களில் முஸ்லிம் போராளிகள் தொடர்ந்தும் அங்கம் வகித்துக் கொண்டே இருந்தனர்.

ஆனால் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் முஸ்லிம்கள் தமது எதிர்காலம் குறித்து, வேறு கோணத்தில் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

# 5R முறைக்கூடாக வீட்டுக் கழிவுகளை எவ்வாறு முகாமை செய்யலாம்?

• கலாநிதி பரீனா ருஸைக்

உலகில் ஒரு நாளைக்கு 1.3 பில்லியன் டொன் கழிவுகள் உற்பத்தியாகின்றது. 2025 ஆம் ஆண்டாகும் பொழுது இவ்வெண்ணிக்கை 2.2 பில்லியனாக அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. திண்மக் கழிவுகள் மிக வேகமாக அதிகரிப்பதன் காரணமாக சூழல் மாசடைகின்றது. அத்தோடு தொற்று நோய் அதிகரிப்புக்கும் காரணமாக அமைகின்றது.

கொழும்பில் சுமாராக ஒரு நாளைக்கு 800 மெட்ரிக் டொன் கழிவு உற்பத்தியாகின்றது. இலங்கை முழுவதிலும் சுமார் 60-65 வீதமான கழிவுகளே உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படுகின்றது. ஏனையவை வீட்டுத் தோட்டங்களிலும் வீதியோரங்களிலுமே சிதறிக் காணப்படுகின்றன.

மேல் மாகாணத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றார்கள். இலங்கையில் 80,000 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 230 இற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் இறந்துள்ளார்கள். சூழல் மாசடைவதே இதற்குக் காரணமாக உள்ளது. கழிவு முகாமைத்துவத்தில் இன்று பொடுபோக்கு நிலை காணப்படுகிறது.

வீட்டு மட்டத்திலேயே அதிகமான திண்மக் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இதனை எவ்வாறு முகாமை செய்யலாம்? இதற்கு 5R முறையை பின்பற்றலாம்.

### 1. REDUCE (குறைத்தல்)



கழிவுகள் தோற்றம் பெறும் அளவை குறைக்க வேண்டும். கொழும்பில் ஒரு நாளைக்கு ஒருவர் சராசரியாக 0.85 கிலோ கிராம் கழிவுகளை உற்பத்தி செய்கின்றார். இதை எந்தளவு குறைக்கலாம்? கடைக்குச் செல்லும்போது ஒவ்வொருவரும் பிரம்பால் வேயப்பட்ட அல்லது பிடவையால் நெய்யப்பட்ட பிரத்தியேகப் பையை எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது பொலிதீன் பாவனையைக் குறைக்கலாம்.

கடைகளில் பொதி செய்யப்பட்டு தருகின்ற பொருட்களை மறுக்க [illegible] டும். பொருட்களை வாங்கு[illegible] ஒரு வாரத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்குத் தேவையானவற்றை மொத்தமாக வாங்க வேண்டும். அடிக்கடி பொருள் வாங்குவதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சமலறைக் கழிவுகளில் உணவுகளே அதிகமாகக் காணப்படுகின்றது. எமக்குத் தேவையான அளவையே நாம் சமைத்து உண்ண வேண்டும். உலகிலுள்ள ஒரு பில்லியன் மக்களின் பசியை போக்குவதற்குப் போதுமான உணவுகள் ஒவ்வொரு நாளும் விரையமாக்கப்படுகின்றது. நாம் பாவித்த பொருட்களை கழிவுத் தொட்டியில் வீசி விடாமல் அதனை திருப்பிப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது ஏனைய ஒருவருக்கு கொடுப்பதன் மூலம் கழிவுகளை குறைக்கலாம். இவ்வகையில் எமக்கு கழிவுகளை வீட்டு மட்டத்தில் குறைத்துக்கொள்ள முடிகிறது.

### 2. REUSE (மீள்பயன்பாடு)

சில விடயங்களை நாம் கழிவுகளாக வீசி விடாமல் அதனை வேறு தேவையொன்றுக்குப் பயன்படுத்த முடியும். உதாரணமாக, பிளாஸ்டிக் பக்கட்டை [illegible] செடியை வைக்க முடியும்.

### 3. RECYCLE (மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்)

உடைந்த பிளாஸ்டிக் பொருட்களை மீற்சுழற்சிக்கு உட்படுத்தலாம். வியாபாரிகள் உடைந்த பிளாஸ்டிக் பொருட்களை வீட்டுக்கு கேட்டு வந்தால் அதனை அவர்களுக்கு வழங்கலாம். பாவித்த கடதாசிகளையும் அவ்வாறு வழங்கலாம். இவ்வகையில் அவற்றை வீட்டு மட்டத்தில் வேறுபடுத்தி அனுப்பினால் கொட்டப்படும் உக்காத கழிவுகளும் குறைந்துவிடும்.

### 4. REFUSE (மறுத்தல்)

நாம் ஏதாவதொரு பொருளை கடையில் வாங்கும்போது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உக்காத பொருட்களை வாங்காமல் (ரெஜிபோன், பொலிதீன்) அதனை மறுத்து, உக்கும் பொருட்களை வாங்க வேண்டும். உதாரணமாக பழங்களை வெட்டி ரெஜிபோம் பையில் போட்டு வைத்திருப்பார்கள். அவற்றை நாம் தவிர்த்து பழங்களை தனித் தனியாக வாங்க வேண்டும்.

### 5. RETHINK (சிந்தித்தல்)

நாம் பொருளொன்றை வாங்க முன்னர் சிந்திக்க வேண்டும். இது எந்தளவுக்கு கூடுமானது என்பதை யோசிக்க வேண்டும். சிலபோது நாம் குப்பைகளைக் கொட்டும்போது சிந்திக்காமல் சோம்பேறித்தனத்திற்கு சமைத்த உணவுகளை கொண்டு வரும் பொலிதீன்களை அப்படியே உக்கும் பொருட்களுக்குள் போட்டு விடுகின்றோம். அதனால் சிறந்த பசளை உற்பத்தியை அங்கு பெற முடியாமல் போகும். எனவே 5R முறையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துகின்றபோது வீட்டு மட்டத்தில் உருவாகும் திண்மக் கழிவுகளின் அளவை குறைத்துக் கொள்ளலாம்.

வீட்டு மட்டத்தில் கழிவுகளை வேறுபடுத்தி முகாமை செய்கின்றபோது உக்கும் பொருட்களை பசளையாக மாற்றி, 1 கிலோவினை 12-15 ரூபாவிற்கு விற்கலாம். அது போன்று பொலிதீன், பிளாஸ்டிக் பொருட்களை 1 கிலோ 40-60 ரூபா வரையில் விற்பனை செய்யலாம். உலோகங்களை 35-40 ரூபாவிற்கு விற்பனை செய்யலாம். கார்போட், பேப்பர் போன்றவற்றை 3-4 ரூபாவிற்கு விற்பனைசெய்யலாம். கண்ணாடிக் கழிவுகளை 2-3 ரூபாவிற்கு விற்கலாம். இவ்வாறு கழிவுகளுக்கு பெறுமதி காணப்படுகிறது. அது தொடர்பாக மக்கள் அறிவூட்டப்பட வேண்டும்.

கழிவுகளை வருமானமீட்டும் மூலங்களாகப் பயன்படுத்தலாம். கழிவுகளை வேறுபடுத்தல் என்கின்ற விடயம் வீட்டு மட்டத்தில் மிக மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அரசாங்கமும் கழிவுத் தொட்டிகளை வீட்டு மட்டத்தில் இலவசமாக வழங்கி வைக்க வேண்டும். மக்கள் விரும்பும் வகையில் கழிவுத் தொட்டிகள் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் அதிகளவிலான கழிவுகள் வெளியே செல்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• உஸ்தாத்
ஆஸாத் அப்துல் முஈத்



# ஷூரா எனும் பொறிமுறையைப் பலப்படுத்துவோம்

இஸ்லாம் ஷூரா செய்வதை வலியுறுத்தியுள்ளது. அதன் தேவையை பல அல்குர்ஆன் வசனங்கள் விளக்குகின்றன. வீடு முதல் ஆட்சி வரை ஷூரா நடைபெற வேண்டும் என்ற கருத்தை இஸ்லாம் பலமாகச் சொல்கின்றது.

கூட்டுச் செயற்பாடு, கூட்டுப் பொறுப்பு காணப்படும் அனைத்து இடங்களிலும் ஷூரா நடைபெற வேண்டும். பரஸ்பரம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றை கலந்துரையாடி பொருத்தமான முடிவுகள் பெறப்பட வேண்டும்.

இன்று இதற்கான தேவை அதிகமாக உள்ளது. இதற்கு முக்கியமான இரு காரணங்களை அடையாளப்படுத்தலாம். ஒன்று, ஊர் மட்டம் முதல் தேசிய மட்டம் வரை அதிகரித்து வரும் நிறுவனங்கள், அமைப்புக்கள். மற்றையது அமானிதங்கள் குறைந்து செல்வதனால் கூட்டுப் பொறுப்பு என்ற பெயரில் தனிப்பட்ட நலன்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றமை.

தேசிய மட்டத்தில் ஜமாஅத்துகள், நலன்புரி, தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மத்ரஸாக்கள் என நிறுவனங்களும் அமைப்புகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. அதே போன்று ஊர் மட்டங்களில் பள்ளிவாசல் நிர்வாகம், அதன் கீழ் காணப்படும் ஏனைய துணைக் குழுக்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், விளையாட்டுக் கலகங்கள், இளைஞர் மன்றங்கள், அபிவிருத்தி சங்கங்கள் என பல வடிவங்களில் மக்கள் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றனர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, தேசிய ஷூரா சபை போன்ற பெரிய நிறுவனங்கள் முதல் கிராம மட்டத்தில் இயங்கும் சிறிய அமைப்புக்கள் வரை ஷூரா எனும் பொறிமுறையை அமுல்படுத்தி வருகின்றன.

இவை அனைத்தும் கூட்டு அமைப்புக்கள் என்ற வகையில் சமூகத்தை நோக்கி செயற்படுகின்றன. அதற்கான முறைமைகளை வகுத்து தமது பணிகளை செய்து வருகின்றன. நல்ல பல செயற்பாடுகளை இவை முன்னெடுப்பதனால் சமூகத்திற்கு நல்ல பயன்கள் கிடைக்கின்றன.

இந்த அனைத்துத் தரப்பினரும் கூட்டுச் செயற்பாடு என்ற இடத்தில் செயற்படுவதனால் இஸ்லாம் கூறும் ஷூரா பற்றிய முக்கிய பல அடிப்படைகளை அறிந்திருப்பது முக்கியமானது. கருத்துக்களை முன்வைப்பதற்கான சூழல் எவ்வாறு காணப்பட வேண்டும், முடிவுகள் பெறுவதற்கான முறை எத்தகையது, பெரும்பான்மைக் கருத்தை முடிவாகப் பெறுவதா அல்லது தலைவருக்கு இது தொடர்பில் காணப்படும் அதிகாரங்கள் எவை போன்ற பல விடயங்கள் தொடர்பான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் எவை என்பது பற்றி அறிந்து செயற்படும் போது ஷூரா மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை அடைந்து கொள்ள முடியும்.

### ஷூராவின் முக்கியத்துவம்

அல்குர்ஆனில் ஷூரா செய்வதன் அவசியம் பற்றி பல வசனங்கள் வந்துள்ளன. குடும்ப வாழ்வில் ஷூரா செய்வதன் தேவையை அல்குர்ஆன் கூறுகின்றது. குழந்தைக்கு பாலூட்டும் விடயமாக கலந்தாலோசனை செய்யுமாறு அல்லாஹுதஆலா பெற்றோருக்குக் கட்டளையிட்டுள்ளான்.

''அவர்கள் இருவரும் பரஸ்பர திருப்தி, ஆலோசனையின் அடிப்படையில் பால்குடியை நிறுத்த விரும்பினால் அவ்விருவர் மீதும் குற்றமில்லை.'' (பகரா: 233).

''மேலும் அவர்கள் தமது இரட்சகனுக்குக் கட்டுப்படுவார்கள். மற்றும் தொழுகையை நிலைநாட்டுவார்கள். தமது விவகாரங்களை தமக்கு மத்தியில் கலந்தாலோசனை செய்வார்கள். மற்றும் நாம் அவர்களுக்கு வழங்கியதில் இருந்து செலவு செய்வார்கள்.'' (ஷூரா: 37-38) இது ஒரு மக்கி வசனமாகும்.

இவ்வசனத்தில் இஸ்லாத்தின் இரு பெறும் கடமைகளாகிய தொழுகை, ஸகாத் ஆகியவற்றுக்கிடையில் ஷூரா பற்றிய கட்டளை வந்திருப்பது கலந்தாலோசனை செய்வதன் கட்டாயத் தன்மையை விளக்குவதற்குப் போதுமானதாகும். அதாவது இஸ்லாமிய அரசு தோன்ற முன்னரே ஷூரா செய்வதன் அவசியம் இங்கு கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஷூரா செய்தல் என்பது அரசியலுடன் தொடர்பான ஒரு அங்கம் என்பதுடன் சுருங்கியதல்ல. அது முஸ்லிம் சமூகத்தின் ஓர் அடிப்படையான தனித்துவமான பண்பாகும் என ஷஹீத் செய்த் குத்ப் விளக்குகின்றார்.

ஷூராவிற்கு இஸ்லாம் உயரிய அந்தஸ்தை வழங்கியுள்ளது. இது இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும் என இமாம் இப்னு அதிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார். மற்றும் யார் அறிஞர்களிடம் கலந்தாலோசனை செய்யவில்லையோ அவர் கட்டாயம் பொறுப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். இதில் கருத்து வேறுபாடு கிடையாது என்றும் கூறுகின்றார். (தப்ஸீர் குர்துபி).

''(நபியே) நீர் அவர்களை மன்னித்து விடுவீர்களாக. அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேற்பீர்களாக். மற்றும் விவகாரங்களில் அவர்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வீர்களாக. உறுதியான முடிவுக்கு வந்துவிட்டால் அல்லாஹ் மீது பொறுப்புச் சாட்டிச் செயற்படுவீராக'' (ஆல இம்ரான்: 159). இது ஒரு மதனி வசனமாகும்.

உஹது யுத்தம் பற்றிப் பேசுகின்ற வசனங்களின் போது ஷூரா பற்றிய மேற்படி வசனமும் இடம்பெற்றுள்ளது. சமூகத்தின் மிக பொறுப்பான விடயங்கள் தீர்மானிக்கப்படும் போது அதற்குத் தகுதியானவர்களிடம் கலந்தாலோசிப்பது கட்டாயக் கடமையாகும்.

நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த அறிஞரான இமாம் இப்னு ஹுவைஸ் மின்தாத் என்பவர் ஷூரா செய்வதன் முக்கியத்துவத்தை பின்வருமாறு விளக்குகின்றார்:

''அறியாத விடயங்களிலும், மார்க்கத்தில் சிக்கலாக இடங்களிலும் அறிஞர்களை கலந்தாலோசிப்பது பொறுப்பாளர்களின் கடமையாகும். மற்றும் போராட்டம் பற்றி அத்துறை சார்ந்தவர்களிடமும், நலன்கள் பற்றி அது தொடர்பான ஆளுமைகளிடமும், நாட்டு நலன், அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர்கள், மற்றும் இத்துறை சார்ந்தோரிடமும் பொறுப்பாளர்கள் ஷூரா செய்வது கடமையாகும்.''

### சுன்னாவில் ஷூரா செய்வதன் முக்கியத்துவம்.

வஹி அருளப்பட்ட நபி (ஸல்) அவர்கள் அதிகமாக ஸஹாபாக்களுடன் கலந்தாலோசனை செய்வார்கள் என அபூ ஹுறைறா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹிஜ்ரத் தொடர்பாக அபூ பக்ர் (ரழி) அவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் கலந்துரையாடினார்கள்.

பத்ர் யுத்தம், உஹத் யுத்தம் போன்ற ஆரம்ப யுத்தங்கள் செய்வது தொடர்பாக ஸஹாபாக்களுடன் கலந்தரையாடிய நபி (ஸல்) அவர்கள் யுத்தத்தின் பின்னரும் கலந்தாலோசனை செய்துள்ளார்கள். பத்ர் யுத்தத்தில் பிடிக்கப்பட்ட கைதிகள் விடயத்தில் என்ன செய்வது என்ற கருத்துக்களை ஸஹாபாக்களிடன் ஷூரா செய்து முடிவெடுத்தார்கள். உஹத் யுத்தத்தை மதீனா நகரத்தின் உள்ளே இருந்து மேற்கொள்வதா அல்லது மதீனாவுக்கு வெளியில் சென்று எதிர் கொள்வதா என்ற விடயத்தில் தனது தோழர்களுடன் ஆலோசனை செய்தார்கள்.

அகழி யுத்தத்தின் போது செய்த கலந்துரையாடலின் விளைவாக ஸல்மானுல் பாரிஸி (ரழி) அவர்களின் கருத்தை மையமாக வைத்து அகழி தோன்றும் பணியை செய்தார்கள். (தொடரும்).

## தமிழ்-முஸ்லிம்... (10 ஆம் பக்கத் தொடர்)

வடக்கில் பூர்வீகமாக வாழ்ந்த முஸ்லிம்கள் சில மணிநேர அவகாசத்தில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். கிழக்கில் பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்த, தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த, மார்க்கக் கடமையைச் செய்துவிட்டுத் திரும்பிய முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களிடம் கப்பம் கோரப்பட்டது; காணிகள் அபகரிக்கப்பட்டன; இப்படி இன்னும் எத்தனையோ சம்பவங்கள் ஓரிரு வருடங்களுக்குள் நடந்தேறின.

உலகெங்கும் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறும் இயக்கங்களின் அநேகமானவை அப்பாவிகளையும் குறிவைப்பது வழக்கமானதே.

ஆனால், தம்மோடு அரசியல் ரீதியாகவும், ஆயுதப் போராட்டத்தில் இணைந்திருந்த முஸ்லிம்கள் மீது புலிகளும் ஏனைய ஆயுத இயக்கங்களும் இவ்வாறான அத்துமீறல்களை மேற்கொண்டமை, ஏதோ ஒரு செய்தியை முஸ்லிம்களுக்கு சொல்லாமல் சொல்லியது.

புலிகளும் ஆயுதம் தரித்தோரும் செய்த அட்டூழியங்களுக்கு அப்பாவித் தமிழர்கள் ஒருபோதும் காரணமாகி விட முடியாது. தமிழ் அரசியல்வாதிகளும் காரணமெனக் கூற இயலாது. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் முற்போக்குச் சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் புலிகளின் செயற்பாடுகளைக் கண்டித்தனர்.

இதற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று, தமிழர் அரசியலின் மகத்தான இடத்தைப் பிடித்த தமிழ் அரசியல் தலைவரான மு. சிவசிதம்பரம், ''யாழ். முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் குடியேறும் வரை நான் வடபுலத்துக்குச் செல்லமாட்டேன்'' என்று அறிவித்தார். அந்தத் திடசங்கற்பத்துடனேயே அவர் கடைசி மூச்சு வரையும் இருந்தார். ஆனால், மற்றைய தமிழ்த் தலைமைகள் புலிகளுக்குப் பயந்தோ என்னவோ அடக்கி வாசித்தனர்.

புலிகள் இவ்வாறு செய்தார்கள் என்பது ஒரு புறமிருக்க, அப்போதிருந்த கணிசமான தமிழ் அரசியல்வாதிகள் இதற்கெதிராகக் குரல் கொடுக்கவில்லை என்பதே முஸ்லிம்கள் இன்று வரையும் தமிழர் அரசியலில் நம்பிக்கையற்று இருப்பதற்குக் காரணமாகும்.

எனவே, தமிழர் அரசியலில் இருந்தும், விடுதலைப் போராட்டத்திலிருந்தும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் அந்நியப்படுத்தப்பட்டார்கள். அந்த அடிப்படையில், தனித்துவ அடையாள அரசியலோடு, தனித்த ஓர் இனக் குழுமமாக முஸ்லிம்கள் பயணிக்கத் தொடங்கினார். இதனால் தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையில் இருந்த உறவு சிதிலமடைந்தது.

அதன் பிறகு, வடக்கு, கிழக்கில் பல இடங்களில் திட்டமிடப்படாத பல கலவரங்கள் இடம்பெற்றன. தமிழ் பிரதேசங்களிலும் பல அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டடன.

ஆகவே, முஸ்லிம்களுக்குத் தமிழ்த் தரப்பில் இருந்து இழைக்கப்பட்டதை விட, குறைவாகவெனினும் தமிழர்களுக்கும் முஸ்லிம்கள் பக்கத்தில் இருந்து சிற்சில தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன.

எப்படி முஸ்லிம்கள் மீதான படுகொலைகளுக்குச் சாதாரண தமிழ் மக்கள் காரணமில்லையோ அதுபோலவே தமிழர்கள் மீதான வன்முறைகளுக்கு அப்பாவி முஸ்லிம்கள் காரணமில்லை. முஸ்லிம் ஊர்களில் அதிகாரத்துடன் ஆயுதம் வைத்திருந்தோரும், அந்தந்த ஊர்களில் இருந்த பக்குவப்படாத சண்டியர்களுமே இதற்குப் பிரதான காரணம் என்றால் மிகையில்லை.

எனவே, அவர்கள் பிழை எனக் கூறும் முஸ்லிம் சமூகம், தாம் செய்த தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமக்குச் செய்த அநியாயங்களுக்காகத் தமிழ்ச் சமூகம் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென நினைக்கின்ற முஸ்லிம்கள், தமிழர் குக்கிராமங்களில் நடந்த அசம்பாவிதங்களுக்குக் குறைந்தபட்ச பரிகாரம் தேட வேண்டியுள்ளது.

அப்படியென்றால் தம[illegible] நடந்த தவறுகள், சரி பிழைகளை இரு சமூகமும் மனசுக்குள் வைத்திராமல் மனம் திறந்து பேசி, உள்மன அழுக்குகளை அகற்ற வேண்டும். அதுவே நல்லிணக்கம் அல்லது பகைமறத்தலின் ஆரம்பமாக இருக்கும் என்று உலக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அந்த வகையில், இரு தரப்பும் மனம் விட்டு, கடந்தகாலத் தவறுகளைப் பேசி, இத்தோடு அதைப் பேசுவதை நிறுத்தி, அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும். அந்தப் பணி இப்போதே மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் எம்.பிபோன்றோர் இப்போது முஸ்லிம்களின் விடயத்தில் அக்கறையை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றனர்.

அவர்களது காலத்துக்குப் பிறகு, இந்த இன உறவும், இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களின் பங்கும், அரசியல் இணக்கப்பாடும் எவ்வாறு இருக்கும் என்று கூற முடியாது. இதே கருத்தை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீனும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு பலப்பட வேண்டுமென்றால், கடந்தகாலத் தவறுகள் திருத்தப்பட வேண்டும். முஸ்லிம்களின் துணையின்றி தீர்வைப் பெறுவது கடினம் என விளங்கிக் கொண்ட பிற்பாடு, முஸ்லிம்கள் பற்றி தமிழ்த் தலைமைகள் காட்டி வரும் அக்கறை அதிகரித்திருக்கின்றது.

ஆனால், இன்னும் முஸ்லிம்கள் முழுமையாக நம்பும்படியான அபூர்வ நல்லெண்ண சமிக்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

முதலாவதாக, இலங்கை முஸ்லிம்கள் தனித்துவமான ஓர் இனக் குழுமம் எனவும் அவர்களுக்குத் தனிப்பட்ட அபிலாஷைகள் இருக்கின்றன என்பதையும் அவர்களுக்கும் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் இஸ்லாமியத் தமிழர்கள் அல்லர் என்பதையும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோரை உடன் மீள்குடியேற்றல், வடக்கு கிழக்கில் கையகப்படுத்தப்பட்ட காணிகள், சொத்துகளை விடுவித்தல் உள்ளிட்ட பல சமிக்கைகளை தமிழ்த் தரப்பு வெளிப்படுத்த வேண்டும்.

அதற்குப் பதிலாக முஸ்லிம்களும் நல்லெண்ண பதில் சமிக்கைகளைக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால், தமிழ் - முஸ்லிம் உறவின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடலாம்.

## ஞானசார... (01 ஆம் பக்கத் தொடர்)



இந்த விடயத்தில் எமக்கு நீதிமன்றமே தீர்ப்புச் சொல்ல வேண்டுமே ஒழிய ஞானசார தேரரிடம் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் கிடையாது என ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்தின் தலைவர் ரஸ்மின் தெரிவித்தார்.

மகாநாயக்கர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கோரினார்கள். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டால் நீதிமன்றத்திடமே தான் நாங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறி மறுத்துவிட்டோம். இடையில் ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்தை ஞானசார தேரர் மன்னிக்கப் போவதில்லை ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்த விடயத்தில் சட்டமே தீர்ப்பு வழங்க வேண்டுமேயொழிய ஞானசார தேரர் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தாம் கூறிய குறித்த வார்த்தை தவறுதலாக இடம் பெற்றதென்று அவர்கள் தமது தவறை ஒப்புக் கொண்டிருக்கும் நிலையில் வழக்கைத் தொடர்ந்து நடத்திச் [illegible] தப்பட்ட தௌஹீத் [illegible] புத்தர் பற்றிப் பேசியது தவறுதலாக நடைபெற்றது என ஒப்புக் கொண்டுள்ளதனால் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சட்டமா அதிபர் உத்தரவிட நீதிமன்றம் கோருவதாக சட்டமா அதிபருக்கு பொலிஸ் தரப்பினால் கடிதம் ஒன்றை உடனடியாக அனுப்புமாறு பொலிஸ் தரப்பினருக்கு உத்தரவிடப்பட்டது என ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த கடிதம் உடனடியாகவே அனுப்பப்பட்டு விட்டது எனவும் வழக்கு விரைவில் முடிவுக்கு வந்து விடும் எனத் தான் நம்புவதாகவும் ரஸ்மின் தெரிவித்தார்.

## சோல்பரி... (01 ஆம் பக்கத் தொடர்)

சோல்பரி யாப்பின் 29 ஆம் ஷரத்து பின்னர் வந்த அரசியலமைப்புக்களில் இருந்து நீக்கப்பட்டதாலே பல்வேறு குழப்பங்களும், இனங்களிடையேயான விரிசல்களும் உருவாகின. எனவே சிறுபான்மையினர் மத்தியில் உள்ள சந்தேகங்கள் மற்றும் அச்ச நிலைமையை மாற்றும் வகையில் மீண்டும் அரசியலமைப்பில் இந்த ஷரத்தை இணைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பௌத்தை மதத்திற்கு அரசியலமைப்பில் முன்னுரிமையளிப்பது தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. ஆனால் ஏனைய மதங்கள் மற்றும் சமூகங்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும்.

மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் வலுவூட்டப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் நிதி தொடர்பான முழுமையான கையாள்கை மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும். காணி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறி பிறழும் ஆட்சியாளர்களும் திசைமாறும் அறிஞர்களும்

• முஹம்மத் பகீஹுத்தீன்

வரலாற்றில் உலமாக்கள் ஆட்சியாளர்களுக்கு முழுக்க முழுக்க துணையாக இருந்து செயற்பட்ட காலம் நேர்வழி சென்ற கலீபாக்களின் நல்லாட்சிக் காலத்தோடு முற்றுப்பெறுகிறது. நான்கு கலீபாக்களின் சீரான காலத்தைத் தவிர்த்து ஏனைய அனைத்து காலப்பகுதியிலும் அடக்கியாளும் ஆட்சியாளர்கள் தோன்றியது போன்றே அவர்களது விருப்பங்களுக்கு ஏற்ப மார்க்க தீர்புகளை கூறும் உலகாசை கொண்ட உலமாக்களும் இருந்தே வந்துள்ளார்கள்.

நல்லாட்சிக்குப் பிற்பட்ட காலங்களில் அல்லாஹ்வைப் பயந்து வாழும் ரப்பானிய அறிஞர்கள் ஆட்சி பீடத்தை விட்டும் தூரமாக்கப்பட்டார்கள். புகழ் பாடும் கவிஞர்களும், சுயநலமிகளும், சந்தர்ப்பவாத அறிஞர்களுமே ஆட்சியாளர் பக்கம் இருந்தனர். இவர்களை இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் காண முடிகிறது. இவர்கள் சீர்கெட்ட அறிஞர்கள் என்றும் அல்லது அதிகார வர்க்கத்திற்குரிய அறிஞர்கள் என்றும் வரலாற்றில் அறியப்படுகின்றனர்.

முஸ்லிம் உலக அரங்கில் அரச கட்டிலில் வீற்றிருக்கும் ஆட்சியாளர்கள் முழுமையான அதிகாரத்தைச் சுவைத்து வாழும்போது அதற்கு தாளம் தப்பாமல் இசைபாடும் உலமாக்கள் ஏராளமாக முளைத்துள்ளார்கள். இது முஸ்லிம் உலகிற்கு புதியதுமல்ல, புதுமையுமல்ல.

ஆனால் இறைவன் வழங்கிய அருளுக்கு நன்றி மறந்தவர்களாக வாழ்வது தான் விந்தையானது. வாழும்போதே அவர்கள் சிந்தித்துணர்ந்து பாடம் பெறத் தவறினால் இறை கோபத்திலிருந்து தப்பிக்கவே முடியாது.

நாடு கொந்தளிப்பான நிலையில் இருக்கும்போது உலமாக்கள் சீர்கெட்டுப் போனால் சமூகம் குட்டிச் சுவராகும். இந்நிலையில் குர்ஆனின் வழிகாட்டல்கள், சுன்னாவின் போதனைகளைக் கடைப்பிடித்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் காப்பாற்றுவதே முதன்மைத் தேவையாகும்.

இப்படியான நெறுக்கடி நேரங்களில் தாம் சார்ந்துள்ள சிந்தனை முகாம்களின் வட்டத்தின் நிழலில் நின்று பிரச்சினையை அணுகாமல் சத்தியம்-அசத்தியம், நீதி-நேர்மை, நன்மை-தீமைகள், உண்மை-பொய், சமூக எழுச்சி-வீழ்ச்சி, சமூக நலன்கள் என்ற விரிந்த அடிப்படையில் நின்று நிதானமாகப் பிரச்சினைகளை நிறுத்துப் பார்க்கும் போது சரியான நிலைப்பபாடுகள் பக்கம் சார்ந்து பயணிக்க முடியும்.

இன்று உலக அரங்கில் நிலவும் போராட்டம் முஸ்லிம்களின் சிந்தனைப் பிரிவுகளுடனான போராட்டம் அல்ல. அது நேரடியாக இஸ்லாத்திற்கும் அதன் எழுச்சிக்கும் எதிரான போராட்டமாகும். அதனைப் புரிந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

அறிவும், நுணுக்கமும், சாணக்கியமும் இல்லாத அரசியல் தீர்மானங்கள், முட்டாள் தனமான நிலைப்பாடுகள், கண் மூடித்தனமாக ஒத்தோடும் அரசுகள் இவை யாவும் நிச்சியமாக முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சோதனையே. இந்த வேளையில் தறி கெட்ட ஆட்சி பீடங்களுக்கு அடிவருடியாக இருக்கும் உலமாக்கள் சோதனை மேல் சோதனையாகும். வேதனையை பங்கு போட வேண்டியவர்கள் மக்களுக்குச் சோதனையாக மாறியுள்ளார்கள். சீர்கெட்ட இந்த உலமாக்கள் சமூக எழுச்சிப் பயணத்தில் பேரனர்த்தம் மட்டுமல்ல தோல்வியின் நிழலாகவே மதிக்கப்படுகின்றனர்.

எனவே இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சாபக்கேடான அடக்குமுறை ஆட்சியளர்கள் பற்றியும் அவர்களின் பொருட்களுக்கு உமிழ்நீர் வடிக்கும் ஆஸ்தான அறிஞர்கள் வரலாறு பற்றியும் நாம் படித்து பாடம் பெற வேண்டிய ஒரு கால கட்டத்தில் வாழ்கிறோம். இந்த வரலாற்றைப் படிப்பது சமகால அரசியல் போராட்டத் தொடரை புரிந்துகொள்ள பெரிதும் உதவும்.

### அல்குர்ஆன் கூறும் தறி கெட்டுப் போன அறிஞன்

அல்குர்ஆன் உலக கவர்ச்சிக்குப் பின்னால் சென்ற ஒரு அறிஞனை எமக்குக் கூறிவிட்டு, அதில் பாடம் பெறுமாறு கட்டளையிடுகிறது.

அறிவும் ஞானமும் இன்னும் பல அத்தாட்சிகளும் பாக்கியங்களும் இறையருள்களும் கிடைக்கப் பெற்ற ஒரு அறிஞரின் கதையை ஸூரா அஃராவின் 175 ஆம் வசனம் எமக்கு ஞாபக மூட்டுகிறது. அவன் ஒரு இறைநேசனாக வாழ்ந்தான். அவன், இறைவனிடம் கேட்டால் மறுக்கப்படுவதில்லை. அன்று அவனது உலகம் அவனை மதித்தது. ''நாம் எமது அருள்கள் நிறைந்த அத்தாட்சிகளை அவனுக்கு வழங்கியிருந்தோம்'' என



அந்த அறிஞனுக்கு வழங்கிய கடாச்சங்களை அல்குர்ஆன் கூறுகிறது.

அந்த அறிஞன் உலகத்தின் கவர்ச்சிக்கு மயங்குகிறான். பணம், பட்டம், பதவிகளுக்கு அடிமைப்படுகிறான். ஏமாற்றும் உலகத்தின் அற்பக் கவர்ச்சிகள் அவன் உள்ளத்தில் குடியிருக்க ஆரம்பிக்கன்றன. மெல்ல மெல்ல இறைவன் வழங்கிய அத்தாட்சிகள், அருள் பாக்கியங்களை விட்டு அவன் தூரமாகின்றான். இச்சைக்கு அடிமைப்படுகின்றான். தன்னார்வ முயற்சியால் அவன் உலக பொருட்கள் மீது ஆசை வைத்து வரும்போது அவனிலே ஷைத்தான் ஊடுருவல் இடம் கிடைக்கிறது.

இறுதியில் மனோஇச்சையும், உலக வஸ்துக்களின் மோகமும் அவனை நெறி பிறழ வைத்து விட்டது. இறைநேசனாக அல்லது அதனை விட உயர்ந்த பாக்கியத்தைப் பெற வேண்டிவன் நாக்கை தொங்க விட்டு அலையும் இழிந்த நாய் போல் உலகத்தின் கவர்ச்சிக்குப் பின்னால் சீரழிய ஆரம்பித்து விட்டான். இறுதியில் தூய ஈமானை உலக ஆசைக்காகப் பறிகொடுத்து ஒரு முர்தத்தாக மாறிவிட்டான். ஆம் அவன் வழிகெட்டுப் போன காபிராக நிலைமாறி விட்டான்.

வெறும் அறிவு மட்டும் ஒரு மனிதனை பாதுகாத்து விடாது. தூய எண்ணமும் இறைநாட்டமும் ஒன்று சேரும் போது அறிவு அருளாக மாறும். 'மனிதா நீ உலகை நம்பாதே, அது உன்னை ஏமாற்றும். நீ காணும் காட்சிகள் பொய்யானது. அது உண்மையில்லாதது' என்று அல்குர்ஆன் அடிக்கடி மனிதனுக்கு எச்சரிக்கை விடுக்கிறது. இருந்தும் அவன் சில ரூபாய்களுக்கும், ரியால்களுக்கும், டொலர்களுக்கம் தனது அறிவை அடகு வைத்து விடுகிறான். அது தவறு என்றும் சீர்கெட்ட உலமாக்கள் இந்த அறிஞனின் கெதியைப் பார்த்து படிப்பினை [illegible] வேண்டும் என்பதற்காகவே இந்தக் கதையை குர்ஆன் கூறுகிறது.

### சீர்கெட்ட அறிஞர்கள் குறித்து ஸுன்னா எச்சரிக்கிறது.

முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: துணிமணி இத்துப் போவது போல் சிலரின் உள்ளங்களில் மனனம் செய்யப்பட்ட குர்ஆன் வசனங்களும் இத்துப்போகும். அவர்கள் அதனை ஒதுவார்கள். ஆனால் அதற்குச் சுவை இருக்காது. ஒதுவதில் ஆர்வவும் இருக்கமாட்டாது. அவர்கள் செம்மறித் தோல் போர்த்திய ஒநாய் உள்ளம் கொண்டவர்கள். (பசுத் தோல் போர்திய புலிகள்) அவர்களின் செயற்பாட்டுகளுக்கு பின்னால் பேராசைதான் இருக்கும். இறைபயம் இருக்காது. குறைகள் விட்டால் சரிசெய்யலாம் என்பர். தவறுகள் செய்தால் அல்லாஹ்வுக்கு நாம் இணைவைப்பதில்லை. எனவே எங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் என்பர்.'' (ஆதராம் தீர்மதி 3356, தாரமீ 3251)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக தௌபான் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''நான் எனது சமூகம் குறித்து மிகவுமே பயப்படக் கூடிய விடயம் எனக்குப் பிறகு வரும் வழிகெடுக்கும் இமாம்கள் பற்றியேயாகும்.'' (ஹதீஸ் 1582, ஸில்ஸிலா ஸஹீஹா-அப்லானி (ரஹ்), பா:4, பக்:109)

வழிகெடுக்கும் இமாம்கள், கதீப்மார்கள், தலைவர்கள் அசத்தியத்தை சத்தியமாகக் கூறும்போது மக்கள் அவர்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாக பொய்யை உண்மை என ஏற்றுக் கொள்வார்கள். சத்தியம் எது அசத்தியம் எது என தெரியாத நிலையில் பொது மக்கள் தடுமாறுவார்கள். இது சமூகத்தில் தோன்றும் மிகப் பெரிய சாபக்கேடு. எனவே நபி (ஸல்) அவர்கள் சர்ந்தர்ப்பவாத அறிஞர்கள் குறித்து மிகவும் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அறிவிப்பதாக அபூ ஹுறைறா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ''ஒரு காலம் வரும் அப்போது நாட்டுத் தலைவர்கள் கெட்ட மனிதர்களை மிகக் கிட்ட வைத்துக் கொள்வார்கள். அவர்கள் தொழுகையை பிற்படுத்துவார்கள். அப்படிப்பட்ட காலத்தில் அந்த அரச தலைவர்களுக்கு தகவல் சேகரிப்பவராகவோ, பாதுகாப்பு துறையில் பங்களிப்பவராகவோ, அரசுக்கு வரி வசூலிப்பவராகவோ, களஞ்சியக் காப்பாளராகவோ இருந்து விடாதே.'' (ஸஹீஹ் அல்பானி: 2/702)

மொத்தத்தில் மொக்கை ஆட்சியாளர்களுக்கு எந்த வகையிலும் வக்காலத்து வாங்கவே கூடாது என நபிகளார் எச்சரித்துள்ளார்கள்.

### போலி அறிஞர்கள் பற்றி இமாம்கள்

ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் பக்கம் நீ போகாதே என்று இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் உபதேசிப்பார்கள்.

இப்ராஹீம் பின் ஹரவி என்ற மனிதரைப் பற்றி இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் பேசும்போது அவர் கறை [illegible] அப்படி சொல்லுகிறீர்கள் எனக் கேட்ட போது, அவர் கவனர்களுக்கும் நீதிபதிகளுக்கும் பின்னால் செல்பவர். எனவே அவர் கறைபடிந்த மனிதர் எனக் கூறினார்கள். இது இறையருளான அறிவை அடக்கியாளும் ஆட்சியாளர்கள் பணம், பட்டம், பதவி என்ற பொருள் தந்து வாங்கிவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையே குறிப்பிடுகிறது. (இப்னு முப்லிஹ், அல்ஆதாப் அல்ஷரஇய்யா, பா:3 பக்:458)

ஸஈத் இப்னுல் முஸய்யப் (ரஹ்) அவர்கள்: ''இளவரசர்களிடம் சென்று வரும் ஆலிம்கள் விடயத்தில் எச்சரிக்கையாக இருந்து கொள். அப்படியான ஆலிம் ஒரு திருடன்'' என்று கூறியுள்ளார்கள்.

### அரசவையில் வாய் பேசக் கூடாது

சர்வாதிகார மன்னர்கள் ஆட்சியில் ''அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்'' என்று நல்லுபதேசம் செய்தால் கூட கிளர்ச்சியாளன் என்று குற்றம் சாட்டப்படுவர். அந்த வார்த்தை சிம்மாசன நோய் பிடித்தவர்களிடம் ஆட்சிக்கு எதிராக துணிந்து விட்டான் என்றும், நல்லாட்சியைக் கேவலப்படுத்திவிட்டான் என்றும் அர்த்தம்.

உமையா காலத்தில் ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர் ஒருவர்: யாராவது அரச தர்பாருக்கு வந்து என்னை விழித்து ''அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்'' என்று கூறினால், அவனது கழுத்தை வெட்டி விடுவேன் என்று கூறியதாக வரலாற்றுப் பதிவுகள் காணப்படுகின்றன. (பார்க்க: லாஇக்ராஹ பித்தீன் பக்கம்: 166, இரண்டாம் பதிப்பு 2016)

இந்த மன்னர்களுக்கும் வால் பிடிக்கும் உலமாக்கள் அன்று இருக்கத்தான் செய்தார்கள். உண்மை பேசும் அறிஞர்கள் அன்று என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பது இப்போது நமக்கு நன்றாகவே புரிகிறது.

இஸ்லாமிய வரலாற்றில் அப்பாஸியர் காலம் வழிகெட்ட சிந்தனைப் பிரிவான முஃதஸிலாக்களின் செல்வாக்குப் பெற்றிருந்த காலாமாகும். அப்பாஸிய ஆட்சியின் ஒன்பதாவது கலீபாவான வாஸிக் பில்லா முஃதஸிலா சிந்தனையை கடுமையாக ஆதரித்தவர். அவருடைய காலத்தில் வாழ்ந்த அஹ்மத் பின் நஸ்ர் எனும் இஸ்லாமிய அறிஞர் முஃதஸிலா சிந்தனையை மறுத்ததன் காரணமாக கலீபா வாஸிக் அவருக்கு மரண தண்டனை விதித்தார்.

வாஸிகின் நீதிமன்றத்தில் அதிகார வர்க்கத்திற்குச் சார்பாக தீர்ப்புச் சொல்லும் நீதிபதியாக அப்துர் ரஹ்மான் பின் இஸ்ஹாக் காணப்பட்டார். அரசின் கொள்கைக்கு மாற்றமாக கருத்து முரண்பட்டார் என்பதுவே அவர் வழக்கு. அரச கொள்கை இஸ்லாமிய கோட்பாட்டுக்கு முரணாக இருந்தது. எனவே அஹ்மத் பின் நஸ்ர், தான் கொண்ட சத்தியக் கொள்கையில் உறுதியாக இருந்தார். ஆனால் அரசின் கருத்தை புறக்கணித்தார் என்பதற்காகக் கொலை செய்வது ஆகும் என்று அதிகாரத்தின் நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

அஹ்மத் நஸ்ரின் தலை பக்தாத் நகரின் கிழக்கிலும் மேற்கிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. அவருடைய முண்டம் ஈராக்கின் இன்னொரு நகரமான சாமர்ராவில் சிலுவையில் அறையப்பட்டு தொங்க விடப்பட்டது.

அன்று சீர்கெட்ட அறிஞர்களின் தீர்ப்பு ஒரு அறிஞரின் உயிரைக் குடித்தது. இன்று முட்டாள்தனமான முடிவுகளுக்கு அரச அறிஞர்களின் ஆதரவு கிடைக்கிறது. அதன் விளைவு குடும்ப உறவுகள் பாதிப்படைகின்றன. கனவன் தனது மனைவியை இழந்து தவிக்கிறான். மனைவி கனவனுக்கு விவாக விடுதலை கொடுக்கிறாள். காரணம் பெரிய முப்தியின் பத்வா.

அன்று அரச கொள்கைக்கு முரண்படுதல் ஒரு குற்றம். அதற்குத் தண்டனை கொலை. இன்று ஒரு நாடு சகோதர நாட்டுடன் உறவை முறிக்கிறது. மக்களும் சொந்தங்களையும் பந்தங்களையும் முறிக்க வேண்டும் என்று கட்டாயச் சட்டம். அதை காட்டுச் சட்டம் என்று யாராவது கூறினால் கம்பி எண்ணத்தான் வேண்டும். அரச கட்டளையை மீற சொந்த பந்தம் எப்படிப் போனாலும் வெறும் அனுதாபம் தெரிவிப்பதே குற்றம்.

மனிதம் தந்த மனுஷ்ய உணர்வை குற்றமாகப் பார்த்த அதிகார வெறியை என்னவென்று சொல்வது. உணர்வை வெளிப்படுத்தும் குற்றத்திற்கு சவூதி பிரஜையாயின் தண்டனை மூன்று மில்லியன் ரியால் அபராதமும் ஐந்து வருடம் சிறைத் தண்டனையும். எமிரேட்ஸ் பிரஜையாயின் ஐந்து மில்லியன் திர்ஹம் அபராதமும் பதினைந்து வருட சிறைத் தண்டனையும். காலங்கள் மாறும் காட்சிகள் மாறும், தறிகெட்ட ஆட்சிகள் முன்னே கொள்கை ஒன்றுதான்.

சர்வாதிகார மன்னர்களுக்கு குடைபிடிக்கும் சீர்கெட்ட உலமாக்கள் அரசர்களின் பயங்கரக் குற்றச் செயல்களை பாரிய பணிகளாகவும் உயர்ந்த சேவைகளாகவும் சித்திரிக்கின்றனர். அப்பட்டமாகப் பொய்யுரைப்பதன் மூலம் அபத் தங்களை பாதுகாக்கும் வேலிகளாக மாறுகின்றனர். அதனால் முஸ்லிம் சமூகத்திற்கு துரோகம் இழைக்கப்படுகிறது. மார்க்கம் பற்றிய கொச்சையான வடிவம் மேலோங்கிறது. சமூகம் பின்னடைவை நோக்கி முன்னேறுகிறது. சீர்கேடுகள் வளர்கின்றது. இந்த ஆபத்தை அவர்கள் உணர்வதில்லை.

உண்மையில் சுதந்திரத்திற்கும், எழுச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பவர்கள் சீர்கெட்ட அறிஞர்களே. அரசர்களின் குற்றச் செயலுக்கு இஸ்லாமிய விழுமியங்களை ஒப்பனையாக்கி, ஒத்தோடும் கெட்ட அறிஞர்கள் இவர்கள் தான். இவர்கள் இஸ்லாமிய எதிரிகளை விட பயங்கரமான ஆபத்துடையவர்கள். எதிரிகளைப் பொறுத்தமட்டில் இவர்கள் எதிரிகள்தான் என்று அடையாலம் காண்பது சுலபம். அரசர்களின் கைப்பாவையாக சுற்றிவரும் போலி உலமாக்களை சரியாக அடையாளம் காண்பது பொது மக்களுக்கு சுலபம் அல்ல.

எகிப்து இராணுவ சதிப் புரட்சிக்கு பின்னர் நாட்டின் சீர்கேட்டுக்கும் குழப்ப நிலைக்கும் பெரிதும் துணைபோனவர்கள் ஸீஸீயின் படையா அல்லது சதிகார தலைவன் ஸீஸிக்கு கூஜா பிடிக்கும் அல் அஸ்ஹர் அறிஞர்களா என்று அஹ்மத் ரய்ஸூனி ஒரு தடவை எகிப்திய அறிஞர் ஒருவரை வினவிய போது, சந்தேகமின்றி அதிகார வர்க்கத்திற்கு அடிமையான உலமாக்களே நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெரும் பங்கம் விளைவிக்கும் கோடாரிக் காம்புகள் என பதில் கூறியிருந்தார்.

காரணம் படைவீரர்கள் அநேகமாக விசாரிக்கப்படுவதுண்டு. அவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படுவதுமுண்டு. ஆனால் இந்த சீர்கெட்ட உலமாக்களை யார் விசாரிப்பது! யார் தான் தண்டிப்பது?! தமது மனோஇச்சைக்கு ஏற்ப குர்ஆனிய வசனங்களுக்கு விளக்கத்தையும் அரசு எதிர்பார்க்கும் விளக்கங்களையும் மார்க்கமாக மக்களுக்கு முன்வைக்கின்றார்கள். அவர்களும் கெட்டு மக்களையும் வழிகெடுத்துகிறர்கள். அவர்களை விசாரிக்க யாருமே இல்லை.

கலாநிதி அஷ்ஷெய்க் அஹ்மத் ரய்ஸூனி, அபூதாபியின் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸாயித் அல் நஹ்யான் அவர்களது சமய சட்ட ஆலோசகராக இருக்கும் புகழ்பூத்த இஸ்லாமிய அறிஞர் அஷ்ஷெய்க் பாரூக் ஹமாதா அவர்களை கடுமையாக விமர்சித்திருந்த செய்தியை ''அறபி 21'' இணையத்தளம் வெளியிட்டிருந்தது. பாரூக் ஹமாதாவின் எழுத்துக்களை ஆதராம் காட்டி, அவரை காரமாக விமர்சித்திருந்த கலாநிதி ரய்ஸூனி, ஹமாதாவை ''ஷைத்தான் வணங்கிகளில் ஒருவர்'' என்று வர்ணித்திருந்தார். (பக்.14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சமகால பிக்ஹ் பிரச்சினைகள் - III



# ஜீன் பிரதி எடுத்தல் (CLONNING-02)

கருப் பையில் வளரும் சிசு ஒன்றின் ஆரம்ப வளர்ச்சியின் போது உடற் கலமொன்றைப் பெற்று, பெண் முட்டை ஒன்றோடு அதன் கருவை, அதாவது பரம்பரை அலகுகளை நீக்கியதன் பின்னர் மின் அதிர்வுகள் மூலம் இணைப்பர். மின் அதிர்வு அம்முட்டைக்கு கருக்கட்டல் நிகழ்ந்து விட்டது போன்ற ஒரு பிரமையைத் தோற்றுவிக்கும். தொடர்ந்து சாதாரணமாக நிகழ்வது போன்று கலப் பிரிவு நிகழ்ந்து குறிப்பிட்ட உயிரினம் முழுமையாக உருவாகும்.

இங்கு பெண்ணின் முட்டையும் விந்தணுவும் இணையும் கருக் கட்டல் நிகழவில்லை. பால் சார்ந்த கலங்களும் பயன்படுத்தப்பட வில்லை. உடலில் ஏதாவது ஒரு பகுதியில் உள்ள கலம் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது. முதிர்ச்சியடைந்த ஒரு பிராணியின் உடற் கலங்கள் குறிப்பிட்ட வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டு விஷேட தொழிற்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்கும் என்பதனால் அத்தகைய கலங்களைப் பயன்படுத்தல் சாத்தியமில்லை என்றே நம்பப்பட்டு வந்தது.

இம்முறையினைப் பயன்படுத்தியே தோமஸ் கெய்ன்ஸ் தவளைப் பிரதியொன்றை உருவாக்குவதில் வெற்றி பெற்றார். டொலி என்ற செம்மறி ஆட்டைப் பிரதி எடுத்ததன் மூலம் அயர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி வில்மட் என்பவர் இப்பரம்பரைப் பொறியியலை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தி னார். அவர் முதிர்ச்சியடைந்த ஆட்டின் உடற் கலங்களிலிருந்து ஒன்றை எடுத்தார். அக்கலம் குறிப்பிட்டதொரு தொழிற்பாட்டைக் கொண்டிருக்கும். அதற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டும் இருக்கும். இப்போது வில்மட் முதிர்ச்சியடைந்த அக்கலத்தில் உறங்கு நிலையில் காணப்படும் பரம்பரை அலகுகளைத் தூண்டிவிட்டதன் மூலம் ஏனைய உடற் கலங்களுக்கான தகவல்களை தயாரிக்க வைத்தார். அதாவது இயல்பான கலப் பிரிப்புக்கு உட்படுத்தினார். இதுவே வில்மட்டின் கண்டுபிடிப்பாகும்.

ஏற்கனவே பிரிக்கப்பட்டது போன்று கரு நீக்கப்பட்ட முட்டை இங்கும் பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் வில்மட் 277 கரு நீக்கப்பட்ட முட்டைகளைப் பயன்படுத்தினார். அவற்றுள் 13 முட்டைகளில் இணைக்கப்பட்ட கலம் மட்டுமே Totem என்ற நிலை வரை வந்தது. அந்த 13 ஐயும் 13 செம்மறி ஆடுகளின் கருப் பையில் செலுத்தி னார். அவற்றுள் ஒன்று மட்டுமே கன்றை ஈன்றது. அதற்கு டொலி எனப் பெயர் வைத்தார். அது முற்றிலும் அதனது தாய்க்கு ஒப்பான பிரதியாக அமைந்தது. சில காலங்களுக்குப் பின்னர் டொலி இறந்து விட்டது.

ஜீன் பிரதி எடுத்தலில் உண்மையான ஆராய்ச்சிகளின் முக்கியமான காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இங்கு மனிதன் உயிரினங்களைப் புதிதாக உருவாக்கவில்லை. அல்லாஹ்வின் படைப்பியல் விதியையும் தாண்டிச் செல்லவில்லை. அறிவியலில் புத்தம் புதிய கண்டுபிடிப்பு (Invention) என எதுவுமில்லை. இருப்பதெல்லாம் ஏற்கனவே இறைவன் பௌதிக உலகில் ஏற்படுத்தி வைத்துள்ள விதிகளை கண்டுபிடிப்பது (Discovery) தான்.

ஜீன் பிரதியெடுத்தல் எனப்படும் இம்முறையை மனித இனத்திலும் பிரயோகிக்கலாம் என விஞ்ஞானிகள் அடித்துக் கூறுகின்றனர். இது தொடர்பான சில முயற்சிகள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன. சில விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் இதனை ஆட்சேபிக்கின்றனர்.

ஜீன் பிரதி எடுத்தலில் உள்ள அபாயங்களை மருத்துவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளனர்.

1. இச்செயன்முறை குறிப்பிட்டதொரு தொழிற்பாட்டிற்கென விஷேடமாக உருவானதொரு ஜீனை அடிப்படையாகக் கொள்கிறது. எனவே இம்முறை மூலம் ஜீன் தன் சுய இயல்பையும் தொழிற்பாட்டையும் இழக்கும் வாய்ப்பு உள்ளது. விளைவாக, உயிர்ப் பிரதிகளில் எதிர்பார்க்க முடியாத சில ஆபத்தான நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாகலாம்.

2. ஜீன்கள் மீதான இயற்கைக்கு மாற்றமான செயற்கையான தலையீடு உறங்கு நிலையிலுள்ள சில பரம்பரை அலகுகளை ஊக்கு வித்து விட முடியும். இந்நிலை புற்றுநோய் போன்ற அபாயகரமான நோய்கள் உருவாவதற்குக் காரண மாகலாம். பிறப்புரிமை பொறியியலில் ஜீன்கள் மீது அசாதாரண தலையீடு நிகழ்கின்றது.

3. ஜீன் பிரதியெடுத்தல் செயன்முறையில் தோன்றும் பாரிய வளர்ச்சியின்போது அது ஒரு பாரிய வணிகமாக மாறி விடும். மனிதன் ஒரு விற்பனைப் பொருளாக மாற்றப்படும் அபாயம் உள்ளது. இன்றைய உலக முதலாளிய அமைப்பில் இது எதிர்பார்க்கப்படக் கூடியதே.

4. ஒரு குறிப்பிட்ட மனிதனின் பிரதி வெறுமனே ஒரு பண்டமாக நடத்தப்படும் நிலை தோன்றலாம். முதலில் மனிதனின் உறுப்புக்களின் மாற்றத்திற்காக பிரதி பாவிக்கப்படும் சூழ்நிலையானது பிரதியை மனிதனாக அன்றி வெறும் பொருளாகக் கருதும் நிலைக்கு இட்டுச் செல்லலாம். இது எந்தவகையிலும் அனுமதிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

(தொடரும்)



# இப்fபத் நவாஸ்

பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட இப்fபத் நவாஸ், தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வருகின்றார். சட்டத் துறையில் வழக்குரைஞராகப் (solicitor) பணியாற்று கின்றார். ஐக்கிய இராச்சியத்தின் 20 மிகச் சக்தி வாய்ந்த முஸ்லிம் பெண்களில் இப்fபத்தும் ஒருவர். அந்நாட்டின் முஸ்லிம் சட்டத் தரணிகள் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்த அவர், தற்போது அதன் நிறைவேற்றுக் குழு அங்கத்தவராக விளங்குகின்றார். 20 ஆண்டு கால சட்டத்துறை அனுபவம் தனக்குள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பொதுவாக முஸ்லிம் பெண்கள் தமது தொழில்வாண்மையில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர். தானும் அத்தகைய சவால்களை எதிர்கொண்டதாகவும், எனினும், 20 ஆண்டுகால சட்டத்துறை அனுபவத்தினால் அத்துறையில் புறக்கணிக்க முடியாத ஒரு தொழில்வாண்மையாளராக தன்னை மாற்றிக் கொண்டதாகவும் கூறுகின்றார்.

''பெண்கள் ஒரு நிறுவனத்தில் மிக உயர்ந்த நிருவாகம் சார் பதவியை அடைவது மிகவும் கடினமானது. நான் அதனை எனது வாழ்வில் கண்டிருக்கின்றேன். மிகக் கடினமான அர்ப்பணமும் தன்னம்பிக்கையுமே உயர் பதவிகளுக்கு பெண்களைக் கொண்டு வருகின்றன. திறமை இதில் மிக முக்கியமானது. அனுபவமும் திறமையும் பெற்ற ஓர் வழக்குரைஞராக மாறுவதற்கு தொடர்ச்சியான உழைப்பும் அவசியம்.

சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் இஸ்லாமிய உலகைப் பொறுத்தவரை முஸ்லிம் பெண்கள் மிகச் சொற்பமாகவே உள்ளனர். எனக்கு சிறிது காலம் ஐக்கிய இராச்சியத்தின் முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியை வகிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. தலையை மறைத்து ஆடை அணியும் நிலையை, ஆண் சட்டத்தரணிகளையும் உள்ளடக்கிய ஒரு கழகத்தில் பணியாற்றுதல் என்பது மிகுந்த சவால் நிறைந்தது. அறிவு, மனப் பக்குவம் அதற்குத் தேவை.

ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரை இங்கு வாழும் புலம்பெயர் சிறுபான்மை இனங்கள் இத்தகைய பதவிகளுக்கு வருவது மிக அரிதாகும். நடைமுறையில் அவர்கள் எதிர்நோக்குகின்ற தடைகளே அதற்கான காரணமாகும். நான் எனது சமயத்தை சரியாகப் பின்பற்றிக் கொண்டே இவ்வாறான ஒரு பணியில் ஈடுபட வேண்டும். என்னைப் பொறுத்தவரை சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் சாதாரண மக்களுக்கு இதன் மூலம் பெருமளவு உதவலாம் என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்துள்ளேன்.

குறிப்பாக ஐக்கிய இராச்சியத்தில் கட்டட நிர்மாணத் துறை தொடர்பான சட்டச் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதில் இங்குள்ள வெளிநாட்டவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் எனது பணி குறித்த திருப்தி எனக்குள்ளது.

சட்டத் துறையில் பணியாற்ற விரும்பும் கனிஷ்ட வழக்குரைஞர்களுக்கு நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் என்ன என்பது பற்றி அவரிடம் வினவப்பட்டது.

ஐக்கிய இராச்சியத்தில் சட்டத்துறைவாண்மை மிகக் கேள்வியுள்ள ஒரு தொழிற்துறையாகும். ஆனால் இதில் ஈடுபடுகின்றவர்கள் மிக அவதானமாகவும். கவனமாகவும் இருக்க வேண்டும். ஓர் எழுத்துப் பிசகிவிட்டால் நமது தொழிற்துறையே நமக்குப் பிரச்சினையாக மாறிவிடும். அதேபோன்று இத்தொழிற்துறையில் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

சக்தி வாய்ந்த ஒரு வழக்குரைஞராக தான் மாறுவதற்கு தனது ஆளுமையில் தாக்கம் செலுத்திய சில முன்மாதிரிகளையும் இப்fபத் நினைவுகூர்கின்றார். அவர்களுள் யாஸ்மின் குறைஷி, ஷமி சக்கரவர்த்தி, வாரூன் வரிஸ் போன்றோர் முக்கியமானவர்கள்.

தனியார் துறையிலும் அரச துறையினும் நகர திட்டமிடல், கட்டட நிர்மாணம் போன்ற துறைகளில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி வரும் இப்பத், 1985 இல் டீ மொன்போர்ட் பல்கலைக்கழகத்தில் LLB பட்டத்தைப் பெற்றார். ஐக்கிய இராச்சியத்தில் செயல்படும் பல்வேறு சட்ட கழகங்களிலும் சமூக சேவை நிறுவனங்களிலும் இப்fபத் இணைந்து பணியாற்றுகின்றார்.

# அறபுமொழியில் குர்ஆனை விளங்குவதற்கான வழிகாட்டல்

அல்குர்ஆனை விளங்குவதில் அறபு மொழி தெரியாத பலர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தர்ஜுமாக்கள் மற்றும் மொழி பெயர்க்கப்பட்ட தப்ஸீர்களே இதில் எமக்குத் துணை செய்கின்றன. எனினும், அல்குர்ஆனை அது இறக்கப்பட்ட அறபு மொழியில் புரிந்துகொள்வதில்தான் உண்மையான சுவை இருக்கின்றது. அதன் மூலமே குர்ஆன் எமது வாழ்வோடு ஒன்றித்ததாக மாறும்.

குர்ஆனிய அறபைக் கற்பிப்பதில் விஷேட ஆர்வம் சமூகத்தில் அதிகரித்துள்ள நிலையில், அல்குர்ஆனிய அறபு எனும் வழிகாட்டி நூல் வெளிவந்துள்ளது. 100 கற்கை மணித்தியாலங்களை உள்ளடக்கியதாக மட்டம் ஒன்றிற்கான மாணவர் கையேடு அஷ்ஷெய்க் ஏ.ஏ. கியாஸ் முஹம்மத் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், அறபு இலக்கணத்தின் பிரதான சட்டங்கள் ஆரம்பத்தில் சுருக்கமாக விளக்கப்படுகின்றது. பின்னர் அவற்றை குர்ஆனிய ஸூறாக்களில் பிரயோகித்துக் கற்றுக் கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில ஆண்டுகளாக நூலாசிரியருக்கு கிடைத்த அல்குர்ஆன் கற்பித்தல் அனுபவங்களும் இந்நூலை வடிவமைப்பதற்கு உதவியுள்ளன.

100 மணித்தியாலங்களைக் கொண்ட இக்கற்கைநெறியை நிறைவுசெய்கின்ற போது குர்ஆனை ஓதுகையில் ஓரளவு விளங்கும் நிலையை மாணவர்கள் அடைகிறார்கள்.




கட்டம் இரண்டில் அல்குர்ஆனின் முதல் ஐந்து ஸூறாக்களின் எஞ்சிய பகுதியை இதே விதத்தில் தொடர்ந்தும் சுமார் 100 மணித்தியாலங்களுக்குக் கற்க முயற்சி மேற்கொள்ளப்படுமானால் சுயமாகவே குர்ஆனை விளங்கும் ஆற்றலை ஒருவர் அடைந்துகொள்வார்.

''அல்குர்ஆனை நாம் இலகுவானதாக ஆக்கியிருக்கிறோம். அதனைப் பற்றி சிந்திப்பவர்கள் உண்டா'' என ஸூறா கமரில் அல்லாஹ் திரும்பத் திரும்பக் கேட்கின்றான். அல்குர்ஆனில் ஒரே சொல் பல இடங்களில் மீட்டப்பட்டுள்ளது. மட்டுமன்றி, குர்ஆனின் மொழிநடை இலகுவானது. ஒரே போக்கைக் கொண்டது என்பன அதன் இலகுத் தன்மைக்கான சில எடுத்துக் காட்டுகளாகும்.

இப்பின்னணியிலேயே 'அல்குர்ஆனின் அறபு' மாணவர் கையேடு 170 பக்கங்களில் வெளிவந்துள்ளது. 43 அத்தியாயங்களில் இக்கையேடு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் அடிப்படை இலக்கண விதிகள் ஆரம்பத்தில் போதிக்கப்படுவதோடு, ஒவ்வொரு வசனத்தையும் படிக்கின்றபோது அவ்விதிகள் மீண்டும் மீண்டும் ஞாபகமூட்டப்படுகின்றன. மாணவர்கள் அவற்றை சுயமாக இனங்காணும் வகையில் இலக்கம் இடும் முறையும் கையாளப்படுகின்றது. இதனால் காலப் போக்கில் குர்ஆனை விளங்குவது மாணவர்களுக்கு இலகுவானதாக மாறுகின்றது.

அறபு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாத அனைவருக்கும் இந்நூல் பயனளிக்கும் என்று நம்பலாம். ஏனெனில் சொற்களுக்கான விளக்கமும் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூலை துணையாகக் கொண்டு அறபு இலக்கணச் சட்டங்களை குர்ஆனிய ஸூறாக்களில் கண்டு விளங்குவதற்கு இந்நூல் துணையாக அமையும்.

அறபு மொழி தெரியாதவர்கள் குர்ஆனை விளங்க ஏராளமான முயற்சிகள் இலங்கையின் வரலாறு நெடுகிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கிடைக்கின்ற தர்ஜுமா, தப்ஸீர் எனப்படும் விளக்கவுரைகள் இதில் முக்கியமானவை. ஆனால், அறபு மொழியைப் படித்து குர்ஆனை விளங்க முயற்சிப்பது ஒரு அலாதியான இன்பமாகும். அதற்கான தூண்டுகோலை இந்நூல் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு... (01ம் பக்கத் தொடர்)

ஆயுதமேந்திப் போராடிய பல தமிழ் அமைப்புக்கள் இன்று ஒன்றாக இணைந்து தமது இனத்துக்காக குரல் கொடுக்கின்றன. முஸ்லிம் கட்சிகளை இவ்வளவு வருடங்களாகவும் பெரும்பான்மைக் கட்சிகள் தான் வழிநடத்துகின்றன. இதனால் எமது உரிமைகள் பறிபோகின்ற நிலைகளிலும் இந்தக் கட்சிகளால் தனது சமூகத்துக்கு எதனையும் செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது.

கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை இணைத்து முஸ்லிம் பெரும்பான்மையுள்ள கல்முனை மாவட்டம் உருவாக்கப்படுவதற்கான சாத்தியம் இருந்தது. ஆனாலும் முஸ்லிம் கட்சிகளின் பலவீனத்தினால் அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டு, இன்று முஸ்லிம்கள் சிறுபான்மையாகும் நிலை தோன்றியுள்ளது. இதேபோல 1987 இல் புதிய பிரதேச சபைகள் உருவாக்கப்பட்ட போதும் முஸ்லிம் கட்சிகளால் எதுவுமே செய்ய முடியாமல் போனது.

தற்போதைய எல்லை மீள்நிர்ணய முயற்சிகளின் போதும் எதையுமே செய்ய முடியாத நிலையிலேயே முஸ்லிம் கட்சிகள் உள்ளன. நாங்கள் ஒருமித்துக் குரல் கொடுக்காவிட்டால் இன்னும் ஐம்பது வருடங்கள் போனாலும் இந்த நிலை தான் தொடரப் போகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை அடுத்த தலைமுறைக்கும் விட்டுச் செல்லக் கூடாது என்பதனால் தான் முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றுக்கான பகிரங்க அழைப்பை நாங்கள் விடுத்தோம். அதற்குப் பதிலளித்த பலரையும் இணைத்து கூட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த அழைப்புக்கு இதுவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதிலளிக்கவில்லை. நானும் மு.கா.வின் உறுப்பினர் என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன் எனவும் ஹஸன் அலி மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

## போதையில்... (01ம் பக்கத் தொடர்)

'பீபல்ஸ் ஒப் சிறீலங்கா'- (இலங்கை மக்கள்) என்னும் நூல் வெளியீட்டு வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டு உரையாற்றும் போது சட்டவிரோத போதைப்பொருள் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை பாராட்டுவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட வரப்பிரசாதங்களை வழங்கவும் பொருத்தமான திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளதாக தெரிவித்த நிலையிலேயே 6 ஆவது தடவையாகவும் கொக்கேன் கைப்பற்றப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் உருவாகி இரண்டரை வருட காலத்திற்குள் மொத்தமாக 1579 கிலோ கொக்கேன் போதைப் பொருள் தடுப்பு பிரிவனரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

6 முறை கைப்பற்றப்பட்ட 1579 கிலோ கொக்கேனுக்கு இதுவரை என்ன நடந்துள்ளது? இதற்காக பொறுப்பு வாய்ந்த சதொச நிறுவனத்தின் அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்ற கேள்விகள் பல்வேறு தரப்புகளில் இருந்தும் எழுப்பப்பட்டு வருகின்றன.

## இணைந்த... (01 ஆம் பக்கத் தொடர்)

கூழாமுறிப்பு பிரதேசத்தில் 172 ஏக்கர் காணியை வன்னி அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மூலமாக பிரதேச மக்கள் அரசாங்கத்திடம் கோரியிருந்தனர். இதற்கான அங்கீகாரம் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே இதனை எதிர்த்து சில தமிழ்க் குழுக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் ஐயூப் அஸ்மினை மீள்பார்வை தொடர்பு கொண்டு கேட்ட பொழுது அவர் தொடர்ந்தும் கூறுகையில், கூழாமுறிப்பில் முஸ்லிம்களுக்கு காணி வழங்கப்படுமானால் மல்லிகைத் தீவில் தாங்கள் விண்ணப்பித்த 244 ஏக்கர் காணியும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என இவர்கள் கோருகின்றனர். இராணுவம் கையகப்படுத்திய ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை விடுவித்து அரசாங்கம் தமிழர்களுக்கு வழங்கிய போது முஸ்லிம்கள் அதனை எதிர்க்கவில்லை. இதை வைத்து முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை எதிர்ப்பது பொருத்தமானதல்ல என்று தெரிவித்த அஸ்மின், யுத்தம் செய்து தோல்வியடைந்த ஒரு சமூகம், மீண்டும் மீண்டும் யுத்தத்தை நோக்கியே நகர்ந்து செல்வது அழிவையே கொண்டு வந்து சேர்க்கும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னிடம் தகவல்களைக் கோரியுள்ளதாகத் தெரிவித்த அஸ்மின், இடம் பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் வந்து வாழாமல் இருப்பது அவர்களை மீளக் குடியமர்த்துவதில் உள்ள பிரதான சிக்கலாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதற்கு எதிர்பார்த்திருக்கும் சிலருக்கு தமது இலாபத்துக்காக இங்கு பிரச்சினைகளை மூட்டிவிட வேண்டிய தேவை இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.தே.க.வுக்கும்... (07ம் பக்கத் தொடர்)



எனவே அரசாங்கம் வெறும் பத்திரிகை அறிவித்தல்களை மாத்திரமே வழங்கி வருகிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களுக்கிடையில் பலமான பிணைப்பொன்றில்லை. ஆளுக்கால் குற்றம் சுமத்துகிறார்கள். அரசாங்கம் சகல துறைகளிலும் பலவீனமாக உள்ளது.

- **எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தயார்நிலைகள் எவ்வகையிலுள்ளது?**

2020 பொதுத் தேர்தலை குறிக்கோளாகக் கொண்டு மக்கள்மய அரசொன்றை தாபிப்பதற்கு மக்களை அணிதிரட்டி வருகின்றோம். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தொழிற்சங்கங்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரசாங்க ஊழியர்களைப் பயன்படுத்தி 2020 இனை மையப்படுத்திய சக்தியொன்றை உருவாக்கி வருகின்றோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சியின் அடிமட்டத்தை பலப்படுத்தும் விடயமும் இடம்பெற்று வருகின்றது.

- **மக்கள் விடுதலை முன்னணி சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அதிகம் குரலெழுப்பி வருகின்றது. ஆனால் தேர்தல்களின் போது அம்மக்கள் ஜேவிபிக்கு வாக்களிக்கப் பின் வாங்குவதற்கான காரணம் என்ன?**

பல விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. மக்கள் பொதுவாக அரசாங்கமொன்றை அமைப்பதற்கே வாக்களிக்கிறார்கள். எதிர்க் கட்சிக்குக் கூடுதல் பலத்தை தருமாறு நாம் அவர்களிடம் கூறினால், அவர்கள் எங்களுக்கும் வாக்களித்து விட்டு அரசாங்கத்தை அமைப்பதற்கான பலம் கூடிய கட்சிக்கும் வாக்களிக்கின்றார்கள்.

தற்பொழுது இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சியை வழிநடத்துவதால் மக்களுக்கு அரசாங்கத்தில் அதிருப்தி ஏற்படுகின்ற போது பிரிதொரு சக்தியொன்றின் பாலான தேவை ஏற்படுகிறது. இவ்வெற்றிடத்தை ஈடு செய்யும் பலமான எதிரணியாக உருவாவதற்கே நாம் உழைத்து வருகிறோம்.

கிராமிய மட்டங்களில் மக்களை தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். உண்மையில் பார்த்தால் தற்பொழுது கீழ் மட்டத்தில் அரசாங்கம் ஒன்றில்லை. நாம் அம்மக்களோடு இணைந்து பணியாற்றும் பொழுது 2020ம் ஆண்டளவில் எமக்கு பாரிய சக்தியாக உருவாகலாம் என நாம் நினைக்கின்றோம்.

## முஸ்லிம்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

திரும்பி வந்து அதே சமூகத்தை தாக்கி, மொத்த சமூ கங்களையும் மூழ்கடித்து விடும். இந்த வகையில் தற்போதைய முஸ்லிம் விரோத தாக்குதல்கள் நல்ல விளைவைத் தரப்போவதில்லை. பெரும்பாலான சிங்களவர்களும் இதற்கு ஆதரவளிப்பதில்லை.

சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான வரலாற்றுப் பிணைப்பும், சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளில் இரண்டு சமூகங்களின் பொதுத் தன்மையும் அவர்களில் முன்னரை விட அதிகம் பிணைப்பை வேண்டி நிற்கின்றன. பெரும்பான்மை சிங்களவர்களதும் முஸ்லிம்களதும் விரிந்த மனப்பாங்கு புதிய பிளவுகளுக்கு இடம் கொடுக்கப் போவதில்லை. தனி இன வடக்கு மாகாணம் போலன்றி முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு மத்தியில் கூட்டாக வாழ்வது இதற்கு நல்ல சான்றாகும்.

நூற்றாண்டு காலத் தொன்மை வாய்ந்த இந்தப் பிணைப்பில் என்றுமே பிளவுகள் வந்ததில்லை. இந்த இரு சமூகங்களுக்கிடையில் வரக் கூடுமான முரண்பாடுகள் ஞானசார தேரர் அளுத்கமையில் அரங்கேற்றியது போல திட்டமிட்டுச் செயற்படுத்துபவைகளாகத் தான் அமைய முடியும். அளுத்கம தாக்குதல்கள் போலவே முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீதான அண்மைய தாக்குதல்களும் ஒழுங்கப்பட்ட வெளியார் குழுவினரின் செயற்பாடுகளே அன்றி ஊரிலே ஒன்றாக வாழ்ந்த சிங்கள மக்களால் நடத்தப்பட்டதல்ல. திருப்பித் தாக்குவதற்கு முஸ்லிம்களைத் தூண்டுவதற்காகவே இந்த திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அண்மைய தாக்குதல்கள் தனிநபர் தாக்குதல்களாக விளங்கினாலும், தாக்குதல்களின் கால இட இடைவெளியும், தாக்குதல்களின் பரிமாணமும் இவை ஒழுங்கமைக்கப்பட்ட, கனதி குறைந்த முஸ்லிம்களுக்கு எதிரான கலவரமாகவே அமைந்திருந்தன. தனிப்பட்ட தாக்குதல்கள் என்ற ரீதியில் உரிய செய்திப் பரிமாணம் கொடுக்கப்படாமல் ஊடகங்களை தவிர்ப்பதற்கு இந்தத் திட்டம் உதவியது. 83 கலவரமும் இதுபோலத் தான் வடிவமைக்கப்பட்டது.

மூன்று தசாப்த போர் வடுக்களில் இருந்து நாடு மெதுவாக தலை தூக்கத் தொடங்கியிருக்கிறது. தற்போதைய நிகழ்வுகள் இலங்கையை மீளவும் பின் தள்ளுவதற்கான இரண்டாவது காட்சியை அரங்கேற்றுவதற்கான புதியதொரு வன்முறை உருவாக்கமாகவே தெரிகிறது.

பிராந்திய புவிஅரசியல் சக்திகள் இதனூடாக இலங்கையின் இறைமையை சூறையாடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கின்றன. வெள்ளாடை அணிந்த நாசகாரச் சக்திகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றவும் அதற்காகக் குரல் கொடுக்கவும் நாட்டு மக்கள் இம்முறை முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

## காந்தியை... (03ம் பக்கத் தொடர்)

இந்தியா தற்போது பாக்கிஸ்தானையும் சீனாவையும் எதிர்கொள்வதற்கான 100 பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ நவீனமயமாக்கலில் தீவிரமாக உள்ளது. ஏடுகளில் இந்தியா பலஸ்தீனின் நட்பு நாடாகவே உள்ளது. பலஸ்தீன அதிகார சபையின் அன்றி பலஸ்தீனின் தலைவரென புதுடில்லி அழைக்கும் மஹ்மூத் அப்பாஸுடனும் அது நல்லுறவைப் பேணுகிறது. ஆனாலும் கடந்த மே மாதத்தில் அவர் இந்தியாவுக்குச் செய்த விஜயத்துக்கு இந்தியா குறைந்த பெறுமானமே வழங்கியிருந்தது. அத்துடன் இரு நாட்டுத் தீர்வுக்கு ஆதரவளித்து இந்தியா வெளியிட்ட பிரகடனத்திலும் கிழக்கு ஜெரூஸலத்தை பலஸ்தீனின் எதிர்காலத் தலைநகராகக் குறிப்பிடுவதையும் புதுடில்லி வசதியாக மறந்து விட்டது.

துளிர்விடும் இந்தியாவுடனான உறவில் இஸ்ரேலுக்குத் தடையாக இருப்பது இந்தியாவின் ஜனநாயகம். சீனாவில் பீஜிங் தலைமைகளால் தீர்மானம் எடுக்கப்படுவது போலன்றி இந்திய அரசியல்வாதிகள் தமது வாக்காளர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அத்தோடு ஆட்சிப் பலமும் கட்சியில் இருந்து கட்சிக்கு மாறுபடுகிறது. ஹிஸ்புல்லாவுடனோ ஹமாஸுடனோ போரொன்று மூளும் பட்சத்தில், அல்லது இந்தியா தனது மூலோபாய எதிரியாகக் கருதும் சீனாவுக்கு இஸ்ரேல் தனது லாபத்துக்காக ஆயுதம் விற்பனை செய்யும் பட்சத்தில், மோடிக்கு இஸ்ரேல் தலையிடியாக மாறும். எதிராளியான காங்கிரஸ் கட்சியின் அரசாங்கம் பொதுவில் நட்புக் காட்டப் போவதில்லை.

சுற்றுலாத் துறை போன்ற தனிநபர் தொடர்புபடக் கூடிய ஒப்பந்தங்களை பலப்படுத்துவதில் இரு தரப்பும் ஈடுபட்டது ஏன் என்பதை இந்த அவதானங்கள் புரிய வைக்கும். இராணுவ உயர் அதிகாரிகளும் பிஜேபி அரசியல்வாதிகளும் இந்தியாவில் தாராளமாக இஸ்ரேலின் புகழை பரப்ப முடியும். ஏனென்றால், பெரும்பாலான இந்தியர்களுக்கு யூத நாட்டைப் பற்றி சிறிதளவு தான் தெரியும், அது அவர்களை விட்டும் வெகு தொலைவில் இருப்பதால்.

## நெறி பிறழும்... (12 ம் பக்கத் தொடர்)

அவருடன் எனக்கு நாற்பது வருட உறவு உண்டு என்று கூறும் ரய்ஸூனி, அந்த உறவில் எந்தக் கலப்படமும் இன்று வரை எனக்கில்லை. ஆனால் இன்று இவர் மன்னர்களுக்காகப் பேசுவது சுயநலத்தின் வெளிப்பாடு. நிச்சயமாக அவர் வெளிப்படுத்தியது அவருடைய சொந்தக் கருத்து அல்ல. இருப்பினும் அவர் பேசும் கருத்துக்கள் இஸ்லாத்தை பாதிக்கும்போது சும்மா இருக்க முடியாது. என்னைப் பொறுத்த மட்டில் இஸ்லாம் என்று வரும்போது விட்டுக் கொடுப்பு கிடையாது என ரய்ஸூனி அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கு மன்னருக்குப் புகழ்பாடும் பாரூக் ஹம்மாதி உலக இலாபங்களுக்காக அறிவை தாரை வார்த்துள்ளார் என்பது மட்டுமே உண்மை. இதனைத்தான் ஏற் கனவே சூரா அஃராவின் 175 ஆம் வசனம் எச்சரிக்கிறது என்று கூறினோம்.

அவ்வாறே அஹ்மத் ரய்ஸூனி அவர்கள், அறிஞர் பாரூக் மீதான விமர்சனப் பார்வையைத் தொடர்ந்து ஒரு சுவாரஷ்யமான கதை ஒன்றையும் குறிப்பிடுகிறார். எகிப்திலிருந்து சவூதி பல்கலைக் கழகமொன்றுக்குப் பேராசிரியராக நியமனம் பெற்றுச் சென்ற ஒரு மார்க்க அறிஞர் அங்கு சென்ற பிறகு கருத்தழிந்து போனார். படிப்படியாக தனது கருத்துக்களை விட்டும் விலகியதோடு ஏற் கனவே பலவீனமான கருத்து என்று விமர்சித்ததை தற்போது தனது கருத்தாக வெளிப்படுத்தியுள்ளார்.

இது ஏன் என்று அவரைக் கேட்ட போது, உண்மையில் இவை பலவீனமான கருத்துக்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சவூதி ரியால் இந்தக் கருத்துக்களை பலப்படுத்திவிட்டது. இனி நான் என்ன செய்வேன் என்றாராம். காத்தான்குடி மர்ஹூம் அப்துல் காதர் லெவ்வை அவர்கள் இப்படிப்பட்ட நிலைமாறும் பச்சோந்திகளை காக்கை கூட நிற்பதற்கு வக்கில்லாத சேற்றில் நட்டிய கம்பம் என்று வர்ணிப்பார்கள்.

இது தவிர நாம் வரலாற்றில் கண்டு வந்த உலமாஉஸ் ஸுல்தான் என்று வர்ணிக்கப்படும் அதிகார வர்க்கத்திற்கான நயவஞ்சக உலமாக்களை அண்மைக் கால நிகழ்வுகள் தாராளமாக முளைக்கச் செய்கிறது. அதற்காக மட்டிட முடியாத காசு பணம் பரிமாறப்படும் என்பதை வரலாறு சொல்லித் தந்துள்ளது.

இங்கே மௌனம் காக்கும் உலமாக்கள் ஒரு பக்கம். ஒத்தோடும் உலமாக்கள் மறுபக்கம். மௌனம் கூட சம்மதம் என்பதால் அரசுக்கு சார்பாகப் பேசினால் மட்டுமே தப்பலாம் என திரிசங்கு நிலையும் நிலவுகிறது.

இப்படியான நெருக்கடியான நேரத்தில் ரப்பானிய அறிஞர்கள் வழி நின்று சமூகத்தை வழிநடாத்துவது அறிஞர்களின் தார்மீகக் கடமையாகும்.

அன்று அப்பாஸிய ஆட்சியாளர் அபூ ஜஃபர் அல்மன்ஸூரின் காலத்தில் தோன்றிய அநீதிக்கு எதிரான புரட்சிக்கு இமாம் அபூஹனீபா அவர்கள் ஆதரவளித்தார்கள். அப்பேது இமாமவர்கள் ஆட்சியாளர்களின் பிச்சைப் பதவிகளுக்கு அடிமையாகவில்லை. இறையருளான அறிவை அதிகாரத்திற்கு தாரைவார்க்கவுமில்லை. அதனால் அவர் கடுமையான சாட்டையடிக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் விலங்கிடப்பட்ட நிலையில் சிறைவாசம் சென்றார். விலங்கிடப்பட்ட நிலையிலேயே ஹி.150 இல் சிறையில் வைத்து வபாத்தானார்கள்.

இமாம் அபூ ஹனீபா அநியாய ஆட்சிக்கு எதிரான புரட்சியின் போது நீதியின் பக்கம் நின்று புரட்சிக்கு ஆதரவு தந்தவர். மார்க்கத்தை விற்று பதவிகள் வாங்க மறுத்ததால் சாட்டையடிபட்டு சிறைவாசம் சென்ற ரப்பானிய அறிஞர். (இறைவனுக்காக என்றே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அறிஞர்)

இதே கொந்தளிப்பான காலப்பகுதியில் மதீனா கவர்னர் ஜஃபர் பின் ஸுலைமான் அவர்கள் இமாம் மாலிக் அவர்கள் மீதும் என்பது கசையடிகள் கொடுத்து மதீனா அறிஞர் பொன் மேனியை பதம் பார்த்தவர். இதுவும் ரப்பானிய அறிஞர் வரிசையில் நமக்கு ஒரு முன்மாதிரியாகும். இமாம் மாலிக் அவர்களும் அன்று அநீதிக்கெதிரான புரட்சிக்கு ஆதரவு வழங்கியவரே.

இவ்வாறே கலீபா முஃதஸிம் பில்லாவின் காலத்தில் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் மிகக் கடுமையான வதைக்கு உட்பட்டார்கள். இமாம் அவர்களின் இரண்டு கைகளும் கழன்று தொங்கும் அளவிக்கு கசையடி பட்டார்கள். கைகால்கள் இரண்டும் விலங்கிடப்பட்ட நிலையில் ஒடுக்கமான ஒரு இருட்டறையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

அன்று தறி கெட்ட ஆட்சியாளர்களின் விருப்பப்படி அவர் ஒரு பத்வா கொடுத்திருந்தால் ராஜபோக வாழ்க்கை நிச்சயாமாக அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனால் ரப்பானிய அறிஞர் இமாம் அஹ்மத் அவர்கள் சத்தியத்தை மறைக்கவி [illegible] கொரத்தைக் கண்டு பயப்படவுமில்லை. உண்மையைச் சொல்ல தயங்கவுமில்லை. அடிக்குப் பயந்து மௌனம் காக்கவுமில்லை.

தறிகெட்ட ஆட்சியாளர்களுக்கு முன்னால் ரப்பானிய அறிஞர்கள் எங்கே சீர்கெட்ட உலமாக்கள் எங்கே!...


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline 0777381561 People's Bank A/C 856200153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்கு அடித்த கல்



ஒரு காப்புறுதி நிறுவனத்தின் உரிமையாளர் தனது அலுவலகத்திற்கு செல்வதற்குத் தயாரானார். அவரது வீட்டிலிருந்து வெளியில் வந்து தனது கார் கதவைத் திறந்து, அதனுள் ஏற முற்பட்டார். அப்போது காரின் கீழ் படுத்திருந்த ஒரு நாய் அவரை பாய்ந்து கடிக்கப் பார்த்தது. அவர் கீழே விழுந்துவிட்டார். விரைவாக எழுந்து சில கற்களை பொறுக்கி அந்த நாய்க்கு அடிக்க முயற்சித்தார். ஆனால், ஒரு கல்லும் அந்த நாய்க்குப் படவில்லை. அது தப்பிச் சென்றுவிட்டது.

அதன் பிறகு அவர் காரில் ஏறி மிகுந்த கோபத்துடன் அலுவலகத்திற்குச் சென்றார். அன்று கிளை முகாமையாளர்களுடன் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தின் இடையே நாயின் மீதுள்ள கோபத்தை முகாமையாளர்கள் மீது அவர் வெளிப்படுத்தினார். முகாமையாளர்கள் ஏன் தமது நிறுவன உரிமையாளர் கோபப்பட்டார் என்பது தெரியாது தடுமாறினர். தம்மை அநியாயமாகத் திட்டிவிட்டார் என அவர்கள் கோபப்பட்டனர். கூட்டம் நிறைவடைந்தது.

முகாமையாளர்கள் தமது கிளைகளுக்கு சென்றனர். அங்கு அலுவலக ஊழியர்களுடன் கூட்டம் நடைபெற்றது. தமது நிறுவன உரிமையாளர் தம்மீது காட்டிய கோபத்தை அவர்கள் தமது ஊழியர்கள் மீது காட்டினர். இது தொடர்ந்து சென்றது. கடைசியாக அந்நிறுவனத்தின் கீழ்நிலை ஊழியர் மீது அவரது உயரதிகாரி கோபத்தை வெளிப்படுத்தினார். அவனுக்கு கீழ் அந்த நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் எவரும் இருக்கவில்லை. அவன் கோபத்துடன் வீட்டுக்குச் சென்றான்.

அவனது மனைவி 'ஏன் இன்று தாமதமாகி விட்டீர்கள்' என்று கேட்டாள். கோபத்தில் இருந்த அவன் தனது மனைவிக்கு கன்னத்தில் அறைந்து விட்டு 'நான் காற்பந்தாட்டம் விளையாடச் செல்லவில்லை. வேலைக்கு சென்று வருகிறேன். தேவையில்லாத கேள்விகளை கேட்காதே' என்றான். எதிர்பார்க்காமல் அடிவாங்கிய மனைவி கோபமுற்றாள். அவளது கோபத்தை தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த மகன் மீது வெளிப்படுத்தினாள்.

அவன் மீது அறைந்த அவள் 'உனக்கு எப்போதும் தொலைக்காட்சி பார்ப்பது தான் வேலை. படிப்பதே இல்லை. அதனை அணைத்து விட்டு போ' என்று அவன் மீது சீறி விழுந்தாள். ஆத்திரமடைந்த அவன் கோபத்துடன் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றான். பாதையில் அவன் நடந்து சென்றுகொண்டிருக்கும் போது ஒரு நாய் அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டு சென்றது. கோபமடைந்த அவன் ஒரு கல்லை எடுத்து அடித்தான். அடிப்பட்ட நாய் கத்திக்கொண்டு ஓடியது. அன்று காலை காப்புறுதி நிறுவன உரிமையாளர் மீது பாய்ந்த அதே நாய்தான் அது.!!!

## நல்லதை பேசுங்கள்



ஒரு முதியவர் தனது அயல் வீட்டில் வாழ்ந்த இளைஞன் மீது போலியாக பல கதைகளை இட்டுக்கட்டினார். ஒரு தடவை அவன் மீது திருட்டுக் குற்றச்சாட்டையும் சுமத்தினார். பொலிசார் அவனைக் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி அவன் நிரபராதி எனத் தீர்ப்பளித்தார்.

அடுத்த நாள் நீதிமன்றத்தில் அந்த இளைஞன் தன் மீது அவதூறாக திருட்டுக் குற்றச்சாட்டை சுமத்திய முதியவரிடமிருந்து மானநஷ்டஈட்டை கேட்டு வழக்குத் தொடர்ந்தான். வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. அம்முதியவர் தான் வெறுமனே எனது கருத்தைத்தான் கூறினேன். அவ்விளைஞனின் மானத்தை போக்க வேண்டும் என நினைக்கவில்லை என்றார்.

வழக்கின் தீர்ப்பை கூறுவதற்கு முன்னர் நீதிபதி அம்முதியவரிடம், நீங்கள் இவ்விளைஞன் மீது கூறிய விடயங்களை ஒவ்வொரு தாளில் எழுதுங்கள். நீங்கள் வீடு திரும்பும்போது அவற்றை ஒவ்வொன்றாக வீசிச் செல்லுங்கள் என்றார். அம்முதியவரும் அவ்வாறே செய்தார்.

அடுத்த நாள் நீதிமன்றம் கூடியது. வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. நீதிபதி அம்முதியவரிடம் நீங்கள் நேற்று வீசிச் சென்ற தாள்களை எடுத்து வாருங்கள். நான் அதன் பின்னர் தீர்ப்பைக் கூறுகின்றேன் என்றார். உடனே அம்முதியவர், நீதிபதி அவர்களே அவற்றை எப்படி நான் சேகரித்துக் கொண்டு வருவேன். அவை அனைத்தும் காற்றில் பறந்து பல்வேறு இடங்களுக்கும் சென்றிருக்கும் என்றார்.

அப்போது நீதிபதி அவர்கள் அம்முதியவரிடம், நீங்கள் கூறிய வார்த்தைகளும் இவ்வாறுதான். பலரிடமும் பரவிச் சென்று குறித்த நபரின் மானம் பறிபோய்விடும். அதனை மீண்டும் பெறுவது இலகுவானதல்ல. எனவே, உங்களுக்கு யாரைப் பற்றியேனும் நல்லது கூற முடியாவிட்டால் பேசாமல் இருங்கள். அதுவே சிறந்தது என்றார்.

## என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள்?




தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்


ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு சில வெளிநாட்டவர்கள் சுற்றுலா சென்றிருந்தனர். அங்குள்ள ஒரு கிராமத்திற்கு விஜயம் செய்த அவர்கள், கட்டிட வேலையொன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதை அவதானித்து, வேலைசெய்து கொண்டிருந்த அவர்களில் ஒருவரிடம், 'என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள்' என்று வினவினர். அதற்கவர், 'உங்களுக்கு விளங்கவில்லையா? நாம் கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கிறோம்' என்றார்.

அதே கேள்வியை அங்கு வேலை செய்துகொண்டிருந்த மற்றொருவரிடம் கேட்டனர். அவர், 'நாம் இங்கு ஒரு கலாசார நிகழ்வுகளுக்கான கட்டிடமொன்றை கட்டிக்கொண்டிருக்கிறோம். இதன் மூலம் எமது கிராமத்தவர்களது விஷேட நிகழ்வுகளை இங்கு நடத்திக்கொள்ள முடியும்' என்று விளக்கமாக சொன்னார். அவர்கள் அக்கட்டிட நிதிக்காக ஒரு தொகைப் பணத்தை வழங்கிச் சென்றனர்.

ஒரே கேள்விதான். ஆனால், வித்தியாசமான பதில்கள். வித்தியாசமான விளைவுகள். எந்தவொரு பணியில் ஈடுபடுபவர்களும் அப்பணியின் இறுதி விளைவு எவ்வாறிருக்கும் என்ற கற்பனையோடு வேலைசெய்ய வேண்டும். அப்போது விளைவுகளும் பெரிதாக இருக்கும்.

## வான்கா: குழந்தைகளின் வானம்

இன்ஸாப் ஸலாஹுதீன்




ரஷ்ய எழுத்தாளர் அன்டன் செகோவினுடைய வான்கா எனும் சிறுகதையைத் தழுவி மலையாலத்தில் இயக்குனர் ஜெயராஜினால் எடுக்கப்பட்ட திரைப்படத்தை நண்பர் பஷீர் இந்தியாவிலிருந்து அனுப்பி வைத்திருந்தார். இதனை நிச்சயம் பார்க்குமாறு எனக்குப் பரிந்துரைத்தார்.

ஒன்றரை மணிநேரம் ஓடும் இத்திரைப்படம் ஒரு காவியம் போல மனதில் நின்றுவிட்டது.

குட்டப்பாயி ஒன்பது வயது நிரம்பிய சிறுவன். பெற்றோரை இழந்த இவன், தன் தாத்தாவுடன் வளர வேண்டிய கட்டாயம். மிகுந்த அன்புடன் தாத்தாவுடன் இருந்துகொள்கிறான். அவர் வயதான காலத்தில் வாத்துக்களைப் பராமரிக்கும் ஒரு பண்ணைக்கு இவனுடன் வந்து சேர்கிறார். மெல்ல மெல்ல இவனும் தாத்தாவுக்கு ஒத்தாசை செய்கிறான்.

இயற்கையின் மடிதான் கதைக் களம். கேரளாவின் வனப்பு மிக்க ஒரு பகுதியில் கதை நகர்கிறது. இருவரும் இயற்கையுடன் மிக இணக்கமாக வாழ்கின்றனர். இயற்கையின் மடியில் படுத்துறங்குகின்றனர்.

குட்டப்பாயி இயற்கையிடமிருந்து ஒவ்வொன்றாகக் கற்றுக் கொள்கிறான். காலம் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்குகிறது.

பறந்த வானத்தின் கீழ் அருவிகளுக்கு மத்தியில் அவர்களது வாழ்க்கை கழிகிறது. இரவுகள் நட்சத்திரங்களால் அலங்கரிக்கும் நேரம் அவன் கதை சொல்கிறான்.யார்ருக்கு வாய்க்கும் இப்படி ஒரு வாழ்க்கை என்ற ஏக்கம் பிறக்கிறது.




இடையில் அவனுக்கு பெரிய வீட்டுப் பையன் தின்குவுடன் நட்பு ஏற்படுகிறது. இருவரும் நட்பைக் கொண்டாட விரும்புகின்றனர். அவனைப் போல படிக்க ஆசைப்படுகிறான். இருந்தாலும் அதற்கான வாய்ப்பு இவனுக்குக் கிட்டவில்லை.

ஒரு தடவை தின்குவிற்கு பாடசாலைக் கண்காட்சிக்காக மீன்பிடிக்கும் ஒரு காட்சியை குட்டப்பாயி சிலையாகச் செய்துகொடுக்கிறான். அது முதலாம் பரிசைப் பெறுகிறது.

தாத்தாவுக்கும் வயதாகி விட்டதால், தான் இறந்தால் சிறுவன் யா[illegible] வளர்வான் என்ற கவலை [illegible] வாட்டத் தொடங்குகிறது. வேறு வழி இல்லாமல் தூரத்திற்குப் படிக்க அனுப்புவதாகக் கூறுகிறார். படிப்பதற்கு ஆசை இருந்தாலும் தாத்தாவைப் பிரிய அவனுக்கு மனமில்லை. படிக்க அனுப்புவதாகக் கூறி தாத்தா அவனை தூர இடமொன்றுக்கு வேலைக்கு அனுப்பி வைக்கிறார்.

தாத்தாவினதும் இயற்கையயினதும் உறவைத் துண்டித்துக் கொண்டு அவனை அழைத்துச் செல்லும் போது கண்ணீர் தட்டி நிற்கின்றது. அவன் தாத்தாவுடன் இருந்து கொள்வதாக அடம் பிடிக்கிறான். அது கைகூடுவதில்லை.

வேலைத் தளத்தில் கடுமையாக வேலை கொடுக்கப்படுகிறது. தாங்க முடியாமல் தன் தாத்தாவுக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். இரவில் எழுந்து ஒரு [illegible] தபாலிடுவான்.

குழந்தைத் தொழிலாளிகளின் கதையை மையமாகக் கொண்டிருந்தாலும் இயற்கையுடன் சம்பந்தப்படுத்தி இப்படம் அருமையாக எடுக்கப்பட்டுள்ளது. ஒரு நல்ல இலக்கியத்தை அருமையான முறையில் தழுவி படமாக்கப்பட்டிருக்கிறது.

செகோவ் இக்கதையை எழுதி ஒரு நூற்றாண்டு கடந்தாலும் இன்னும் குழந்தைத் தொழிலாளிகளின் எண்ணிக்கை உலகில் குறையவில்லை. தமது குழந்தைப் பருவத்தை எங்கோ ஒரு தொழிற்சாலையில், கடையில், வீட்டில், தெருவோரத்தில், இழந்து கொண்டுதான் இருக்கிறார்கள் பல குழந்தைகள்.

இத்திரைப்படம் பல விருதுகளை வென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டு இத்திரைப்படம் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

இயற்கை குறித்த ஒரு படமாகவும் இதைப் பார்க்கலாம். காட்சியமைப்பு ஒளிப்பதிவு. பின்னனி இசை எல்லாமே மிகக் கச்சிதமாக அமைந்துள்ளது.

இத்தகைய இலக்கியங்களைப் படமாக்கும் முயற்சி தமிழில் நடைபெறுவதில்லை. ஆனால் ஜெயராஜ் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனைச் செய்துள்ளார்.

இத்திரைப்படத்தில் யாரும் கதா பாத்திரம் போலத் தோன்றுவதே இல்லை. வாழ்க்கையின் ஒரு அங்கம் போல அவர்கள் வந்து போகிறார்கள். திரைப்படத்தில் நடிகர்களுக்கு வேலையில்லை என்பது போல் இருக்கிறது. தேர்ந்த நடிகர்கள் இல்லா விட்டாலும் ஒரு நல்ல சினிமாவை எப்படி உருவாக்கலாம் என்பதை ஜெயராஜ் இங்கு நிரூபித்துள்ளார்.

ஒரு நல்ல இலக்கியத்திற்கும் நல்ல சினிமாவுக்கும் காலத்தைக் கடந்தும் பயணிக்கும் சக்தி இருக்கிறது என்பதை இங்கு புரிந்துகொள்ள முடிகிறது.

படத்தில் வரும் ஓடமும், தாத்தாவின் முகமும், நதியும், மரங்களும், வயல் வெளியும், நட்சத்திரங்களும் சிறுவனின் ஏக்கம் கலந்த முகமும் மனக் கண்களை விட்டு அகல மறுக்கின்றது.

### சமன்பாடுகள்

### தோற்றுப் போகும் உறவு

மரண வீட்டு வாசலில்
என்னை எதிர்பார்த்துக் கிடந்தாய்
நடுநிசி தாண்டியும் கண்ணிமைக்காது
காத்திருந்தாய்
நான் கட்டுண்டு கிடப்பது தெரிந்தும்
என் வருகையை அடிக்கடி வீதிவந்து
எட்டி எட்டிப் பார்த்தாய்
வந்த திரளில் தேடித்தேடி நோட்டமிட்டாய்
ஆயிரம் ஆறுதல் உனக்குக் கிடைத்தது
எப்படி இந்த ஒன்றேயொன்றை
ஆயிரத்துக்குச் சமனாக்குகிறாய்...!

எனது கட்டுகளை உடைத்து
அல்லது, குறைந்தபட்சம்
அனுமதியேனும் பெற்று
உன் வாசல் வந்து,
ஒரே ஒரு வார்த்தை
கூறிப்போக முடியாது போகும்
தவிப்பும் ஊமையும்
உனக்கெங்கே புரியப்போகிறது.
ஆயிரத்தையே என்னில் வைத்திருக்கும்போது
போடி, பைத்தியக்காரி
உன் வாங்காக் கண் ஈரப்ப முன்
இங்கு உறக்கமில்லாத் தவிப்பும்
அவஸ்தையும் சமன் ஆகா

சமன்பாடுகளே தோற்றுப்
போவதுதானே உறவு
உனது நீண்ட இரவில் இவனை
வாசலாகவோ,
ஜன்னலாகவோ
இப்போதைக்கு வைத்துக்கொள்
வெளியில் எங்கும் நிலவில் நான் வருவேன்
கடக்கும் வழியில், நான் வீசும் நட்சத்திரம்
ஆறுதலாகும்.



- சே. முனாஸ்

நன்றி - munaskalden.wordpress.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

"கால்பந்து விளையாட்டில் திறமை மட்டுமே எடுபடும். வேறு எதற்குமே அங்கு வேலை இல்லை. கால்பந்து மீதான ஆர்வம் என்னைப் போன்ற பழையவர்களிடம் இன்னும் அப்படியேதான் உள்ளது. அது போகாது"

-பீலே-



# 19 வயதின் கீழ் தேசிய கால்பந்து அணிக்கு 16 முஸ்லிம் வீரர்கள் தெரிவு

இலங்கை கால்பந்து சம்மேளமானது (FFSL), 19 வயதுக்கு உட்பட்ட வீரர்கள் பங்குபெறும் 2018 ஆம் ஆண்டிற்கான ஆசிய கால்பந்து சம்மேளன சம்பியன்ஷிப் தொடரின் தகுதிகாண் போட்டிகளில் இலங்கை சார்பாக கலந்து கொள்ளவுள்ள 32 வீரர்கள் கொண்ட குழாமை வெளியிட்டுள்ளது. இதில் 16 முஸ்லிம் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.



இலங்கை கால்பந்து சம்மேளனம் (FFSL), வீரர்கள் தெரிவு முகாம் ஒன்றை கடந்த ஜூன் மாதம் 13 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் சிட்டி கால் பந்து தொகுதி மைதானத்தில் நடாத்தியது. அதனடிப்படையில் தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் குழாமானது 8 பின்கள வீரர்கள், 7 மத்தியகள வீரர்கள், 11 முன்கள வீரர்கள் மற்றும் 6 கோல் காப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கின்றது.

அதே போன்று, 2016 ஆம் ஆண்டின் பருவகாலத்திற்கான 19 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான டிவிஷன் - I கால்பந்து தொடரிலும், 2016 ஆம் ஆண்டிற்கான கொத்மலே கிண்ணத் தொடரிலும் சிறப்பான ஆட்டத்தினை வெளிக்காட்டியிருந்த அமான் பைசர், மொஹமட் ஆகிப், அசேல மதுஷான் மற்றும் மொஹமட் சாஜித் ஆகிய வீரர்களும் இந்த 32 வீரர்கள் கொண்ட குழாமில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**32 வீரர்கள் கொண்ட குழாமில் 16 முஸ்லிம் வீரர்கள்**

| இல | பெயர் | பாடசாலையின் பெயர் / கழகம் | நிலை |
|---|---|---|---|
| 1. | மொஹமட் அஷ்ராஸ் | கிண்ணியா மத்திய கல்லூரி | கோல் காப்பாளர் |
| 2. | மொஹமட் றிப்லான் | ஊவா கல்லூரி, பதுளை | கோல் காப்பாளர் |
| 3. | சல்மான் அஹமட் | நூரானியா ம. மகா. வி., மாவனல்லை | முன்கள வீரர் |
| 4. | ஜௌபர் ஹூசைர் | ஸாஹிரா கல்லூரி, புத்தளம் | கோல் காப்பாளர் |
| 5. | அமான் பைசர் | ஹமீட் அல் ஹூசைனி கல்லூரி, கொ. | மத்தியகள வீரர் |
| 6. | ஹனிபா சபீக் சப்ரின் | ஹமீட் அல் ஹூசைனி கல்லூரி, கொ. | கோல் காப்பாளர் |
| 7. | மொஹமட் நாஸிக் | ஸாஹிரா கல்லூரி, மருதானை | பின்கள வீரர் |
| 8. | மொஹமட் ஆகீப் | ஸாஹிரா கல்லூரி, மருதானை | மத்தியகள வீரர் |
| 9. | ஷெஹான் யஷ்மில் | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு | மத்தியகள வீரர் |
| 10. | மொஹமட் ஷபீர் | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு | முன்கள வீரர் |
| 11. | சமத் ரஷ்மித் | புனித ஜோசப் கல்லூரி, மருதானை | மத்தியகள வீரர் |
| 12. | மொஹமட் மௌலானா | லும்பினி கல்லூரி, கொழும்பு | பின்கள வீரர் |
| 13. | மொஹமட் சாஜிட் | மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி, நீர்கொழும்பு | மத்தியகள வீரர் |
| 14. | மொஹமட் முஸ்னி | வெஸ்டர்ன் விளையாட்டு கழகம் | பின்கள வீரர் |
| 15. | மொஹமட் முர்சித் | ஜீலானி முஸ்லிம் கல்லூரி, பானந்துறை | முன்கள வீரர் |
| 16. | மொஹமட் நஜ்மான் | முஸ்லிம் கல்லூரி, களுத்துறை | மத்திய கள வீரர் |

## ஸ்பீட் T-20 சம்பியனாக வகை சூடியது சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ்




நடைபெற்று முடிந்திருக்கும் கிழக்கு மாகாணத்தின் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான ஸ்பீட் T-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஏறாவூர் யங் ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தை 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வீழ்த்திய சாய்ந்த மருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம், தொடரின் சம்பியனாக முடிசூடியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மத்திய வரிசையில் களமிறங்கியிருந்த இஸ்மத் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில், பொன்சேக்கா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம், 18 ஆவது ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கினை அடைந்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் றிழ்வான் 46 பந்துகளில் 3 சிக்சர்கள் மற்றும் 9 பவுண்டறிகள் உள்ளடங்கலாக 76 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்ட நாயகனாக ஹொலி ஹீரோஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் றில்வான் தெரிவாகியிருந்தார்.

## சம்பியனானது சியம்பலாகஸ்கொடுவ மதீனா எப்.சி



குருநாகல் மாவட்டத்தின் முதற்தர உதைப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்ட போட்டித் தொடரொன்று கடந்த 10 ஆம் திகதி விளையாட்டமைச்சர் தயாசிறி ஜயசேகர தலைமையில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மாஹோ லியோ எப்.சி. கழகத்துடன் மோதிய சியம்பலா கஸ்கொடுவ மதீனா எப்.சி. கழகம் 2:0 என்கின்ற கோல் கணக்கில் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. போட்டியின் சிறந்த வீரராக சியம்பலாகஸ்கொடுவ மதீனா எப்.சி. அணியின் இளம் வீரர் ஆர். அப்துல்லாஹ் தெரிவுசெய்யப்பட்டார். இந்நிகழ்வில், இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவர் அனுர டி சில்வா அவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரீமியர் லீக் போட்டிகள் ஜூலை 29இல் ஆரம்பம்



இவ்வருடத்தின் பிரீமியர் லீக் கால்பந்து போட்டிகள் இம் மாதம் 29ஆம் திகதி முதல் நவம்பர் 26ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது. இப்போட்டியில் ஆடுவதற்கு 16 முதற்தர கால்பந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கொழும்பு கால்பந்தாட்ட கழகம், ரினவுன், புளு ஸ்டார் விளையாட்டு கழகம், களுத்துறை விளையாட்டு கழகம், இலங்கை தரைப்படை விளையாட்டு கழகம், நிவ் யங்ஸ் விளையாட்டு கழகம், வென்னப்புவ விளையாட்டு கழகம், இலங்கை வான்படை விளையாட்டு கழகம், இலங்கை கடற்படை விளையாட்டு கழகம், சொலிட் விளையாட்டு கழகம், நிகம்பு யூத் விளையாட்டு கழகம், சுபர் சன் விளையாட்டு கழகம், சொன்டர்ஸ் விளையாட்டு கழகம், கிறிஸ்டல் பெலஸ் விளையாட்டு கழகம், அப்கன்ட்ரி லயன்ஸ் விளையாட்டு கழகம், இலங்கை பொலிஸ் விளையாட்டு கழகம், மொரகஸ்முள்ள விளையாட்டு கழகம் மற்றும் பொலிகன் விளையாட்டு கழகம் ஆகியன இம்முறை பிரீமியர் லீக் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த முறை போட்டிகளில் கலந்து கொண்ட அணிகளான மாத்தறை சிட்டி, ஜாவாலேன், சிவில் பாதுகாப்பு மற்றும் திஹாரிய யூத் ஆகிய கால்பந்து அணிகள் இம்முறை நீக்கப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் முதற்பிரிவில் கால்பந்து சம்பியன்களான மொரகஸ்முள்ள மற்றும் 2ஆம் இடத்தை பிடித்த பொலிகன் விளையாட்டு கழகங்கள் பிரீமியர் லீக் போட்டிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளன.

## மாவனல்லை பத்ரியா சம்பியனானது



கடந்த ஜூலை 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையில் எம்பிலிபிட்டிய வில் நடைபெற்ற சப்ரகமுவா மாகாண விளையாட்டுப்போட்டியில் 18 மற்றும் 20 வயதுப் பிரிவுகளின் கீழான உதைபந்தாட்ட போட்டியில் பங்கு பற்றிய மாவனெல்லை பத்ரியா மத்திய கல்லூரி அணிகள் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டன.



திருகோணமலை கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்துக்காக சகல தளபாடங்களுடன் கூடிய 5 வகுப்பறைகள் மற்றும் அதிபர் அறை உள்ளிட்ட பாடசாலை கட்டிடத் தொகுதியொன்று Mercy Lanka நிறுவனத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd., 39, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.